
கல்கி
KALKI 14-2-82 ரூ 1.00
4 தங்கப் பதக்கங்களை வென்றவர்!

உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...



கரடி பிடிக்கிறார்கள்

ஜாபர்கான்பேட்டைப் பகுதியில் ஒரே பரபரப்பு. ஒரு நாடோடிக் குடும்பம் வைத்திருந்த கரடிகளை, வனவிலங்குத் துறை அதிகாரிகள் பிடித்துச் செல்வது தெரிந்தது. பிடிக்கப்பட்ட கரடிகள் கிண்டி சிறுவர் பூங்காவில் இருப்பது தெரிந்தது. அங்கு சென்று சில அதிகாரிகளுடன் பேசியபோது:

அசோக்நகர், ஜாபர்கான்பேட்டை, மாம்பலம்வாசிகள் தங்கள் பகுதியில் ஒருசிலர் கரடிகளுடன் நடமாடுவதாயும் இதனால் வீண் பீதி நிலவுவதாயும் புகார் செய்ததன் பேரில், வன விலங்குத் துறை அதிகாரிகள் ஜாபர்கான்பேட்டையில் கரடிகளைப் பிடித்தார்கள். கரடிக்குச் சொந்தக்காரர்கள் கரடி லைசென்ஸ்களைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அவை கர்நாடக மாநில அரசு வழங்கியவை. 'தமிழக லைசென்ஸ் எங்கே?' என்று கேட்ட பின், லைசென்சுக்கு விண்ணப்பித்தார்கள். பிடித்த ஐந்து கரடிகளில் இரண்டுக்கு கர்நாடக மாநில லைசென்ஸ்கூட இல்லாததின், அவ்விரு கரடிகளையும் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டு மற்ற மூன்று கரடிகளையும், அவற்றிற்கு உரிய தமிழக லைசென்ஸும் வழங்கி விட்டனர்.





வன விலங்குத் துறை வசம் உள்ள இரண்டு கரடிகளையும் பார்த்தேன். சுமார் இரண்டரை அடி உயரம். மூக்கில் துளையிட்டு மூக்கு கயிறு கட்டப்பட்டுள்ளது. இதனால் எந்தவித ஆக்ரோஷமும் இன்றிச் சாதுவாய் இருக்கின்றன. கூடவே சொந்தக்காரரும் இருந்தார். கர்நாடகாவிலிருந்து அவற்றுக்குரிய லைசென்ஸ் வரக் காத்திருக்கிறார். அவர் சொன்னார்: ''முப்பாட்டன் காலம் தொட்டுக் கரடிகளை வைத்துத்தான் ஜீவனம். தெருவில் வித்தைகள் காட்டுவோம். சினிமா ஷூட்டிங்குக்குத் தருவோம்; கரடி முடிகள் வைத்துத் தாயத்து தயாரித்து விற்போம். கரடிகள் எங்கள் குழந்தைகள் போல.''


கொசுறு 1: சில கிராமத்து மக்கள் தமது கிராமத்தில் பிடிக்கப்படும் சில விலங்குகளைக் கிண்டி பூங்காவுக்கு அன்பளிப்பாகத் தருவதுண்டாம். அப்படிச் சமீபத்தில் கிடைத்தவை: முள்ளம்பன்றி, எறும்புத் தின்னி.

கொசுறு 2: கிண்டி பூங்காவுக்கு வரும் சில குறும்புக்கார இளைஞர்கள், தாம் பாதி பிடித்துவிட்டு, மீதி சிகரெட்டைக் குரங்கு, கரடி இவற்றுக்குத் தருவதால் அவற்றின் உடல்நிலை பாதிக்கப்படுகிறதாம். —ஜூலி

புகைப்படம்: சுபா

மகாராஷ்டிர அமைச்சரவையில் ஒரு தமிழர்

ம. வி. ராமானுஜம்



ஜனவரி 25ம் தேதி டீ.வி.யில் செய்தி களைக் கேட்டுக் கொண்டிருந்த பம்பாய்த் தமிழர்கள் ''வைத்தியநாதன் சுப்பிரமணியம்'' என்ற பெயர் காதிலே விழுந்ததும் உற்சாகத்துடன் ஒரு துள்ளுத் துள்ளினர்கள். காரணம், அந்தப் பெயர் புதிய மகாஷ்டிர அமைச்சரவையில் இடம் பெற்றதுதான்! மராட்டிய மாநில அமைச்சரவையில் முதன் முதலாக ஒரு தமிழர்! பம்பாய் வாசிகள் அடைந்த அந்தப் பெரு மகிழ்ச்சி சீக்கிரமே தமிழ்கூறு நல்லுலகமெங்கும் பரவியது.

திரு வி. சுப்பிரமணியம் இந்த உயர் கௌரவத்தை அடைந்தது. பார்க்கப்போனல் அப்படி யொன்றும் அதிசயமல்ல. இப்பதவியில் அமர முற்றிலும் தகுதி உடையவர் தான் அவர். பம்பாய்த் தமிழர்கள் மட்டுமின்றி,—மராட்டியர், குஜராத்தியர் மற்றும் வேறு மாநிலங்களிலிருந்து பம்பாய் வந்து குடியேறியுள்ள பலப் பல பிரிவினரும் அவரிடம் பேரன்பு கொண்டிருக்கின்றனர் எனில் அதற்குத் தக்க காரணங்கள் உண்டு. மகாராஷ்டிர அரசில் ஐ. ஏ. எஸ். அதிகாரியாகப் பணியாற்றிய அவர் அதற்குரிய எல்லா உயர் பண்புகளையும் பெற்றிருந்தார். ஆட்சிகள்பல மாறிய போதிலும் அதிகாரத்துக்கு வந்த அனைவருமே சுப்பிரமணியம் ஒரு நேர்மையாளர், திறமைமிக்கவர், விசுவாசமானவர் சுறு சுறுப்பானவர், அவரை நம்பலாம் எனக் கண்டனர். தாம் உத்தியோகம் பார்க்கும் துறையில் அரசு உருவாக்கும் எந்த ஒரு கொள்கையானாலும் அதன் சாதக பாதகங்களை எடுத்து விளக்க வேண்டிய தமது கடமையை மறவாமல்நிறைவேற்றிய சுப்பிரமணியம், அதன் பிறகு அந்தக் கொள்கை அரசால் ஏற்கப்பட்டு விட்டால் அதனை விசுவாசத்தோடும் திறம்படவும் அமல்படுத்துவதில் தமது ஆற்றலைக் காட்டுவார்.

அவருடைய கடமை உணர்வுக்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி: வீடு கட்டுகிற கூட்டுறவு சங்கம் ஒன்றின் பிரச்னைகளை விவாதிக்க விரும்பிய சிலரை நேரம் குறித்து வரச் சொல்லியிருந்தார் சுப்பிரமணியம். அந்தச் சிலரில் ஆர். வி. மூர்த்தி என்ற பிரபல பத்திரிகையாளரும் ஒருவர். விவாதம் நடந்து கொண்டிருந்தபோது சுப்பிரமணியத்துக்கு ஒரு டெலிஃபோன் வந்தது. ஃபோன் பேசி முடித்துவிட்டு விவாதத்தில் தொடர்ந்து ஈடுபட்டார். தேவையான அறிவுரைகளையும் வழங்கினர். கூட்டம் முடிந்து அனைவரும் சென்ற பின் கடைசியாக விடைபெற நின்ற ஆர். வி. மூர்த்தியிடம்- இனியும் அடக்கிக் கொள்ள முடியாமல் சுப்பிரமணியம் சொன்னர்: ''போன் பேசியது என் மனைவி. என் மகனுக்கு ஒரு விபத்து நேர்ந்திருக்கிறது. நீரில் மூழ்கி இறந்து விட்டானும். நான் அவசரமாகக் கிளம்புகிறேன்!'' துயரைக்



✖ வருவாய்த்துறை காரியதரிசியுடன் வயல் வெளிகளைப் பார்வையிடுகிறார்

✖ சுப்ரமணியம், ராமானுஜம், முதல்மந்திரி எஸ். பி. சவான்





✖ பகேவியுடன்

கட்டுப்படுத்திக் கொண்டு இப்படிச் சொல்லி விட்டு விரைந்தார் சுப்பிரமணியம். இன்றைக்கும் இந்தச் சம்பவத்தை நினைவுகூர்ந்தால் தமக்கு மெய்சிலிர்ப்பதாகக் கூறுகிறார் ஆர். வி. மூர்த்தி.

சில ஆண்டுகளுக்கு முன் மகாராஷ்டிரத்தில் பெரிய வறட்சி நிலை தோன்றியது. மக்களின் துன்பம் சொல்லி மாளாது. 30, 40 ஏக்கர் நிலமுடைய மிராசுதார்கள் கூட அரசின் வறட்சி நிவாரண உதவிகளுக்குக் கையேந்தினார்கள். சாலைக்குப் போடக் கல்லுடைத்து நாட் கூலி பெற்றார்கள்! அச்சமயம் சுப்பிரமணியத்துக்கு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு இருக்கிற நிதி வசதிகளைத் திறம்படப் பயன்படுத்தி மக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் தரும் பெரும் பொறுப்பு வழங்கப்பட்டது. இத்தருணத்தில் அவர் அடைந்த அனுபவங்களைப் பின்னால் ஒரு நூலாக எழுதி பம்பாய் பல்கலைக்கழகத்திடம் சமர்ப்பித்தார். பல்கலைக் கழகம் அதனை ஏற்று சுப்பிரமணியத்துக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. வறண்ட பூமி (Parched Earth) என்ற தலைப்புடைய இந்த நூல் ஐ. நா. சபையின் கவனத்தையும் கவர்ந்தது. உலகில் எங்கு



✖ கட்சி ஊழியர்களுடன் எம்.எல்.ஏ.

வறட்சி நிவாரணம் நடைபெற்றாலும் அங்கே நிர்வாகிகள் இந்த நூலைப் படித்துப் பயனடையலாம் என ஐ. நா. சபை பொரிக செய்தது.

சுப்பிரமணியம் அரசாங்க ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றதும் பல தனியார் நிறுவனங்கள் அவருக்குப் போட்டி போட்டுக் கொண்டு வேலை தர முன்வந்ததில் வியப்பில்லை. ஆனால் அவர் மகாராஷ்டிரத்தின் கிராமப் பகுதிகளில் ஏழைகளுக்குத் தம்மால் ஏதும் உதவ முடியுமானால் அத்தகைய பணியையே மேற்கொள்ள விரும்புவதாய்த் தெரிவித்தார். மபத்லால் நிறுவனம் சில கிராமங்களைச் சுவீகரித்துக் கொண்டு அங்கே மருத்துவ உதவியையும் அபிவிருத்தித் திட்டங்களையும் அமல்படுத்த முன்வந்தபோது அதில் உற்சாகமுடன் அவர்கள் அழைப்பை ஏற்று ஈடுபட்டார். இந்த வேலையையும் தாம் மக்களால் எம். எல். ஏ.வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் துறந்து விட்டார். ஒரு சமயத்தில் ஒரு காரியத்தில் ஈடுபட்டு அதைச் சிறப்பாகச் செய்தால் போதும் என்ற கொள்கை உடையவர் சுப்பிரமணியம்.

காந்தியச் செம்மலான இவர் நெடுங்காலமாகவே கதர் அணிபவர். தோற்றத்தால் மட்டுமின்றி வாழ்க்கையையும் மெய்

யாலும் எளிமையாக அமைத்துக் கொண்ட வர். மகாராஷ்டிர மாநில கதர் கிராமத் தொழில் வாரியத்தின் இயக்குனராகப் பணியாற்றியவர். ஏறத் தாழ ஆறாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட பம்பாய் ஷண்முகானந்த சபாவின் தலைவரான இவர் அதன் நிர்வாகக் குழுக் கூட்டங்களுக்கு வந்து விட்டு இரவு பதினொரு மணிக்கு மேல் பஸ்ஸோ ரயிலோ பிடித்து வீடு திரும்புவார்!

மாதுங்கா தொகுதி எம். எல். ஏ. ஆன பிறகு மராட்டிய மாநில திட்டக் குழுச் செயலராக விளங்கினார். பம்பாய் நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்துக்காக உலக வங்கியிடம் கடன் உதவி பெறுவதில் வெற்றி கண்டார். மாநில, 'மாவட்டத் திட்டங்கள் பலவற்றை மகாராஷ்டிர அரசுக்குத் தீட்டிக் கொடுத்திருக்கிறார்.

தாய் மொழியில் பாண்டித்தியம் தவிர ஆங்கிலம், மராத்தி, குஜராத்தி, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசவும் எழுதவும் தெரிந்தவர். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பம்பாய் விஜயத்தின்போது சிவாஜி பார்க் மைதானத்தில் நடந்த கூட்டத்தில் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பெருமையையும் இந்து மதத்தின் அருமைகளையும் சுப்பிரமணியம் மராட்டிய மொழியில் எடுத்துரைத்து ஆற்றிய உரையைக் கேட்ட மராத்திய மக்கள் இன்னும் அது பற்றி வாய்க்கு வாய் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அறுபது வயதான சுப்பிரமணியத்தின் உடல் ஆரோக்கியத்தைக் காத்துத் தருவது நாள் தவறாமல் அவர் அப்யசிக்கும் யோகாசனம்தான்.

தற்போது அமைச்சரவையில் மிக முக்கியமான பொறுப்புக்களை ஏற்றுள்ளார் சுப்பிரமணியம். நிதி, திட்டமிடுதல், அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகம் ஆகியன.

அவர் ஏற்கனவே மனிதாபிமானத்துடன் நிறைவேற்றியுள்ள அரும்பெரும் காரியங்களுடன் புதிய சாதனைகளையும் நிகழ்த்தப் போகிறார் என்பதில் பம்பாய்த் தமிழர்களுக்கு ஐயமே இல்லை.

தமிழாக்கம்: குட்டி கிருஷ்ணன்



ஆன்றோர் வாக்கு

இவ்வுலகத்தில் எங்கும் கடவுள் மயமாய் யாதொரு துன்பமுமின்றி இன்ப மயமாய் இருப்பதைக் காணவேண்டும் என்பதே யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் நோக்கமாகும். அங்ஙனம் காண்பதே முக்தி.

—பாரதியார்

உறுதி நிலைபெறுதற்குப் பல திற முறைகளுண்டு. அவைகளில் எவரும் எளிதில் ஆற்றக் கூடியன இரண்டு. ஒன்று நோன்பு; மற்றொன்று வழிபாடு. இவ்விரண்டினுள் பிற முறைகள் யாவும் அடங்கும். —திரு.வி.க.

'ஜஹா ராம தைஹ வஹ காம நஹி' எங்கே ராமன் இருக்கிறானோ அங்கே காமன் இடையாது. காமன் உள்ள இடத்தில் நிச்சயமாக ராமன் இருக்க மாட்டான். காரணம் தகப்பனிடத்தில் பிள்ளைக்கு மிகுந்த பக்தி''-துளசிதாஸர் இப்படி வேடிக்கையாகச் சொன்னார்!

லட்சுமி இருக்கிற இடத்தில் சரஸ்வதி இருக்க மாட்டாள். காரணம் அவர்கள் இரண்டு பேரும் மாமியார் மாட்டுப் பெண்கள். ஆகையால் ஒருவருக்கொருவர் சண்டையினால் அப்படி இருக்க மாட்டார்கள் என்று சொல்வர். ஆனால் இங்கே பித்ரு பக்தியினால் ராமன் இருக்கிற இடத்தில் காமன் இருக்க மாட்டான் என்று சொல்கிறார்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

என் செயலன்று. ஈசன் எங்கெல்லாம் கொண்டு சென்றானோ அங்கெல்லாம் போய் மீண்டேன். என் மனநிலையில் ஒரு மாறுபாடு உண்டாயிருக்கிறது. இனிமேல் எனக்கென்று ஒரு சித்தம் இடையாது; ஈசன் எப்படியெல்லாம் கட்டளை இடுகிறானோ அப்படியெல்லாம் பதுமை போலப் போவேன். அவன் ஏதேது செய்விக்கிறானோ, அதையெல்லாம் நான் யந்திரம் போலச் செய்வேன்.


—அரவிந்தர்

இரவில் தூங்கப்போகும்போது பகலில் செய்த வேலைகளை நோட்டமிட வேண்டும்.

—கஸ்ஸாலீ



ஹலோ!.. ஹலோ!.. ஸ்டீபன் சார்!
ஹலோ!.. தபால், டெலிபோன்
கட்டணங்களை எக்கச்சக்கமா
ஏத்திட்டீங்களே!.. ஹலோ!..
ஹலோ!..
ஹலோ!
ஸ்டீபன்



மெஜாரிடி
ஆடம்பர வரவேற்பு தப்பு..
அரசு இயந்திரம் பயன்படுத்துவது தப்பு
வரவேற்பு வளைவுகள் தப்பு..
ஆளுயர மாலைகள் தப்பு..


மகிழ்ச்சி

ஹைதராபாத்துக்கு விஜயம் செய்த ராஜீவ் காந்தி அஞ்சையாவுக்கு ஒரு தர்மசங்கட நிலையைத் தோற்றுவித்து அழ வைத்து விட்டார். ராஜீவின் பிணக்கம் - இணக்கம்; கோபம் - சமாதானம்; அஞ்சையாவின் துயரம் - சரணாகதி; சமரசம் - சந்தோஷம் என்று ஒரே நாளில் ஓர் உணர்ச்சி மயமான நாடகம் நடந்து சுபமாக முடிந்தது.

ஒரு எம். பி. ஒரு மாநில முதல்வரை இப்படியா ஆட்டிப் படைப்பது என்ற கோபத்தையும் அஞ்சையாவைப் பார்த்து நாடு சிரிக்கப் பண்ணிவிட்டாரே என்ற பரிதாபத்தையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் ராஜீவின் நோக்கத்தில் தவறு இல்லை எனக் காண்போம்.

கட்சிவேறு, ஆட்சி வேறு என்ற நிலை மாறி, ஆட்சி அதிகாரங்களையும் வரிப்பணத்தையும் பிரசார இயந்திரத்தையும் தாராளமாகக் கட்சிக்காகப் பயன்படுத்திக் கொள்கிற போக்கு நாளுக்கு நாள் வளர்ந்து ஓர் உச்ச கட்டத்தை அடைந்திருக்கும் போது ராஜீவின் இந்தப் போக்கு ஜனநாயகப் பிரியர்களின் வயிற்றில் பால் வார்க்கிறது. அஞ்சையாவை அவமானப்படுத்த அவசியமின்றியே இதை ராஜீவ் சாதித்திருக்கலாம் என்பது ஒரு புறமிருக்க, அ. இ. ரே. மைக்குகளை அவர் நீக்கியதும் மலி காமிராக்காரர்களை ஒதுக்கியதும் அரசாங்க இயந்திரத்தைப் பயன்படுத்தித் தமக்கு அதி ஆடம்பர வரவேற்பு அளிப்பதைக் கடிந்து கொண்டதும் வரவேற்கப் படவேண்டிய நல்ல திருப்பங்கள்.

ஆனால் இத்தகைய வெளித்தோற்றங்களை மட்டும் கண்டித்துத் திருத்த முயன்றால் போதாது. கட்டி, உள்ளுக்குள் புரையோடிப் போனது. வெளிப் பார்வைக்குத் தெரிய வராமலே அரசு இயந்திரத்தைப் பயன்படுத்திக் கட்சியைப் பல்வேறு விதங்களில் வளர்த்து, பலப்படுத்த நடக்கும் காரியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ராஜீவ் முன் வரவேண்டும்.





ரொம்ப மகிழ்ச்சி!

பாக் அதிபர் ஜியாவின் போர் மறுப்பு ஒப்பந்த யோசனையை முதலில் ஏளனம் செய்து ஒதுக்கிய பிரதமர் இந்திரா காந்தி, விரைவிலேயே மனம் மாறிப் பேச்சு வார்த்தைகளுக்கு வழி வகுத்தார். கடைசியில் பாக் அதிபரைவிட ஒரு படி மேலே போய், 'போர் மறுப்பு ஒப்பந்தம் என்ன, நட்புறவு - ஒத்துழைப்பு ஒப்பந்தத்துக்கே தயார்' என்று அறிவித்தார். பிரதமரின் சிந்தனையில் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்ட இந்தப் பெரிய மாறுதலை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

அண்மையில் நடந்த ஆகாஷாஹி - நரசிம்மராவ் பேச்சு வார்த்தைகளின் விளைவாக, போர் மறுப்பு ஒப்பந்தம் ஏற்பட்டுவிடவில்லைதான். அதற்கு நீண்ட கால முயற்சி தேவை. ஆனால் விரோத பாவம் குறைந்து நட்பு பாவம் மேலோங்கி இருப்பதே பெரிய சாதனை.

ருஷ்ய ஆக்கிரமிப்புக்குப் பயந்து அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் ஏராளமான ஆயுதங்களைப் பெறுவதும் அதனால் நமக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதும் முக்கியமே. அதைவிட முக்கியம் நமது அண்டை நாட்டுடன் போர் மூளாமல் தவிர்த்து விடுவதுதான்.

பாரதப்பிரதமர் இரு அம்சங்களிலுமே கருத்துச் செலுத்தி நமது ஆமோதிப்பைப் பெறுகிறார்.





1982 பிப்ரவரி 14
துன்மதி மாசி 2
மலர் : 40 இதழ் : 29

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

5

அத்தை ஜகதா தன் வயதையும் அதனால் ஏற்பட்ட இயலாமையையும் அதிகமாகவே உணரத் தொடங்கி யிருந்தாள். சில நாட்களாக அவளால் தோட்ட வேலைக்கு வாரம் ஒரு முறை வந்து உதவும் மாரப்பனுடன் கூடவே அந்தப் பெரிய தோட்டம் முழுவதும் வளையவர முடியவில்லை.

''மல்லிகைச் செடியைச் சுத்தி இன்னும் கொஞ்சம் ஆழமா மண்ணெடுத்தால் நல்லா இருக்கும்.''

''ஈரைப் பாத்திகளை ஒரே அளவா வெட்டிச் சீர் செய்யப்பா. ஒண்ணு சிறிசா ஒண்ணு பெரிசா இருந்தா எனக்குப் புடிக்காது.''

''அவரைக் கொடியை இன்னும் கொஞ்சம் ஒசத்திக் கட்டு.... புடலே நுனியில் கல்லைக் கட்டிவிடு. அப்பத்தான் அது நெளிஞ்சு வளையாம ஒரே சீரா தொங்கும்.''

''இந்த வாட்டி அவரை ரொம்பப் பிஞ்சு வைக்கலே... ஏன்?...

''மாரப்பா! டவுனுக்குப் போனா மறக்காம விவசாய ஆபீசிலே போய் எருக்களைப் பத்தி இன்னும் ஏதாச்சும் புதுச் சங்கதி இருந்தா விசாரிச்சுக்கிட்டு வா.. பூச்சி மருந்து விவரத்தைப் பத்தியும் ஞாபகம் வச்சுக்கோ.''

''முருங்கை மரத்திலே இந்த வருஷம் கம்பளிப் பூச்சி அண்டாம பாதுகாக்கணும். நம்ப மரங்களுடைய காய்களுக்குப் பூதலூர் மார்க்கெட்டில் ஏகக் கிராக்கி. இந்த நாலு மரத்துக் காய்களை வித்தாலே கணிசமாப் பணம் தேறும். ஆனால் மாரப்பா! உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்குக் கூட மிஞ்சாது என்பாங்க. ரொம்பச் சரியான பேச்சு....'' சொல்லிக் கொண்டே வளைய வந்து கொண்டிருந்தாள். கிணற்று நீரை பம்பு செட்டு இயந்திரம் இறைக்கக் கால்வாய் வழியே சலசலத்துக் கொண்டு நாலா பக்கமும் பயிர்களுக்குப் பாய ஓடும் காட்சியை ரசித்தபடி அவள் மெதுவாகச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

சுரீர் என்று காலில் என்னவோ குத்த ''ஐயோ, அம்மா!''என்று வேதனை தானா அவள் அலறி விட்டாள்.

மண்வெட்டியால் மாமரத்தைச் சுற்றிலும் நீர் பாய்ச்ச மண்ணை வெட்டிக் கொண்டிருந்த மாரப்பன் அதை அப்படியே போட்டுவிட்டு ஓடி வந்தான்.

''என்னம்மா? என்ன ஆச்சு?''அனுதாபத்துடன் கேட்டவன் அவளது வலது பாதத்திலிருந்து ரத்தம் குபுகுபுவென்று வெளி வருவதைக் கண்டு பயந்து விட்டான்.

தன் முண்டாசை அவிழ்த்துச் சட்டென்று காயத்தின் மீது போட்டு அழுத்திக் காலைச்சுற்றிக் கட்டிவிட்டு மூச்சிரைக்க வீட்டை நோக்கி ஓடிவந்தான்.

அன்று சந்தியாவின் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை நாள். முதல் நாள் நடந்த ஆண்டு விழாவுக்காக மாணவிகளுக்குச் சலுகை தந்து தலைவி அளித்த ஓய்வு நாள்.

சாவகாசமாக எழுந்து குளித்து விட்டு அமைதியாகக் காரியங்களைக் கவனிக்கச் சமையல் அறைக்குள் புகுந்து விட்டிருந்தாள் அவள்.

அத்தையம்மாள் தோட்டத்தைச் சுற்றி மேற்பார்வை செய்து விட்டு நெற்றியில் பொடித்த வியர்வை காதோரம் வழிய மூச்சிரைக்கத் தள்ளாடிக் கொண்டு வருவாள். விடியற்காலை தோட்டத்துக்குள் புகுந்தவன் மாரப்பன். சிறிது நேரத்துக்கு முன்புதான் ஒரு தார்வாழையையும், இரண்டு கூடை சுத்தரிப் பிஞ்சுகளையும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனான். ஒரு பச்சை மிளகாயைக் கூட தவறி விட்டு வைக்காது பார்த்துப் பார்த்து எல்லாவற்றையும் மாரப்பன் உதவியோடு சேகரித்து விடுவாள் அத்தை. உடல் அலுப்பைப் பாராது—வெய்யிலைப் பற்றிச் சிந்திக்காது தோட்டம் முழுவதும் சுற்றிக் கொண்டிருப்பாள். சொன்னால் கேட்பதில்லை... எண்ணியபடி காலை உணவுக்காக உப்புமா தயாரித்து இறக்கி மேடை மீது வைத்து விட்டு,



சட்டினிக்குத் தேங்காயைத் துருவ ஆரம்பித்தாள்.

மாரப்பன் வாயிற்படி அருகே ஓடிவந்து "சின்னம்மா!" என்று கூவியதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"அத்தையம்மா காலில் ஏதோ குத்திடுச்சு. ரத்தம் கொட கொடன்னு ஊத்திக்கிட்டிருக்கு." அவன் முடிக்குமுன்வேலையை அப்படியே போட்டுவிட்டுப் பதற்றமாக அவன் பின்னால் ஓடினாள்.

கத்திரிப் பாத்தி அருகே மாரப்பனது முண்டாசுத் துணி அகற்றப்பட்ட பாதத்தைத் தன் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு மண் தரையில் உட்கார்ந்திருந்தாள் அத்தை.

"ஒண்ணுமில்லே. ஒரு பாட்டில் ஓடு கிடந்திருக்கு. மிதிச்சுட்டேன். நல்லா... பேச முடியாது வேதனையுடன் தினறினாள்.

முண்டாசுத் துணி நனைந்து ரத்தம் அவளது கை மீது கறையாக்கி விட்டிருப்பதைக் கண்ட சந்தியா பதறிப் போனாள்.

"இப்படி என்னைப் பிடிச்சுக்குங்க. முதலிலே வீட்டுக்குள்ளே போவோம். பிறகு டாக்டரைக் கூட்டி வரச் செய்யலாம்." சொன்னபடியே அவள் தன் கையை நீட்டி அத்தையம்மாளை இழுத்து நிறுத்தினாள்.


வலது காலை நொண்டிக் கொண்டு கைத் தாங்கலாக உள்ளே வந்த ஜகதா மாரப்பன் தூசி தட்டி எடுத்துப் போட்ட நாற்காலியில் கூடத்தில் உட்கார்ந்தாள். அருகிலிருந்த ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக் காயம் பட்ட காலை அதில் தூக்கி வைத்து விட்டுக்கையைக் கழுவிக் கொண்டு உள்ளே விரைந்தாள் சந்தியா. காலையிலிருந்து பச்சைத் தண்ணீரைக் கூடப் பல்லில் விடாது அத்தை தோட்டத்தைச் சுற்றியிருக்கிறாள். ஏராளமான ரத்தம் உடம்பிலிருந்து வெளியேறிவிட்டிருக்கிறது என்ற கவலையில் சர்க்கரையை அதிகமாகப் போட்டுக் கலக்கிய காப்பியை விரைவில் எடுத்துக் கொண்டு வந்து உபசரித்தாள்.

அந்தக் கிராமத்தில் வெகு காலமாக வைத்தியத் தொழில் செய்து கொண்டிருக்கும் டாக்டர் செந்தில்நாதன், மகா சிடுமூஞ்சி. வயிற்று வலிக்காரர். அவசரத்துக்குச் சட்டென்று ஓடி வந்துவிட மாட்டார். காலை பூஜையை முடித்துக் கொண்டு அவர் வீட்டு வாயில் உள்ள கிளினிக்குக்குள் வந்து உட்காரவே பத்து மணியாகி விடும். அது சமயம் யாராவது வீட்டுக்கு வந்து பார்க்கும்படி அவரை நிர்ப்பந்தித்தால் நாற்காலியை விட்டு நகர மாட்டார். "இவங்களையெல்லாம் யார் பார்க்கறது?" என்று வாயில் பந்தலில் வரிசையாகப் பெஞ்சுகளில் உட்கார்ந்திருக்கும் நோயாளிக் கூட்டத்தை எரிச்சலுடன் சுட்டிக் காட்டுவார். பட்டணத்தில் பென்ஸ் காரில் பறக்க வேண்டியவர். தந்தை விட்டுப் போன சொத்துக்களை ஆண்டு அனுபவிக்கக் கிராமத்தில் தங்கிவிட நேர்ந்ததை நினைத்து நொந்து எரிச்சல் பட்டுக் கொண்டிருப்பார். அவரைப் போய்க் கூப்பிட்டனுப்பினால் உடனடியாக வருவாரா? கவலைப்பட்டாள் சந்தியா. "நம்ப செந்தில் அய்யாவைக் கையோடு எப்படியாவது கூட்டிக்கிட்டு வந்துடு மாரப்பா.." என்று குழைவான குரலில் உத்தர விட்டாள்.

"நம்ப செந்தில் அய்யாவைச் சட்டுனு கூப்பிட்டுக்கிட்டுவரது சாத்யப்படாது. அதனாலே எனக்கு ஒரு யோசனை தோணுது."—

மாரப்பன் தலையைச் சொறிந்தான்.

"சொல்லு சட்டுனு... எனக்குக் கையும் ஓடலை காலும் ஓடலை..... இந்த அத்தைக்கு ஏற்கனவே உடம்பு ரொம்பக் கெட்டிருக்குன்னு பூதலூர் டாக்டர் சொல்லியிருக்கிறார். மருந்துசாப்பிடாம ரொம்பவே இன்னும் கெடுத்துக் கிட்டிருக்



காங்க. அதனுல இந்தக் காயத்தை உடனுக் குடன் கவனிச்சாகனும். வேறே என்ன செய்யலாம்னு சொல்லு.— வண்டியிலே வைச்சு டாக்டரோட கிளினிக்குக்கு எடுத்துக் கிட்டுப் போகலாம்னு சொல்றியா?'' என்று கவலையுடன் கேட்டான்.

''அந்தத் தொந்தரவெல்லாம் எதுக்கு? கடைத் தெருவிலே புதுசா கிளினிக் தொறந்திருக்காரே ஒரு புது டாக்டர்... நிதமும் பூதலூரிலிருந்து வராரே...அவரைப் போய்க் கூட்டியாரேன்.''

சந்தியாவின் நெஞ்சு படபடத்தது. அவன் யாரைக் குறிப்பிடுகிருன் என்பதைப் புரிந்து கொண்டாள்.

''காலை வேளையில் அவர் இந்தச் சமயம் இருப்பாரோ என்னவோ?''

''அவர் இருப்பார்னு எனக்குத் தெரியும். காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது வரைன்னு போர்டிலே எழுதியிருக்கும்மா. நம்ப செந்தில் டாக்டர் மேலே கோவிச்சுக்கினு ரொம்ப பேர் இந்தப் பக்கம் திரும்பிட்டதாகப் பேசிக்கிருங்க... இந்தச் சிடுசிடு கிழவர் கிட்ட கிராமத்து ஜனங்கள் எத்தனை காலம் துன்பப் படுவாங்க சொல்லுங்க....''

''ஒரு டாக்டர் பார்க்கிற கேசை இன்னெரு டாக்டர் அவர் உத்தரவு இல்லாமல் பார்க்கக் கூடாதுன்னு அவங்களுக்குள்ளேயே ஒரு சட்டமாச்சே....''

''பார்க்க நேரமில்லே. புதுசா ஒருத்தன் போர்டு போட்டிருக்கான். அங்கே போங்கன்னு செந்தில் டாக்டரே துரத்தருராமே! வேற வழியில்லாத மக்களுக்கு புது டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டியது கடமை இல்லையா?''

''சரி... முதலில் செந்தில் அய்யாவைக் கூப்பிடு. அவர் வர மறுத்தால் இவரை ஓடிக் கூட்டிக்கிட்டு வா... நேரமாச்சு.'' உசுப்பினுள்.

''பத்து நிமிஷத்திலே வந்துடறேன்.'' மாரப்பன் வாயிலுக்கு ஓடினுன்.

கொடியில் கிடந்த துண்டை எடுத்து நீரில் நனைத்து அத்தையின் முகத்தைத் துடைத்துவிட்டாள். முடியைச்சீராக்கினுள். புடவை மீது படிந்து கிடந்த மண்ணைத் தட்டிவிட்டுக் கூடத்தைப் பெருக்கி ஒழுங்கு படுத்தினுள். முற்றத்துக் குறட்டின் மீது செம்பில் தண்ணீரும் அருகே சோப்புப் பெட்டியும் எடுத்து வைத்துவிட்டு வாயில் பக்கம் ஆவலுடன் எட்டிப் பார்த்தாள். நேரம் யுகமாகி விட்டது போல் கவலையில் அவள் மனம் கனத்தது.

சிறிது பொழுதில் மோட்டார்சைக்கிளின் படபட ஓசை வாசலில் கேட்டது.

சுத்தமான வெள்ளை உடுப்பில் கச்சிதமாகத் தெரிந்த டாக்டர் கிரிதரன் இறங்கிப் பின்னுலிருந்த மருத்துவப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

சந்தியாவைக் கண்டு ஒரு கணம் பிரமித்துப் போனுன்.

''நந்தவனம் வீட்டிலிருக்கும் அத்தையம்மா—காலில் பீங்கான் ஓடு—குத்தி ரத்தம் கொட்டி மயக்கமாகிட்டாங்க என்ருன். உங்கள் வீட்டுக்கு வரப்போகிறேன் என்று துளியும் எதிர்பார்க்கவில்லை.'' புன்முறுவலுடன் கூறிவிட்டுப் பெட்டியை ஊஞ்சல் மீது வைத்தான்.

''இந்த வீட்டுக்கு நந்தவனம் வீடுன்னு ஒரு பேர் உண்டு. மாரப்பன், வாத்தியார் அம்மாவின் வீடுன்னு சொல்லியிருந்தா ஒருசமயம் உங்களுக்குப் புரிஞ்சிருக்கும்... வாங்க... அத்தையைப் பாருங்க. இப்படிக் காலை வேளையிலே ஒரு பெரிய காயத்தைப் பண்ணிக்கிட்டு நிப்பாங்களா?''

''எதிர்பாராமல் நடக்கிறதினுலேதான் இதுக்கெல்லாம் விபத்துன்னு பேர் வெச்சிருக்காங்க....'' கூறிக் கொண்டே துரிதமாகச் செயல் பட்டான். அவன் எண்ணிய படி காயம் மிகவும் பெரியதாக இருக்கவில்லை. ஆழமாக இருந்தது. அதனுல் அத்தனை ரத்தம் வெளியேற்றம் என்று கண்டுகொண்டு காயத்தைச் சுத்தப்படுத்திப் பஞ்சு வைத்து பிளாஸ்திரி போட்டு ஒட்டினுன். நடக்க முயலும் போது காயத்தின்மீது அழுத்தப்படாதிருக்கச் சுத்தமான வெள்ளைத் துணியினுல் கட்டுப் போட்டான்.

பின்னர் சீழ் கட்டாதிருக்கவும் வலிப்பு நோய் வராதிருக்கவும் ஊசிகள் போட்டு மாத்திரைகளைக்கொடுத்து விட்டுப்பெட்டியை மூடினுன். மாரப்பன் கைமேல் ஊற்றிய செம்பு நீரில் கைகளைக் கழுவிக்கொண்டு தன் கைக்குட்டையாலேயே துடைத்துக் கொண்டு அவன் கிளம்ப ஆயத்தமானுன்.



வலியே தெரியாது விரல்களால் மெல்லக் காயத்தைத் தொட்டு மருந்து போட்டது அத்தைக்கு மிகவும் பிடித்திருந்தது. அவனது பணிவும் குழைவும் மனத்துக்குஇதமாக இருந்தன. இத்தனை நேரம் டாக்டர் செந்திலாக இருந்தால் வீடு இரண்டு பட்டிருக்கும். அவளிடம் எப்படி அதட்டிப் பேசியிருப்பார்.. சிடுசிடுத்திருப்பார்... சின்ன வயதானாலும் இந்தப் பையனுக்கு எத்தனை 'பொறுமை? ஜகதா மனத்துக்குள்ளேயே ஒப்பிட்டுப் பாராட்டினாள்.

''இருங்கோ தாகத்துக்குச் சாப்பிட்டுட்டுப் போங்க...'' கூறிவிட்டு, ''சந்தியா சீக்கிரம் வாம்மா...'' என்று குரல் கொடுத்தாள்.

அதற்குள் சந்தியா காப்பி டம்ளருடன் சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''பூதனூர் ஓட்டலில் காலையில் காப்பி சாப்பிட்டிருப்பீங்க. பரவாயில்லே. எங்க வீட்டுக் காப்பியையும் கொஞ்சம் ருசித்துப் பாருங்க....'' வேடிக்கையாகக் கூறியபடி சந்தியா டம்ளரை ஊஞ்சல் மீது ஒரு பக்கம் வைத்தாள்.

அதுவரை பின் வராந்தாவில் கட்டப்பட்டிருந்த் ஸாம்ஸன் ஓயாது குரைத்துக் கொண்டிருந்ததைக் கவனிக்காதவன் போல் இருந்த ஸ்ரீதரன் சட்டென்று கேட்டான். ''நாய் வச்சிருக்கீங்களா?'' — கேட்டபடி காப்பியை வேகமாகப் பருகினான்.

''யாராவது வரும்போது கட்டிப் போட்டு வைப்போம். இங்கே அது வராது. பயப் படாதீங்க.'' புன்முறுவலித்தாள் சந்தியா.

''நாயைக் கட்டிப் போடற பழக்கம் எனக்குப் பிடிக்காத சங்கதி. அவிழ்த்து விடுங்கோ. எனக்குப் பயமில்லே. தயவு செய்து அதை நாள் முழுவதும் பிறருக்காகக் கட்டிப் போடாதீங்க. எனக்குக் கேட்க வருத்தமா இருக்கு'' என்றான் கனிவான குரலில்.

சந்தியாவுக்கு மிக்க வியப்பு. அவர்கள் வீட்டுக்கு வந்தவர்களில் இதுவரை யாரும் அப்படிச் சொன்னதில்லே. ஸாம்சனைப்பார்க்கு முன்னே அத்தனை பேரும் அலறி அடித்துக் கொண்டனர்.

''மேலே வந்து விழும் டாக்டர். உங்க உடை அழுக்காகிவிடுமென்று பயப்படுகிறேன்.''

''நான் பயப்படலே. அவிழ்த்துவிடுங்கோ'' வற்புறுத்தலாக அவன் கூறினான்.

சந்தியா தயக்கத்துடன் பின் பக்கம் சென்று சங்கிலியுடன் போராடிக் கொண்டிருந்த ஸாம்சனை விடுவித்தாள். ஒரே பாய்ச்சலில் உள்ளே வந்த நாய் நேரே ஸ்ரீதரனிடம் வந்து அவனது பாதணிகளையும் பாண்டின் ஓரத்தையும் முகர்ந்துவிட்டு மெல்ல நிமிர்ந்து பார்த்த வண்ணம் வாலைப் பலமாக ஆட்டிற்று.

''அட! உங்க கிட்ட ரொம்ப அன்பாப் பழகுதே! புது மனுஷங்களைக் கண்டாப் பேயா அலறுமே...'' அத்தை அதிசயப் பட்டாள்.

ஸ்ரீதரன் குனிந்து அதன் முதுகை மெல்லத் தட்டிக் கொடுத்தான். நாய் அவனது கையை நக்கிக் கொடுத்துவிட்டு ங்கு...ங்கு... என்று செல்லமாகச் சிணுங்கியது.

''ஸாம்சன் பொல்லாத நாயாச்சே உங்க கிட்ட ரொம்ப ஒட்டிக் கொள்கிறதே? வேடிக்கையா யிருக்கு.'' சந்தியா வியப்புடன் கேட்டாள்.

''நாய்களுக்குக் கூரிய அறிவு உண்டு. யாரை விரும்பணும் யாரை வெரட்டணும்னு அதுகளுக்குத் தெரியும்'' சிரித்தபடி நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

சிவ்வென்று முக சிவந்து போனாள். நெஞ்சு உவகையில் படபடத்தது.


'எனக்கும் தெரியும் யாரை விரும்புவது யாரை வெருட்டுவது என்று...' சொல்லத் துடித்தாள்.

அதற்குப்பதில்,''டாக்டர்...உங்கள் பீஸ்?'' என்றாள்.

''காயம் ஆறிய பின் சாவகாசமாக பில் அனுப்பறேன்.... வரேன்!'' சுருக்கமாக விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான் ஸ்ரீதரன்.

கேட்டைத் தாண்டி அவன் மோட்டார் சைக்கிள்மீது ஏறிஅதை உதைத்துத் தெருவில் செலுத்திக் கொண்டு சிறிது தூரம் சென்று தெருவின் வளைவில் மறையும்வரை அவன் அவனையே பார்த்துக் கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்தாள். (தொடரும்)

இம்மாத ரத்தினம்



பிப்ரவரி மாதத்தில் பிறந்தவர்களுக்குரியது செவ்வந்திக்கல் (AMETHYST) என்று சொல்வார்கள். இது ஊதா, வெளிர் சிவப்புக் கலந்த ஊதா ஆகிய நிறங்களில் இருக்கும். ரத்தினங்களின் கடினத்தன்மையை மோஸ் அளவில் மதிப்பிடுவார்கள். இதன் கடினத்தன்மை 7. செவ்வந்திக்கல் மன நிறைவு, மேலிடத்து ஆதரவு, நேர்மை ஆகியவற்றைக் குறிக்கும்.



நேர்மையான முயற்சிக்கு நிறைவான ஆதரவு தருகிறது இந்தியன் பாங்க்



● ''எங்கள் தலைவர் விழா எடுக்காவிட்டால் இன்று எத்தனை பேருக்குப் பாரதி யாரைத் தெரியும்?'' என்றவர்கள், பாரதி பற்றிய சிறப்பிதழில் 'தங்கள் தலைவரின் பிளோ-அப் வண்ணப் போஸ்டரைப் போடாமல், உம்முடைய படத்தையா போடுவார்கள்?

பெருங்களத்தூர் எல். ரவிசங்கர்

● 14ம் பக்கம் பார்த்தேன்! 'சலன்' உதவியினால் இட்டிய 'இந்தி' ஸ்டைல்கள் வைத்துக் கதைகள் என்று படித்தேன்! விறு விறுவென்று பக்கங்களைப் புரட்டினேன். நம்ம 'கமலின்' இந்திப் பட ஸ்டைல் இருக்கிறதா என்று பார்க்க! ஊஹூம்! ஏச்சுப்புட்டீரே சலனுரே!

கல்கத்தா-26 வெ. பாலசந்திரன்

● திரைக் கதைகளுக்கும் போன இதழில் வெளியான சிறுகதைகளுக்கும் சம்பந்தம் இல்லையானாலும் ஒவ்வொரு கதையும் மிகவும் அற்புதமாக இருந்தது.

கல்கத்தா கே. கே. பாலசுப்பிரமணியன்

● இந்திப் படம் தமிழ்க் கதை பார்த்தேன். ரசிக்கவில்லை. கதைகளைப் படிக்கும் ஆர்வமே இல்லை. ஏன் சார் இப்படி ஒளியர்கள் பிழைப்பைக் கெடுக்கிறீர்கள்? நல்லவேளை! இன்னும் ஒரு படி மேலே போய்த் தமிழ்ப்படம்-இந்திக் கதை; மொழிபெயர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல் இருந்தீர்களே அதற்கே ஆயிரம் நன்றிகள்!

விழுப்புரம் கே. எஸ். குமார்

● டயலாக் நாம் அன்றாடம் கேட்டுக்கொண்டிருப்பதுதான். ஆனால் அதையே அகஸ்தியன் சொல்லும்போது சிரிக்க வைக்கிறது. சிந்திக்கத் தூண்டுகிறது. நடனத்தின் படங்கள் அதற்கு உறுதுணை புரிகின்றன. மொத்தத்தில் சுவை!

கும்பகோணம் டி. எஸ். சீதாராமன்

● என்ன ஐயா நீர்! புகை பிடிப்பதை நிறுத்த சூயிங்கம் சாப்பிடச் சொல்கிறீர்கள். பிறகு சூயிங்கம் சாப்பிடுவதை நிறுத்த என்ன சாப்பிடச் சொல்வீர்களோ!

ஏத்தல் ஆர். இளங்கோ

● பாத்திமுத்து சித்திக் அவர்கள் எழுதிய 'ஹஜ்ரத் நிஜாமுதீன் அவுலியா' அவர்களின் தர்க்கா பற்றிய கட்டுரை, டெல்லி சென்று நேரில் தர்க்காவைக் காண வாய்ப்பு இல்லாத என்னைப் போன்ற ஆயிரக் கணக்கான வாசகர்களுக்கு மனக்கண் முன்னும் தர்கா ஷெரீப்பைக் காணும் வாய்ப்பை நல்கியது.

சாதிக்நகர் ஏ. சாகுல் அமீது

● ''போக்கிரி ராஜா'' விமர்சனத்தில் நீர் செஞ்சுரி அடித்திருந்தாலும் ஆல் ரவுண்டராக இருக்கும் மனோரமா பற்றிக் குறிப்பிடாததால் நீர் அடித்தது அரை செஞ்சுரிதான்.

பெருங்களத்தூர் சி. கோட்டீஸ்வரன்

● 31-1-82 கல்கி அட்டைப் படம் நல்ல காது குத்தல். வீட்டு டைனிங் ஹாலில் அல்லவா போஸ் கொடுத்த மாதிரி உள்ளது. அதைவிட லட்சுமி முரளி முகத்தில் அந்தக் காலை வேளை பரபரப்பைக் கூடக் காணோமே சார்!

வியாசர் காலனி திருமதி நாராயண ராவ்

● 'செம்பியனி'ன் ரவிகுலதிலகன் வரலாற்று நவீனம் சிறந்த படைப்பாக மிளிர்கின்றது. அவருடைய நடையில் ஒரு மரபின் வழிவந்த (யாரோ மிகச் சிறந்த படைப்பாளியின்) பொங்கு தமிழ் மணம் வீசி என்னை மயங்க வைக்கிறது. மேலும் சுவைக்க சுவை யாக அவர் துள்ளு தமிழைப் பருகக் காத்திருக்கிறேன்.

திருவாரூர் ஜெ. ஜெயராமன்

உங்கள் உதவி தேவை!

● காது கேளாத, பேச முடியாத, பார்க்க முடியாத, நடக்க முடியாத, சிந்திக்க முடியாத எத்தனையோ பேர் பண வசதியும் இல்லாமல் தவிக்கிறார்கள். நீங்கள் கொடுக்கும் அன்பளிப்பு அவர்களுக்குக் கை கொடுத்து உதவும். அவர்களது வாழ்க்கையில் உதவுவதற்காக ஸ்ரீ சீதாலட்சுமி அறக் கட்டளை' தொண்டு செய்து வருகிறது. இந்த அறக் கட்டளைக்கு நீங்கள் அனுப்பும் அன்பளிப்புக்கு வருமான வரியிலிருந்து விலக்கு உண்டு.

ஊனமுற்றோருக்கான உங்கள் அன்பளிப்பை SREE SEETHA LAKSHMI CHARITIES 56, 28th Cross street, Indira Nagar, Madras-20. என்ற விலாசத்துக்கு மணியார்டர் மூலமோ செக்-டிராஃப்ட் மூலமோ அனுப்பி வைக்கலாம். உடனுக்குடன் ரசீது அனுப்பி வைக்கப்படும்.

சென்னை-20 வசந்தா ராமகிருஷ்ணன்.
மானேஜிங் டிரஸ்டி.
ஸ்ரீ சீதாலட்சுமி சாரிட்டீஸ்



புத்தகம்....

வெளியான நூல்கள் சிலவற்றையும் வாங்கி விற்பனை செய்ய முயலுகிறார்கள்.

● சென்னை ஹிக்கின்பாதம்ஸில் பாதிகூட இல்லை புஸ்தகங்கள் இருந்த பகுதி. ஆனால் விஞ்ஞானம், கலை, மதம், மருத்துவம், இலக்கியம், குழந்தை நூல்கள்என்று அடுக்கடுக்காய்ப் புத்தகங்களைப் பார்க்கிற பொழுது 'லாகோஸ்' கப்பல்வாசிகளை நினைத்துப் பொருமையாய் இருக்கிறது.

● கப்பலில் 25 நாடுகளைச் சேர்ந்த 144 பேர் இருக்கிறார்கள். 20 குடும்பங்கள்.. ஏகபிரானைத் தீவிரமாக வழிபடுகிறவர்கள். இப்போது இரண்டு இந்தியர்கள் இந்தக் கப்பலில் பணிபுரிகிறார்கள். இன்னும் ஏழுபேர் சென்னையில் சேரவிருக்கிறார்களாம்.

புத்தகக் கப்பல்



....கப்பல்

● கடந்த பதினோரு வருடங்களாக, முந்நூறு டன் எடையுள்ள நூல்களைச் சுமந்து கொண்டு 67 நாடுகளிலுள்ள 260 துறைமுகங்களுக்கு விஜயம் செய்திருக்கிறது 'லாகோஸ்'. பார்த்து மகிழ்ந்தவர்கள்: 30 லட்சத்துக்கும் மேல்!

● உலகெங்கிலும் உள்ள இருபது முக்கியமான பதிப்பாளரிடமிருந்து நூல்களை வாங்குகிறார்கள். முகாம் இடுகிற ஊரின் மொழியில்

● இவர்களுக்கு வாழ்க்கையில் இரண்டே இரண்டு லட்சியங்கள்: (1) ஜாதி—மத-இன பேதமின்றி மனித குலத்தை நேசிப்பது. (2) புனித பைபிளில் சொல்லப்

✕ கப்பலின் காப்டன் மெல்பிலாலோ



பட்டிருக்கும் நெறிகளைக் கடைப்பிடிப்பது.

● இதில் பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளமாக எதுவும் கிடையாது. பின் எப்படிச் செலவுகளைச் சமாளிக்கிறார்கள்? புத்தக விற்பனையிலிருந்து 20 சதவீத வருமானம் கிடைக்கிறது. 80 சதவீதம் பல நாடுகளிலிருந்தும் கிடைக்கும் நன்கொடைகள். (அடேயப்பா!)

● கப்பலில் வலப்புறம் மட்டும்தான் புத்தகக்காட்சி நடைபெறுகிறது. மற்ற இடங்கள் எல்லாம் கப்பலின் சாதாரணமாகக் காணப்படும் சாப்பாட்டு அறைகள், வகுப்பு அறை (4 தேர்ந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.) கான்ஃபரன்ஸ் ஹால் இத்யாதி.

● 'லாகோஸ்' கடைசியாக விஜயம் செய்த வெளிநாடு பங்களாதேஷ். இந்தியாவில் கல்கத்தாவுக்கும் ஒரிசாவிலுள்ள பாரதீப் துறைமுகத்துக்கும் போய்விட்டுத்தான் சென்னைக்கு வந்திருக்கிறது. கல்கத்தாவில் அப்படியொன்றும் புத்தகப் பிரியர்கள் கப்பலை மூழ்கு றுகை இடவில்லையாம். சென்னையில் கூட்டம் நிச்சயம் அதிகம்தான். விற்பனை? ஊஹூம்! புத்தகம் வாங்குபவர்களை விடக் கப்பலைப் பார்க்க வந்தவர்கள்தான் அதிகம் போலிருக்கிறது!

● இங்கிருந்து 'லாகோஸ்' எங்கே போகிறது? ஸ்ரீலங்காவுக்கு. மறுபடியும் தூத்துக்குடி துறைமுகத்துக்கு ஏப்ரல் மாதம் விஜயம் செய்யும். சென்னையில் பார்க்கத் தவறியவர்கள் இரண்டு மாதம் காத்திருந்து தூத்துக்குடிக்குப் போய்ப் புத்தகக் கப்பலைப் பார்க்கலாம்.

● கப்பலுக்குள் நுழையக் கட்டணம் ஒரு ரூபாய். புத்தகம் வாங்கினால் பில்லில் இத் தொகையைக் கழித்து விடுகிறார்கள்! இலவசமாகச் சிலருக்குப் புத்தகம் கிடைக்கிறது. அது பைபிள்!

● 'லாகோஸ்' இங்கிலாந்திலுள்ள தர்ம ஸ்தாபனம் ஒன்றுக்குச் சொந்தமானதும். இதன் அலுவலகம் ஜெர்மனியில்தான் இருக்கிறதாம். சிங்கப்பூரிலும் இருக்கிறது இதன் அலுவலகம் ஒன்று.

● கப்பலில் நுழைந்தபோது புத்தக வாசனையைக் காட்டிலும் அப்போதுதான் தயாரான உணவின் மசாலா வாசனை கமகமவென்று கிளம்பி மூக்கைத் துளைத்தது. மணி ஆறரை. கப்பலில் தங்கி இருப்பவர்களின் இரவு உணவு நேரமாம் அது!

தகவல் திரட்டியவர்: **சாருகேசி**

படங்கள்: **ரமணி**

● பொறுப்பில்லாத சகோதரர்கள், அக்கறை இல்லாத அப்பா, வேலைக்குப் போய்ச் சம்பாதித்துப் போடும் மூத்த பெண் அன்னபூரணி, இளைய பெண் சிவகாமி ஆகியோரைச் சுற்றிக் கதை — வசன வலை பின்னியிருக்கிறார், நாடகாசிரியர் முரளி மனோகர்.

'உன்னை நான் தெய்வமாகத்தான் நினைக்கிறேன்!' என்று சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்துவிடும் கதாநாயகன் முகுந்தன், ஏமாற்றத்தைக் கதாநாயகிக்கு மட்டுமல்ல, பார்வையாளருக்கும் சேர்த்தே வழங்கி விடுகிறார், கடைசியில்.

அலைகள் ஓய்ந்தபோது



கதை, வசனம் எழுதி, நிறம்பட இயக்கியிருக்கும் முரளி மனோகர், முகுந்தனாக வந்து வெகு இயற்கையாகப் பேசி நடிக்கிறார். நகைச்சுவை கலந்த சீரியஸ் பாத்திரத்தை அநாயாசமாக வழங்கியிருக்கிறார் தமது நடிப்பில். குடும்ப டாக்டர் தர்மராஜனாக வரும் கரூர் ரங்கராஜ் நடிப்பில் 25 வருட மேடை நாடக அனுபவம் துல்லியமாகத் தெரிகிறது. வசனம் வேறு இயற்கையாகக் கைகொடுக்க, தனிப்பட்டுத் தெரிகிறார் டாக்டர். தகப்பனார் சிவசங்கரனாக வரும் கண்ணன் நயமாகச்செய்திருக்கிறார் தமது பங்கை. அன்னபூரணியாக வரும் எஸ். ஆர். விஜயாவுக்கு சபாஷ் போடா விட்டாலும், சமாளித்து விட்டார்கள் — கஷ்டமான பாத்திரத்தை!' என்று பாராட்டத் தோன்றுகிறது.

''இரண்டு மணி நேரம் வாய் விட்டுச் சிரித்து மகிழலாம் என்று எதிர்பார்த்தால் நீங்கள் ஏமாந்து போவீர்கள். சற்றே வித்தியாசமான நாடகம் இது!'' என்று திரை ஏறுமுன் வருகிற அறிவிப்பு அச்சுறுத்தினாலும், கதையோடு இழைந்து இயற்கையாக வெளிப்பட்ட நகைச்சுவை வசனங்களைக் கேட்கக் கேட்க, அறிவிப்பு அநாவசியம் என்று தோன்றியது.

-சாருகேசி



அந்த ஒரு கேள்வி

'அந்தக் கேள்வியை அரவிந்தனிடம் கேட்டது தவறோ?' அவளது கை விரல்களால் கடற்கரை மணலை அளைந்து கொண்டே யோசித்தாள் சந்தியா. மோதிர விரலில் மட்டும் குறுகுறுப்பு அதிகமாயிருந்தது. விரலுக்கும் மோதிரத்துக்கும் இடையே புகுந்த மணல் துகள்கள் உறுத்தின.

'ஒருவேளை இப்படித்தான் அந்தக் கேள்வி அரவிந்தனை உறுத்திற்றோ?'

'ப்ச... பளிச்சென்று பதில் சொல்லியிருக்கலாமே? ஏன் கோபம் வரவேண்டும்? பட்டென்று புத்தகத்தால் முழங்கையில் அடித்து விட்டு, மௌனமாய் விருட்டென்று எழுந்து போய்விட்டாரே... என்ன காதலர் இவர்?.. ஒரே ஒரு கேள்விக்கே இப்படி ஆடிப் போகிறவர், காதலன் பதவி போய், கணவன் பதவிக்கு வந்தால் எப்படி இருப்பார்? போகிற போக்கைப் பார்த்தால் காதலன் பதவியைத் தாண்ட மாட்டார் போலிருக்கே!'

சந்தியா எழுந்து கொண்டாள். இருட்டத் தொடங்கி விட்டது. அவளுக்குள் பயப் புகை கவியத் தொடங்கியது. புடவைத் தலைப்பைச் சரிசெய்து, கைப் பையைத் தோளுக்கு மாற்றி, கால்களில் செருப்புக்களை ஒழுங்கு செய்யக் குனிந்து, நிமிர்ந்த போது, முட்டிவரை தூக்கிய கைலி ஒன்று பீடியைக் கடித்தது. பம்மிய தலைமயிரை இடது கையால் ஒதுக்கியபடி, கண்ணடித்தது.

சந்தியா வலது கால் செருப்பைக் கையில் எடுத்தாள். கைலி வேகமாக ஓடத் தொடங்கியது.

சந்தியா மீண்டும் செருப்பை அணிந்து கொண்டு, கால்கள் புதையப் புதைய வேகமாக நடந்தாள். ரோடுக்குப் போய், பஸ் பிடித்து வீண்டி சென்று—

''ஏன்டி லேட்?'' அம்மாவின் வழக்கமான கேள்விக்கு ஏதோ ஒரு காரணத்தை நம்பும் படியாகச் சொல்லி—

சந்தியாவின் கண்களில் பஸ் புலப்பட்டது.

அரவிந்தனால் சந்தியாவின் கேள்வியை ஜீரணிக்க முடியவில்லை. என்ன கேட்டுவிட்டாள்? எப்படி மனசு வந்தது?

''அரவிந்த்... என்னைச் சந்திக்கும் முன்பு நீங்கள் எந்தப் பெண்ணையாவது தொட்டிருக்கிறீர்களா?''

ஷேம்... ஒரு பெண்... அதுவும் ஆறுவருடமாகப் பழகிய காதலிகேட்கிறாள். கொடுமை. ஏன் இப்படிக் கேட்டாள்? மாடியறையில் கட்டிலில் படுத்திருந்தவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். நெற்றியில் வியர்வை. வயிற்றில் சங்கடம்.

ஏன் கேட்டாள்? என்ன பதிலை எதிர் பார்த்தாள்? 'எஸ்' என்ற பதிலைத்தான் எதிர் பார்த்திருப்பாளா? மேன் மேலும் கேள்விகள் கேட்க அஸ்திவாரம் போட்டாளா? 'நோ' என்று சொல்லியிருந்தால் நம்பியிருப்பாளா? அல்லது, 'நீ யாரையாவது' என்று தான் அவளிடம் கேட்க வேண்டும் என்று உசுப்பவே இக்கேள்வியைக் கேட்டாளா?

''ஒருவேளை... அவள்...இதற்கு முன்பு... ஒருவனை...'

தலையைப் பலமாக ஆட்டிக் கொண்டான் அரவிந்தன்.

பளீரென்று மின்னலடித்தது. திவாகரின் நினைவு வந்தது. ஆத்ம சிநேகிதன். அவனிடம் சொல்லலாமா?

அவசரமாக வீட்டை விட்டுச் சைக்கிளில் கிளம்பினான், திவாகரைத் தேடி.

விமலா வெடிச்சிரிப்புச் சிரித்தாள். கண்களில் ஜலம் ததும்பியது.

''என்ன இப்படிச் சிரிக்கிறே விமல்?'' என்றபடி வேர்க்கடலைப் பொட்டலத்தைப் பிரித்தான் திவாகர்.

''பின்னே? சிரிக்காமல் அழவா முடியும்? நல்ல கேள்வி கேட்டீங்க?...ம்...'' என்று சொன்னபடி பிரித்த பொட்டலத்திலிருந்து நாலு கடலையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

''திவா, நான் சோஷியலாய்ப் பழகுகிறவள் தான். ஆனால் உங்கிட்ட மட்டும்தான் என் மனசைப் பறிகொடுத்திருக்கிறேன். இந்த நாலு மாசமாய்ப் பழகினவனைப் பார்த்து, நல்ல கேள்வி கேட்டீங்க?... ம்... ''ரிலாக்ஸ் செய்தபடி நன்றாகக் கைகளை ஊன்றிக்கொண்டாள் விமலா.

திவாகர் பேசாமல் இருந்தான். கேள்வி கேட்டாயிற்று. பதில் வரட்டுமே? 'என்ன தான் சொல்வாள்?' என்று யோசனையில் இருந்தான். வேர்க்கடலைப் பொட்டலத்தை ஷேப் மாற்றி செவ்வக வடிவப் பேப்பராக்கினான். மடியில் வைத்து நன்றாக நீவிவிட்டான்.



பாமா கோபாலன்

'பொட்டல்'ச் செய்தி என்னவாயிருக்கும் என்ற இயல்பான ஆவல் எழ, ''சல் மெனிங் செய்த வாலிபருக்குத் தண்டனை' என்றதலைப்புக் கண்ணில் பட்டது. பேப்பரைச் சுருட்டி எறிந்தான்.

''திவா, எவ்வளவு ஈஸியாக் கேட்டுட்டீங்க? 'இதுக்கு முன்னாடி எவனாவது உன்னைத் தொட்டிருக்கானா?' – அற்புதமான கேள்வி'' அவள் குரலில் கேலியும், விரக்தியும் சம விகிதத்தில் இருந்தன.

''ஏன் திவா, இந்தக் கேள்விக்கு நான் 'இல்லே'ன்னு சொன்னால் நீங்க முழுமையா நம்புவீங்களா?''

''......''

'' 'ஆமாம், ஒருத்தர் என்னைத் தொட்டிருக்கிறார்'னு சொன்னவுடனே காதலைக் கட் பண்ணிடுவீங்களா? வாட் யூ ஸே திவா?'' அவளின் குரலில் உஷ்ணத்தின் நிழல் தெரிந்தது.

திவாகர் பொறுமையை இழந்துகொண்டிருந்தான். நண்பன் அரவிந்தன் வந்து அவன் பிரச்னையைச் சொல்ல, அதையே திருப்பித் தன் காதலியிடம் கேட்க, ரியாக்ஷனை அரவிந்தனிடம் சொல்ல நினைத்தவனுக்கு, காதலே முறிந்து விடுமோ என்ற நிலை.

அவசரமாக, ''சே.. சே... விமல்... நீ ஏன் இப்படிக் கற்பனை பண்ணிக்கிறே ஜஸ்ட் லைக் தட்....'' என்று தணிந்தான்.

''திவாகர், ஜஸ்ட் லைக் தட்னு எவ்வளவு சுலுவா சொல்ல முடியுது? நீங்க கேட்ட கேள்வியை நான் கேட்டிருந்தால், நீங்கள் உண்மையான பதிலைச் சொல்லி விருப்பீங்களா? நான் இப்ப உண்மையான பதிலைச் சொன்னாலும் நீங்க நம்பப் போறதில்லையே... ரொம்ப சோஷியலாப் பழகுகிற பொண்... எப்படி?... அது இதுன்னுதான் மனசுக்குள் சந்தேக விதை விழும்....''

விம்மலில் ஆரம்பித்து அழுகையில் முடித்தாள் விமலா.

''ஓ.கே. விமல்... ப்ளீஸ், அதை மற. என் மேலே தப்பு! என் நண்பன் ஒருவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்துக்கு நான் ஏன் உன்னை இழக்கணும்...''

''என்ன புதிர் போடறீங்க திவா?''

''புதிர் ஒண்ணுமில்லே... என் நண்பனை, அவன் காதலி அந்தக் கேள்வி கேட்டாளாம். புர்ர்ர்னு கோபித்துக் கொண்டு வந்துவிட்டான். ரொம்ப அப்செட். காதலையும், காதலியையும் வெறுக்கிற அளவுக்கு!''

''ஐயோ! அவ்வளவுதானா உங்க ஃப்ரண்ட்? அவர் காதலி பேரு சந்தியாவா?''

திடுக்கிட்டான் திவாகர். ''அட! உனக்கு எப்படித் தெரியும்?''

''கஷ்டம்! நான்தான் அவளிடம் இந்தக் கேள்வியைக் கேட்கச் சொன்னேன்! அவளுக்குத் தன் காதலன் இவ்வளவு அழகா இருக்கானே, முன் அனுபவம் இருக்குமோ என்று பயம்.''

''ரொம்ப அழகு போ. நீ கிளப்பிவிட்ட பூதம்தானா இது? பூமராங் மாதிரி உன்கிட்டேயே வந்துடுத்து. சே! நமக்கு ஒரு பொன் மாலைப் பொழுது வேஸ்டாயிடுத்து...''

''ஒழியறது விடுங்க. இனிமேலாவது மீதி நாட்கள் வசந்தமா இருக்கட்டுமே!''

''விமல்... வசந்தம்னு சொன்னவுடனே, எனக்கு அந்த இன்ஸ்டிடியூட் வசந்தா ஞாபகத்துக்கு வர்றா.''

''யாரு அவள்? உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?''

''போச்சுடா! மறுபடியும் முதல் சதுரத்திற்கே...''

சிரிப்புடன் அவன் வாயைப் பொத்தினாள் விமலா. ''பெண்கள் எப்பவுமே பொஸஸிவ் டைப், தெரியுமோ?''

இவர்: நான் எழுதியனுப்பும் ஜோக்ஸ் எதுவுமே பிரசுரமாகாமல் போய்விடுகிறது!


அவர்: நீங்கள் கற்பனை செய்து எழுதுகிறீர்களா? காப்பியடித்து எழுதுகிறீர்களா?

இவர்: கற்பனை செய்து தான் எழுதுகிறேன்!

அவர்: அதனால் தான் பிரசுரமாகாமல் போய்விடுகிறது!

எஸ். தேவாதிராஜன்

வீரகேசியின் சேனை



ஜே.எஸ்.ராகவன்

காட்சி 1

[அந்தப்புர நிலா முற்றத்தில் குரட்டூர் சிற்றரசர் வீரகேசி, அரசியுடன் சல்லாபித்துக் கொண்டு இருக்கிறார். அகிற் புகையின் மணமும், அந்நிய நாட்டு வாசனைத் திரவியங்களின் சுகந்தமும், அரசரின் நீண்ட நாசியைத் தாக்கி அவரை இன்பபுரிக்கு இட்டுச் செல்கின்றன.]

அரசி: மன்னா! இந்த அமாவாசை இருட்டில் என்னை நிலா முற்றத்துக்கு விரைந்து வருமாறு ஆக்ஞை இட்டதின் காரணம்?

அரசர் (அரசியின் சிறிய கூந்தலை வருடிக் கொண்டே): தேவி! அரசாங்கக் கோப்புகளில் மூழ்கியிருக்கும்போது திடீரென்று உன் நினைவு வந்தது. ஓடோடி வந்தோம் ஆரத் தழுவ!

அரசி (நாணத்துடன்): பொல்லாதவர்! தகட்டூருக்கு எவ்வாறு கப்பம் கட்டுவது என்று துயருற்று மாலையில் நீண்ட தனி மொழி பேசிக் கொண்டிருந்த தாங்கள் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே! (சிணுங்கி) இப்போது மாத்திரம் எப்படி என் நினைவு வந்ததாம்?

அரசர் (கண்களில் தீப்பொறி பறக்க): கப்பம்! ஹூம்... அதை நினைத்தாலே என்

உள்ளம் கொதிக்கும் கொப்பரையில் விழுந்த அப்பம் போல் துடிக்கிறது. ஆணவம் பிடித்த தகட்டூர் மாட பூபதியை நினைத்தாலே என் தோள்கள் தினவெடுக்கின்றன.

அரசி (அரசரின் பரந்த தோள்களை இதமாகப் பிடித்து விட்டுக் கொண்டே): அமைதி மன்னா! தவணை முறையில் கப்பம் கட்டுவதாக விண்ணப்பித்து ஓலை அனுப்பினீர்களே பதில் வந்ததா?

அரசர்: இல்லை தேவி! புறா மூலம் செய்தி வருகிறதா என்று பார்க்க, நம் அமைச்சர் உப்பரிகையின் மேல் முதல் ஜாமத்திலிருந்து கால் கடுக்கக் காத்திருக்கிறார். ஹூம்... தகுந்த பதில் வரவில்லை எனில், இந்த வீரகேசி யாரென்பதை அந்த மாடபூபதிக்குச் சரியாகப் புரியவைக்கப் போகிறேன். (குரலைத் தாழ்த்தி) பணிப் பெண்கள் எவரேனும் அருகில் உளரா?

அரசி (மெல்லிய குரலில்): இல்லை நாதா! அரசியல் ரகசியம் ஏதேனும் கூறப் போகிறீர்களா?

அரசர்: ரகசியமாவது வெங்காயமாவது? நிலா முற்றத்தில் அரசியலுக்கு என்ன வேலை? அருகில் வா! சர்க்கரைப் பாகே!



காட்சி 2

[வீரகேசியின் அரசவை. ஆலோசகர்கள், சோதிடர்கள், கலைவாணர்கள் புடைசூழ, சிற்றரசர் கொலுவீற்றிருக்கிறார். ஆஸ்தான நர்த்தகி வண்ணமுகியின் நடனம் அசம்பாவிதம் ஏதுமின்றி இனிதே முற்றுப்பெறுகிறது. எல்லோரும் ஒருமுறை பலமாகக் கை தட்டுகிறார்கள்.]

அரசர்: வண்ணமுகி! உன் பாட்டும், நடனமும் எம்மனத்தை மிகவும் உற்சாகப்படுத்தின. யாரிடம் நீ வித்தை பயின்றாய்? அவர் வாழ்க! பரிசாக உனக்கு ஒரு பொற்கிழி அளிக்கிறேன் பெற்றுக் கொள்!.... அமைச்சரே!

(தபால் புறாவை எதிர்பார்த்து இரவு கண் விழித்த அமைச்சர் தள்ளாடிவந்து ''அரசகஜானுகாலி'' என்று அரசரின் காதைக் கடிக்கிறார்.)

அரசர்: ம்...ம்... (யோசித்து) ஆ! எழிலரசி வண்ணமுகி! பொன்னும் பொருளும் நிலையற்றவை! இது ஞானிகளின் கூற்று. இதை உலகறியும். நீ அறிவாய். உன் திறமைக்கு அது ஒரு போதும் ஈடாகாது. ஆகவே உனக்கு.... உனக்கு....

அமைச்சர் (சட்டென்று): 'நூலிடை நடன சுந்தரி' என்ற பட்டத்தை....

அரசர் (அமைச்சரைப் பெருமையுடன் பார்த்துவிட்டு): 'நூலிடை நடன சுந்தரி' என்ற பட்டத்தை அளித்து மகிழ்கிறோம்.

அமைச்சர் (கையையும், குரலையும் உயர்த்தி) நூலிடை நடன சுந்தரி!

(அரசியையும் வண்ணமுகியையும் தவிர எல்லோரும் வாழ்க என்று வானளாவ கோஷமிடுகின்றனர். அரசருக்குத் தெரியாமல் அரசி வண்ணமுகிக்கு அழகு காட்டுகிறாள்.)

சேவகன் (வணங்கி): கொற்றவரே! தகட்டூரிலிருந்து ஒரு தூதுவர் வந்திருக்கிறார்.

அரசர் (அவசரமாக): உடனே வரச் சொல்.

(தூதுவர் வந்து அரசரிடம் ஒரு சுருட்டிய லிகிதத்தைத் தருகிறார்.)

அரசர்: (படித்துவிட்டு): ஆ! என்ன ஆணவம்! யாம் கப்பம் கட்டத் தவறினால் மாட பூபதி குரட்டூருடன் போர் தொடுக்கப் போகிறானாம். என்ன செருக்கு! என்னுடைய

சேனையைக் கைப்பற்றுவேன் என்று கூறுரைத்திருக்கிறானும். என்ன திமிர்! நான் அடிக்கடி விழா எடுப்பது அரசு விழாமல் இருக்கத்தானும். மேலும் எனக்குப் பூத்தொடுக்கத்தான் தெரியுமாம். போர் தொடுக்கத் தெரியாதாம். ஓலை தாங்கியே!...

தூதுவர்: மன்னு?

அரசர்: ஓலை தாங்கியே! போய்ச் சொல் அந்த ஆணவம் பிடித்த மாடபூபதியிடம். இன்னும் பதினைந்தே நாட்களில் குரட்டூர் படைகள் தகட்டூர் மேல் இடிபோல் இறங்கும் என்று. ஹூம்... மெலிந்து வாடி பஞ்சத்தில் அடிபட்ட அகதியைப் போல் தோன்றும் உம்மால் இந்த இடிச் செய்தியைத் தாங்கிச் செல்ல முடியுமா சொல்?

தூதுவர்: மன்னு! நான் ஓலை தாங்கியே தவிர இடி தாங்கி அல்லவே!

(அவையில் 'குபீர்' சிரிப்பு)

அரசர் (கண்கள் கோவைக் கனி போல் சிவக்க) ஒரு தூதுவனுக்கு என்ன திமிர்! யாரங்கே? இவனை உடனே ஒன்பது துண்டாக வெட்டித் திசைக்கு இரண்டாக எறிந்து மிதித் துண்டத்தைச் சுண்ணும்புக் காளவாயில் போடுங்கள்!

அமைச்சர்: தூதுவரைக் கொல்வது மரபில்லை மன்னவரே!

அரசர்: அப்போது கூப்பிடுங்கள் நமது மூழி பெயர்ப்பாளரை!

அமைச்சர்: .மொழிபெயர்ப்பாளர் எதற்கு மன்னு! கடிதம் யாமறிந்த மொழியில்தானே உளது?

அரசர் (பற்களைக் கடித்து): அமைச்சரே! எவ்வளவு முறை சொல்வது, உங்கள் பெரிய தலைப்பாகையைக் காதின் மேல் கட்டாதீர் என்று? நான் ஆணையிட்டது 'மூழி' பெயர்ப்பாளரைக் கூப்பிடுங்கள். கூப்பிட்டு இந்த ஆணவம் பிடித்த தூதுவரின் கண்களைப் பெயர்த்து பகல்பூர் எல்லையில் விட்டெறியுங்கள்.. சீ! வேண்டாம், வில்லை விட்டு அம்பை நோவானேன்? ஓலை தாங்கியே! போ! ஓடிப்போ! மறைந்து போ!

தூதுவர்: மின்னல் போலவா? இடியைப் போலவா?

(அரசரின் கோபம் எல்லை மீறுமுன் சேவகர்கள் தூதுவரைப் பலவந்தமாக அப்புறப்படுத்துகின்றனர்.)

காட்சி 3

[ஹோய், ஹோய் என்ற சத்தத்துடன் தூக்கிக்கொண்டு செல்லப்படும் முத்துப் பல்லக்கில் குரட்டூர் இளவரசி வசந்தசேனை ஒயிலாகச் செல்கிறுள். திடீரென்று வெண் புரவி மேல் வந்த வாலிபன், பல்லக்குத் தூக்கிகளையும், வேலேந்திய வீரர்களையும் சண்டையிட்டு அருகில் தயாராக இருக்கும் தாமரைத் தடாகத்தில் விழச் செய்கிறுன்.]

வசந்தசேனை (தொப்பென்று கீழே போடப்பட்ட பல்லக்கிலிருந்து வெளியே வந்து): யார் நீ?

வாலிபன்: கண்ணே தெரியவில்லையா?

வசந்த: கண் சரியாகத்தான் தெரிகிறது. உன் கண்கள்தான் மூடியிருக்கின்றன.

வாலிபன் (சிரித்து) குறும்புக்காரி! இதோ பார்! (விழித் திரையை நீக்குகிறுன்.)

வசந்த (நாணி): ஆ! நீங்களா? தகட்டூர் இளவரசர்!

வாலி: ஆம் அன்பே! உன் வீரர்கள் நீந்தி வருவதற்கு முன் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்.

வசந்த: நம் திருமணம் பற்றியா? நடக்கக் கூடிய காரியமா அது?

(இளவரசியின் உஷ்ணப் பெருமூச்சினுல் அருகில் உள்ள தாவரங்கள் பொசுங்கிப் போகின்றன.)

வாலி: மனம் தளராதே இளவரசி! குரட்டூருக்கும் தகட்டூருக்கும் உள்ள பகை விரைவில் ஆதவனைக் கண்ட தூக்கம் போல் மறையும்.

வசந்த: ஹூம்... உம் தந்தையார்தான் சொன்ன சொல் தவறுதவர் என்று பெயர் பெற்றவராயிற்றே! குரட்டூருக்கு வந்து எங்கள் சேனையைக் கைப்பற்றப் போவதாகச் சவால் விட்டிருக்கிறுரே!

பிளாட்பாரத்தில் வாழும் ஒரு பட்டதாரி நடிகை

மாயாதேவி பூனுவில் படித்துப் பட்டம் பெற்றவர். மராத்தி, ஹிந்தி, ஆங்கில நாடகங்களில் நடித்தார். ஒரு முறை நாடகக் குழுவோடு ஆக்ராவுக்குப் போன மாயா அங்கு ஒரு இளம் நடிகரைச் சந்தித்தார். பிறகு காதல் கல்யாணம். ஆனுல்... ஆறே மாதத்தில் கணவர் இறந்து விட்டார். கணவர் நினைவுகளுடன் ஆக்ராவிலேயே வாழ்ந்துவிடத் தீர்மானித்தார். இன்று வரை ஆக்ரா ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே வாழ்ந்து வருகிறுர். இப்போது மாயாவுக்கு அறுபது வயது.

அவருடைய சர்டிபிகேட்டுகள், நாடக போட்டோக்கள் இவை அடங்கிய ஒரு டிரங்குப் பெட்டிதான் அவருடைய சொத்து. தினமும் ஒரு இங்கிலீஷ் நியூஸ் பேப்பரும் ஹிந்தி செய்தித்தாளும் வாங்குகிறுர். ஸ்டேஷனிலுள்ள போர்ட்டர்களுக்கு அவைகளைப் படித்துச் செய்திகள் சொல்கிறுர். ஸ்டேஷனைக் கவனித்துக் கொள்கிறுர். அங்கு தொலைந்துபோகும் பொருட்கள், குழந்தைகள் இவைகளை மாயா தேடிக் கொடுக்கிறுர்.

''நான் ஒரு பள்ளி ஆசிரியை வேலைக்கும் போயிருக்கலாம். ஆனுல் நான் சம்பளம் வாங்காமல் பிறருக்கு அறிவு புகட்ட விரும்புகிறேன். சமூக சேவைதான் எனக்குத் திருப்தி தருகிறது'' என்று கூறுகிறுர் மாயாதேவி!

நன்றி: 'சன்'

-அனிதா ராமச்சந்திரன்



வாலி: ஆருயிரே! அஞ்சாதே! அதற்கும் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறேன். காத தூரம் தள்ளி நிற்காமல் என் உதட்டருகே வா.

(வசந்தசேனை, இமைகள் புறாவின் சிறகுகள் போல் படபடக்க, காதைத் தீட்டிக்கொண்டு இளவரசன் அருகில் வருகிறாள். வெட்கத்துடன் வெண் புரவிதலையைத் திருப்பிக் கொள்கிறது.)

காட்சி 4

[ஹம்ச தூளிகா மஞ்சத்தில், தகட்டூர் இளவரசன் சாய்ந்திருக்க, அருகில் கோப்பையில் பழ ரசத்துடன் தங்கச் சிலையாக வசந்தசேனை நிற்கிறாள். சாளரம் வழியாக நுழைந்த நிலவுக் கதிர்கள் வெட்கமின்றி மஞ்சத்தின் மேல் விழுந்திருக்கின்றன. யாழ் ஒலி மெலிதாகக் கேட்கிறது.]

இளவரசர்: யாழ் யார் வாசிப்பது? சீ... யார் யாழ் வாசிப்பது?

வசந்த: யாரும் வாசிக்கவில்லை! என் மகிழ்ச்சி ததும்பும் இதயத்திலிருந்து வரும் கீதம்தான் அது! உங்கள் காதுகளுக்கு யாழ் போல் கேட்கிறது.

இளவரசன் (பரவசத்துடன்) அவள் மலர்க் கரங்களைப் பற்றி): வசந்தசேனை!....

வசந்த: அது இருக்கட்டும். கடைசியில் உங்கள் தந்தையார் போட்ட சவால் என்ன ஆயிற்று?

இளவரசன் (இடையைச் சுற்றிய கரங்களை இறுக்கிக் கொண்டே): அன்பே! நீ என்ன சொல்கிறாய்?

வசந்த: (சிரித்து) நல்ல ஞாபகம் உங்களுக்கு. அன்று பல்லக்குத் தூக்கிகளைத் துரத்தி என்னிடம் காதோடு ஒரு திட்டம் சொன்னீர்களே அதுவாவது நினைவு வருகிறதா?


இளவரசன்: ஆமாம். அதற்கென்ன? அதன்படிதானே நீ உன் தந்தையிடம் குரட்டூர் வழியாகச் செல்லும் பெண்ணை நதியை அணை போட்டுத் தடுத்தால், தகட்டூர் 'தண்ணீர் தண்ணீர்' என்று தத்தளிக்கும் என்று உபாயம் சொல்ல, அதைச் செயல்படுத்த உன் தந்தை முயல்வதை ஒற்றர்கள் மூலம் அறிந்த என் தந்தையார், மதியூகமாகச் சமாதானக் கொடி உயர்த்தி இரண்டு அண்டை நாடுகளையும் உன்னையும் என்னையும் இணைத்து வைத்தார்!

வசந்த: கதைச் சுருக்கத்துக்கு நன்றி! ஆனால் தூதுவர் மூலம் அனுப்பிய ஓலையில் 'உங்கள் சேனையைக் கைப்பற்றுவேன்' என்று சவால் விட்டிருந்தாரே... அதைக் கடைசியில் காற்றில் பறக்க விட்டுவிட்டாரே!

இளவரசன் (கன்னக் கதுப்பைக் கிள்ளி):

பேதைப் பெண்ணே! என் தந்தையா சவாலை மறப்பார்? சரித்திரத்திலேயே கிடையாது. அவர் குறிப்பிட்ட சேனை, குரட்டூரின் வாளேந்திய சேனை அல்ல... இனி என்னோடு எப்போதும் சண்டையிடப் போகும் இதோ... இந்த வசந்த சேனையைத்தான், புரிகிறதா?

(இளவரசர் விளக்கையும் வசந்தசேனையையும் ஒன்றன் பின் ஒன்றாக அணைக்கிறார்.]





5

மனம் என்பதென்ன ஏதோ பிரளயமா ஒரு நாள் வற்றிப் போவதற்கு?

ஒரு பதினைந்து நாள் தங்கும் உத்தேசத்தோடு மதுரை அத்தை வீட்டுக்கு வந்திருந்தாள் சுலோசனா. இது அம்மாவின் ஏற்பாடு. யோசனை சொன்னவள் அக்காள். உண்மையோ, பொய்யோ, அறிந்தோ அறியாமலோ நடந்து முடிந்துவிட்ட ஒரு நிகழ்ச்சியின் கசப்போடு, வேலையையும் ராஜினாமாச் செய்துவிட்டதால், தங்கை தொய்ந்த முகத்தோடு சோர்ந்து சோர்ந்து வீட்டுக்குள்ளேயே வளைய வருவதைக் கண்ட அவள் தான் அம்மாவிடம், ''ஏம்மா இவ ஒரு பத்துநாளு மதுரை அத்தைவீட்டுக்குன்னாலும் போயிட்டு வரட்டுமே, வெளியில சுதந்திரமா இருந்தவளுக்கு இப்ப கையைக் காலைக் கட்டிப் போட்ட மாதிரி இருக்குமில்ல'' என்றாள். முதலில் அம்மாவுக்கு மகன் என்ன சொல்வானோ என்ற அச்சம் இருந்தது. ஆனால் விஷயம் நாயனா மூலம் போனதால் அங்கீகாரமானது. 'சரி, ஒரு பத்து நாளைக்கி இருந்துட்டு வரச் சொல்லுங்க'' என்றான் அண்ணன்.

இவள் புறப்பட்ட சமயத்தில் மட்டும் ஒரு ஐந்தாறு சின்னப் புத்தகங்களை ஒரு சிறு கட்டாகக் கட்டி, 'மதுரையில வரதராஜு’னு ஒரு சிநேகிதன் வந்து கேட்பான். அவன் கிட்டக் குடுத்துடு' என்றான்.

மதுரையில் அந்த அத்தையின் வீடு கொண்டித்தொழு வடக்குத் தெருவில் இருந்தது. அங்கிருந்து வைகைநதி கூப்பிடு தூரம். இவர்கள் வீட்டு மாடியில் நின்று பார்த்தால் இரு கரை பரப்பு முழுவதும் தெரியும். குருவிக்காரன் சாலை பாலத்தின் வட பாதி நடமாட்டத்தை வேடிக்கை பார்க்கலாம்.

இவள் வந்து சேர்ந்த அந்த மாலையே மாடிக்குப் போய் வைகையைப் பார்த்த போது, அவளுக்குள் வியப்பு. எங்கே 'அந்த' வைகை? அதுதானா இது?

இவள் ஒரு ஆறு மாதத்துக்கு முன்பும் ஒரு விசேஷத்துக்காக இங்கு வந்திருந்தாள். அப்போது மழைக்காலம். ஆனாலும் இந்த நதி எப்படி ஓடிக் கொண்டிருந்தது!

'ஓடிக்கொண்டிருந்தது' என்ற பதம் சரியாகுமா?

சரியல்லதான்.

பிரளயம் எப்படி இருக்கும்? அதற்கு ஒரு சின்ன 'மாதிரி' போலல்லவா ஓடிக்கொண்டிருந்தது அது.

இரு கரை வரம்புகளையும் தன் பொங்குதலால் மீறி, தனக்குச் சொந்தமில்லாத பிரதேசங்களில், சர்வ நாசத்தை முதற் குறிக்கோளாகக் கொண்ட கொள்ளைக் கூட்டம் போல் புகுந்து, மனிதர்களை அலற அலற விரட்டி, நெஞ்சை மேம் பாலம் வரை தூக்கிச் சீறி மூச்சு விட்டு, கரங்களால் கட்டடங்களைப் பிளந்து, சரித்து, குடிசைகளை விரல் நகத்தால் கீறி மிதக்க விட்டுக் கரையோரத்து மக்கள் வயிற்றுத் தீயாகவல்லவா போய்க் கொண்டிருந்தது அது!

தென்னைகளைத் துரும்புகளாக மிதக்க விட்டுக் கொண்டு வந்து இந்தக் குருவிக்காரன் சாலை பாலத்தைத் தென் முனையில் பொடி செய்து அந்த இடத்தில் பத்துத் தென்னை மரங்களைத் தனது ஜெயஸ்தம்பம் போல் தலைகீழாய் நட்டு நிறுத்திவிட்டல்லவா போய்க் கொண்டிருந்தது!

நடக்க நடக்க ஆங்காரம் அதிகப்



பட்டதோ என்னவோ, கிழக்கே போகப் போக நாசம் கூடிக் கொண்டே போனதாக அல்லவா சொன்னார்கள். அங்கே கிராமம் கிராமமாக விழுங்கி விட்டிருந்ததே. விமானத்திலிருந்து எடுத்த படங்களில், எங்கும் பரந்த ஜலசமாதியில் கிராமக்குடில்களின் கூரைகள் தாமரை இலைகளாக மிதப்பது மட்டும்தானே தெரிந்தது.

அன்று வேடிக்கை பார்த்த கூட்டத்தில் இவளும்தான் இருந்தாள். அதன் வேகத்தை இவளும்தான் கணக்கிட முயன்றாள். ஏதோ அசைவற்று நிற்பது போல் போக்குக் காட்டிக் கொண்ட அதன் உண்மையான வேகம். கரையோரம் ஒரு சின்னப் பாறையின்முன் சுளித்தபோதல்லவா தெரிந்தது.

அப்படிப்பட்ட ஆங்கார சொரூபிணியாய் நர்த்தனமாடிய அந்த நதியா இப்போது, 'நானறியேன் சாமி' என்று கிடக்கிறது!

கலோசனாவுக்குத் திடீரென்று ஒரு சந்தோஷம். ஒருபிரளயமே ஓர் ஆறு மாதகாலத்தில் வந்த சுவடு தெரியாமல் காணாமற்போய் விட முடியுமானால், கேவலம் தன் மனுஷ வாழ்வில் ஒரு பருவ கால நிகழ்ச்சியின் நிழல் எத்தனை காலத்துக்கு நிலைத்துவிட முடியும்? அவளுக்கு எங்கோ படித்ததும் ஞாபகம் வந்தது.

'எல்லாம் மறந்துவிடும்.
எல்லாமே மறக்கப்பட்டு விடும்.'

அந்த அத்தையின் மகள் ருக்கு பாதி மெத்தைப் படியில் நின்றுகொண்டு கூப்பிட்டாள்.

''என்ன ருக்கு?''

''ஒன்னைத் தேடி யாரோ வந்திருக்காங்க.''

தன்னைத் தேடி யார் இந்த நகரத்தில், அதுவும் தான் வந்தும் வராததுமாக வந்திருக்க முடியும்? அவளுக்கு அண்ணன் சொல்லியிருந்த 'வரதராஜுலு' மறந்து போயிருந்தது. தவிர அந்த ஆளை அவள் இரண்டு மூன்று தினங்கள் கழித்துத்தான் எதிர்பார்த்தாள். தபால் போக்குவரத்துக்குப் பின்னால் அல்லவா அவன் வர வேண்டும்?

இவள் மேலே இருந்தவாறே ''யாரு ருக்கு?'' என்று கேட்டதும், ருக்கு மேலேயே வந்து, ''யாரோ வரதராஜுலுவாம்' என்று பதில் சொன்னாள்.

அந்த ஆளேதானா? அதற்குள் அண்ணன் இவனுக்கு எப்படித் தகவல் கொடுத்தான் என்று வியந்து கொண்டே படி இறங்க ஆரம்பித்தாள்.

வரதராஜுலு! ஆள் எப்படி இருப்பான்? பெயர் தருகின்ற கற்பனையில் ஒரு சுமாரான உருவம் கிடைத்தாலும், அவன் பெயர் தாங்கியிருந்த புத்தகங்களால் உருவம் சரியாக அமையவில்லை. இவள் அண்ணன் தந்த அந்தப் புத்தகக்கட்டை ரயிலிலே பொழுது போகட்டுமே என்று பிரித்துப் பார்த்திருக்கிறாள். 'கல்லாடம்' 'யுத்த காண்டம்' 'அழகின் சிரிப்பு' என்று இருந்தன. 'யாராவது வித்வானுக்குப் படிக்கிற ஆளாக இருக்கலாம்'வேஷ்டி ஸ்லாக்கோடு, கொஞ்சம் சுபாவமாக, வெளி வராந்தாவில் நிற்கலாம்' என்று கற்பனை செய்து வந்தவளுக்கு ஆச்சரியமாக, வாட்ட சாட்டமான ஓர் ஆள், பேண்ட், ஷர்ட்டில், நடு ஹால் சோபாவில் கால் மேல் கால் போட்டுச் சட்ட வட்டமாக உட்கார்ந்திருந்தான்.

'இவளைக் கண்டதும் எழுந்து 'ஹலோ' சொல்லி 'ஐயாம் வரதராஜுலு' என்று அறிமுகப் படுத்திக் கொண்டான்.

ஆனால் இவள் சாதாரணமாக 'ஓ, வாங்க! அந்த புஸ்தகம் விஷயமாத்தானே?' என்று கொஞ்சம் இழுத்துக் கேட்டாள்.

''ஆமா.''

''தர்றேன்'' என்று நேரே அறைக்குப் போனாள்.

இது வந்திருந்த வரதராஜுலுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. விஷயம், வந்தவுடன் Received the Contents என்ற அளவில் மட்டும் முடிந்து போகுமென்று அவன் நினைக்கவில்லை. புத்தகத்தை வாங்கிக்கொள்வதற்காக மட்டுமே என்றால் ஒரு துண்டுச் சீட்டோடு ஒரு கான்ஸ்டபிளை அனுப்பியிருந்



தால் போதுமே. அவன் இங்கே சுமாரான வரவேற்பை எதிர்பார்த்தான். அதோடு சென்னையில் இவளது வீட்டுக்கு வந்திருந்த இவனது இன்னொரு நண்பனொருவன் "யேய் நம்ம ரெங்கையாவோட ரெண்டாவது தங்கச்சி கிளியோபாட்ரா என்றும் 'ரொம்ப ஜோவியல்' என்றும் சொல்லி யிருந்தான். ஆனால் இப்போதோ... ஒருவேளை, இவள் முதல் தங்கையாக இருப்பாளோ? அப்படியானால் இவர்கள் வீட்டில் இவளை விட அழகான இன்னொரு பெண்ணா?

உள்ளே போய்க் கொண்டிருந்த சுலோசனாவுக்கும் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஒருவேளை இரண்டொரு உபசார வார்த்தைகள் பேசியிருக்கலாமோ?

வேண்டாம் வேண்டாம். இனிமேல் எந்தப் பயல்களோடும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்வதில்லை என்ற உறுதி அப்படியே இருக்கட்டும்.

இவளைத் தொடர்ந்து அறைக்குள் வந்த ருக்கு மெதுவாக 'அது யாரு?' என்று கேட்டாள்.

"தெரியல. அண்ணன் நாலைஞ்சு புத்தகங்கள் குடுத்து. வரதராஜுலுன்னு ஒரு நண்பன் வருவான். குடுத்துடுனு சொன்னாரு. அவ்வளவுதான் தெரியும்."

இதை இவள் இவ்வளவு தெளிவாகச் சொல்லவும் ஒரு காரணம் இருந்தது. இது தெரியா விட்டால், இவர்கள் ஏதோ தங்களுக்குள் ஒரு மர்ம ஏற்பாட்டில் காரியம் நடப்பதாக நினைக்கக் கூடுமல்லவா?

ஒரு 'தேங்க்ஸ்' உடன் புத்தகக் கட்டைப் பெற்றுக் கொண்ட வரதராஜுலு 'சரி, நாமேதான் கொஞ்சம் இழுத்துப் பார்ப்போமே' என்று 'நீங்க ரெங்கையாவோட செகண்ட் ஸிஸ்டர்தானே?' என்று கேட்டான்.

"ஆமா" என்று சொன்ன சுலோசனா தன்பழைய இயல்பாக அவன் முன்னால் இருந்த சோபாவில் உட்கார நினைத்து ஆனால் உறுதி குறுக்கிட்டவளாக அதைத் தடுத்துக்கொண்டாள்.

அவன் மெல்லிய புன்னகையோடு 'நீங்க ரொம்ப ஜோவியல்னு சொன்னாங்க' என்றான்.

ஆம். அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது இரண்டும் கெட்டு நின்றாள். உட்கார விரும்பி ஆனால் நின்று கொண்டு. அவளுக்கே தான் இப்போது தன் அக்காளாக மாறிவிட்டது போலிருந்தது. அவள் இப்படித்தான். எந்த ஆணாக இருந்தாலும் முன்னால் நின்று சேவகம் செய்வாள். அதோடு இவளுக்கே, தனக்கு நாணம் வந்துவிட்டது போலவும் இருந்தது. ஒருவேளை, ஒருத்தி இயல்பாக இருப்பதைத் தடுத்துக் கொண்டு காரியமாற்ற நேர்ந்தபோதுதான் நாணம் பிறந்ததோ?

இவளது 'நாணம்' வரதராஜுலுவுக்குச் சந்தோஷம் தந்தது. 'சும்மா முன்னால உக்காந்துக்கிட்டுப் படுபோடு போடுறா' என்று கேள்விப்பட்டிருந்த அவனுக்கு இப்போது இவளது நிலை, தனது தனிப்பட்ட ஆளுமையின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்ற எண்ணம். சும்மா சொங்கிகள் முன்னால் நடந்து கொள்கிற மாதிரியே தன்னிடமும் நடந்துகொள்ளத் தோணுமா என்ன?

சரி, இவன் பேச்சுக் கொடுத்துவிட்டான். இனிமேல் தான் பேசாமல் இருந்தால் நன்றாக இருக்காதென்று சுலோசனா "நீங்க....?" என்றாள்.

"ரெங்கையா ஒண்ணும் சொல்லலியா?"

"இல்லியே?"

"அட ஃபூல்."

இந்த வார்த்தையில் அவர்களது நட்பின் நெருக்கம் தெரிந்தது. ஆனால் அது மட்டும் போதுமா? இதற்குள் அங்கு வந்துவிட்ட அத்தை உள்ளிட்டு எல்லோரும் அடுத்து அவன் சொல்லப் போவதை எதிர்பார்த்தார்கள்.

'அட ஃபூல்' என்று சொன்னவன் சிறிது நேரம் அங்கலாய்த்தமாதிரி பேசாமல்இருந்துவிட்டு, 'நான் ரெங்கையாவோட டிரெயினி பாட்ச். ஒருஎஸ்.ஐ. இங்க கிரைம் பிராஞ்ச்ல வேலை" என்றான்.

இது அங்கே இருந்த எல்லோருக்கும் சந்தோஷம் கொடுத்தது. 'ஓகோ, அதுதான் இந்த வாட்டசாட்டமும், சட்ட வட்டமுமா' என்று பார்த்தார்கள்.

"அண்ணன் சொன்னதே இல்ல."

ருக்கு குறுக்கிட்டு, "அந்த பாவாவுக்கு நல்ல விஷயங்க மட்டும் மறந்துபோயிடும்" என்றாள்.


"இது நல்ல விஷயம்னு இன்னொரு நல்ல விஷயமும் சொல்றேன்."

"என்னா?"

"கேஸ்ட்டும் ஒங்க கேஸ்டுதான்."

இதில் அத்தை வகையறாவுக்குப் படு சந்தோஷம். அவள் உடனே அவனோடு தெலுங்கில் பேசத் தயாரானாள்.

"அப்ப நான் வரட்டுமா?" என்று வரதராஜுலு எழ முயன்றபோது அத்தை "உன்



மேடைப்பேச்சாளர்: "பொதுமக்களே! இங்கு என்னைப் பேசவிடாமல் ஈக்களும், கொசுக்களும் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இதுவும் மாற்றுக் கட்சிக் காரர்களின் சதியாக இருக்கும் என நினைக்கிறேன்!"

—ஈ. சோமசுந்தரம்



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகஸிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில், நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்
❋ கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00 ❋ சிகிச்சைக் கட்டணம் தனி

எமது கேட்லாக் வேண்டுவோர் ரூ. 1-00 ஸ்டாம்ப் அனுப்பியோ, M.O. செய்தோ பெறலாம்

எமது உயர்ந்த – விசேஷ – ஸ்பெஷல் மருந்துகள் கிடைக்கும்

உயர்ந்த ரக சிகிச்சை 1 மாதம் ★ விசேஷ சிகிச்சை 1 மாதம் ★ ஸ்பெஷல் சிகிச்சை 1 மாதம்

A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1 நெம்பர்
1500-00	750-00	500-00	400-00	300-00	200-00	175-00	150-00	115-00

ஹெட்டாபீசுக்கு லெட்டர் எழுதி V.P.P. மூலமும் பெறலாம். தேவையான சிகிச்சைக்கு டிராப்ட் மூலம் (பேங்க் ஆப் இந்தியா) வாங்கி அனுப்பினால் ரிஜிஸ்டர் பார்சல் மூலம் பெறலாம்.

மாதாந்திர சுற்றுப் பயண விபரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள்

சென்னை-600 001. பிரதி மாதம் 3-ந் தேதி ஹோட்டல் ரோஸ்வுட். -போன்: 24236. 190, NSC போஸ் ரோடு, பூக்கடை எதிரில். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

சென்னை-600 002, 4 முதல் 8ந் தேதி வரை. ராமச்சந்திரா லாட்ஜ், போன்: 846526 6, அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். காலை 7 முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி. அசோக் பவன், ஜங்ஷன் ரோடு, போன்: 25783, காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி: 14ந் தேதி. மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து. காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர்: 14ந் தேதி. ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

ஈரோடு: 15ந் தேதி. ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை: 21, 22ந் தேதி: மணீஸ் கேப் (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி: 23ந் தேதி: ராதா லாட்ஜ், ஜி.சி. ரோடு. காலை 9 முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23ந் தேதி. நெல்லை லாட்ஜ் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள்:

விழுப்புரம்: 3ந் தேதி. வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி. ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம்: 4ந் தேதி. ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம்: 5ந் தேதி. தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர்: 6ந் தேதி. அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

திண்டுக்கல்: 22ந் தேதி. ஆரிய பவான் லாட்ஜ் பழனி ரோடு. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

விருதுநகர்: 23ந் தேதி. ஹோட்டல் ஆர்ச் நேவா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம்: 23ந் தேதி. அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில்: 24ந் தேதி. உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி: 25ந் தேதி. பார்வதி லாட்ஜ் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

தலைமை அலுவலகம்:

சிவராஜ் சித்த வைத்தியசாலை

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)

காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007

டண்டா. காப்பி தாகேசி போத்தாம்'' என்று காப்பி எடுக்கப் போனான்.

வரதராஜுலு கலோசனாவைப் பார்த்து ''உக்காரேன்....உக்காருங்களேன்'' என்றான்.

நின்றதுதான் நின்றுவிட்டோம். அப்புற மென்ன என்று நினைத்த கலோசனா, ''இல்ல. பரவாயில்ல'' என்றாள்.

அவனுக்கு ரொம்ப சந்தோஷம்.

''ரெங்கையாவுக்குத் தொழில் மேலே ரொம்ப இன்ண்டரஸ்ட். டிரெயினிங் பீரியட்லேயே அலட்டிக்குவான்.''

''நீங்க?''

''நான் அரைக் கெணறு. ஒரு பெரிய கவிஞனா வரணும்னு நெனச்சுக்கிட்டு இருந்தவன். இன்னும் கூட இந்த வேலையில முழுமையாக ஒட்ட முடியலேன்னு பாத்துக்கங்களேன்.''

''ஓகோ. அதுதான் அந்தக் கல்லாடம், கலக்காரிகை எல்லாமா? அது சரி, என் அண்ணனுக்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம்? அவரு ஏன் இதை வாங்கினாரு?''

''அதா? அதுதான்தெரியல. ஒருநாளு திடீர்னு எனக்கும் நாலு தமிழ் புக்ஸ் குடு. படிக்கணும்னு கேட்டான். குடுத்தேன். படிச்சதா தெரியல. டிரெயினிங்கும் முடிஞ்சுது. படிச்சுட்டு அனுப்பறதாச் சொன்னான். ரெண்டு வருஷம் கழிச்சு இப்பத்தான் அனுப்பியிருக்கான். ஏதாச்சும் வீட்ல படிச்சானா?''

''புத்தகத்துக்கும் அவருக்கும் இப்பிடியொரு ஸ்நானப் பிராப்தி இருந்ததே எங்களுக்கு அவரு இதைக் கொடுத்ததும்தான் தெரியும்''.

இதைச் சொல்லும்போதே கலோசனாவுக்குத் தான் பழையபடி சரளப் பேச்சில் இறங்குகிறோமோ என்ற சந்தேகம்.

அத்தை காப்பி கொண்டு வந்தாள்.

காப்பி முடிந்ததும் வரதராஜுலு கலோசனாவைப் பார்த்து 'ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாங்களேன்' என்றவன், அதே தொடரில் அத்தையையும் பார்த்தான் — அழைப்பு எல்லோருக்குந்தான் என்கிற மாதிரி.

'வர்றோம்' — அத்தை.

''விலாசம் வேணுமா?'' — இதுவும் அத்தை தான்.

''ம்... விலாசமா? நான் ஆள் அனுப்புறேனே. ஏன், என்சிஸ்டரையே அனுப்புறேன்.''

''எதுக்கு சிரமம்?''

''இதுல என்ன சிரமம்?'' — அவன் எழுந்து கொண்டான். எழுந்து கொண்டபோது அவன் உயரத்தின் காரணமாக அவன் ஆளுமை மேலும் கால் மடங்கு அதிகமானது போல் பட்டது கலோசனாவுக்கு.

அவன் போனதும் அத்தை 'போனீஸ்ல இவ்வளவு அமெரிக்கையான பையனைப் பாக்குறது அபூர்வமில்லே?'' என்று சர்ட்டிபிகேட் கொடுத்தாள்.

இப்போது சோபாவில் உட்கார்ந்து கொண்ட கலோசனாவுக்கு சந்தோஷமாகத் தான் இருந்தது. எல்லாவற்றையும் மறந்து போய், விறுவிறுவென்று தன் உளறுவாய்த் தனத்தில் இறங்கிவிடாமல் தன்னைத் தடுத்துக்கொண்டதற்காக.



இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் மொத்த ஜனத் தொகை நூறு கோடியை எட்டிவிடும். இதில் நகரங்களில் வாழும் மக்கள் தொகை முப்பத்தி ஐந்து கோடியாகி விடும்.

இதே சமயத்தில் அமெரிக்க மக்களின் மொத்த ஜனத் தொகை 31 கோடிதானாம்!

உலகத்தில் ஆறில் ஒருவர் இந்தியராக இருப்பாராம்.

— 'மிர்ரர்' லிருந்து எம்.கே. நாராயணன்

அட. அடிப்படையில் இவன் கவிஞன் வேறயாமே! ரகுவாவது தான் கற்ற வித்தையைக் காட்டி ஏமாற்றினான். இவன் ஜாதிப் பிரியம்வரை இறங்கி வந்து அணைக்கப் பார்க்கிறான். எல்லாமே அப்பனை மிஞ்சுகிற சுப்பன்கள்தான்.

அதே சமயம் யாரோ ஒரு ஆணின் காரணமாக எல்லா ஆண்களையுமே ஒரே கோணத்தில் வைத்து அளக்க முற்படுவது சரியா என்ற கேள்வியும் கலோசனாவிற்கு உண்டாகாமல் இல்லை. ஆனால் அப்படி வைத்துப் பார்ப்பதால் பெரிய பாபம் ஏதும் நேர்ந்து விடும் என்றும் தோன்றவில்லை.

அவள் அறைக்கு வந்தபோது ருக்கு மெதுவாக, நாக்கைக் கடித்து விட்டுக் கேட்டாள், ''என்ன இந்த ஆளுகிட்ட மட்டும் ஒரு மாதிரி அடக்கமாவே நடந்துக் கிட்டே?'' என்று.

'இந்த ஆள் என்ன. இனிமேல் ஒரு கழுதை தன்னை ஆண் என்று சொல்லிக் கொண்டு வந்தாலும் இப்படித்தான் நடந்துகொள்ளுவேன்' என்று இவள் மனத்துக்குள் சொல்லிக்கொண்டாள்.

ஆனால் திடீரென்று அவளுக்குள் ஒரு வியப்பும் திகைப்பும். 'அட இது என்ன! ஒன்றை மறந்து விடுகிறேன், மறந்துவிடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே அதன் அஸ்திவாரத்திலேயே எல்லாக் காரியங்களையும் எழுப்புகிறேன்.

'ஓ. மனத்தைப் பிரளயத்தோடு ஒப்பிட்டது எவ்வளவு தவறு! பிரவாகம் என்பது எவ்வளவு ஆடிக் குதித்தாலும் ஒரு பொழுதில் முற்ற முற்ற வற்றிப் போகின்ற ஒன்று. ஆனால் மனம்? இது வெட்ட வெட்டத் தழைக்கிற அசுரர் தலை. அடக்க அடக்க ரயிலையே உதைத்துக் கிளப்புகிற நீராவி.'

அவளுக்குப் பயம் வந்தது. (தொடரும்)

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

நீங்கள் புட்டிப்பால் கொடுக்கும் அவசியம் நேரும்போது கவனமாய் இருங்கள்.

கீழ்க்காணும் 5 முக்கியமான குறிப்புகளைப் பின்பற்றுங்கள்...

1. தொற்று கிருமிகளைத் தவிர்த்திடும் வகையில் பீடிங் பாட்டில், நிப்பிள், மற்றய பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கு சுத்தம் செய்து நீரிலிட்டுக் கொதிக்கச் செய்யவும். இல்லையெனில் பாலில் எளிதில் கிருமிகள் தோன்றிவிடும்.

2. நீரை பத்து நிமிடம் கொதிக்க வைத்து, உடல் வெப்பத்தைவிட சிறிது அதிகமாகவே ஆற வைத்த பின் பால் பவுடரைக் கலக்கவும்.

3. அதிக நீரை கலந்திடாதீர்கள், அதனால் சத்து குறைந்து விடலாம். டின்னின் மேல் கொடுத்துள்ள பால் புகட்டும் அட்டவணையைப் பின்பற்றவும்.

4. ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் புதிதாக பாலைத் தயாரிக்கவும். மீந்துவிட்ட பாலை குழந்தைக்கு கொடுக்காதீர்கள், அதில் கிருமிகள் தோன்றி கெட்டுவிடுகிறது.

5. டின்னின் மேல் கொடுத்துள்ள எல்லா விதிமுறைகளையும் பின்பற்றவும். ஏதாவது சந்தேகம் இருப்பின் டாக்டரிடம் ஆலோசனை கேட்கவும்.

வாங்குவீர் க்ளாக்ஸோ சன்ஷைன்—நம்பகமான குழந்தைப் பாலுணவு

க்ளாக்ஸோ சன்ஷைன் சரிவிகித ரீதியில் சரியான அளவு புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், இரும்புச்சத்து போன்றவற்றைக் கொண்டது. இது சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, டின்னில் அடைக்கப் படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.



க்ளாக்ஸோ

—தாய்மார்களின் நம்பிக்கைக்குரியது.

CASGLS-IR-203 TAM





✠ அஹோராத்ர புஷ்கரணி

ஒப்பிலியப்பன் கோவில்

திருத்தலம் கண்டேன்



✠ உற்சவர் ஸ்ரீ வேங்கடாசலபதி, பூமிதேவி

கும்பகோணத்துக்குக் கிழக்கே மூன்றுவது மைலில் பூலோக வைகுண்டம், திருவிண்ணகர், உப்பிலியப்பன் கோவில் என்றெல்லாம் பக்தர்களால் அழைக்கப்படும் ஒப்பிலியப்பனின் கோவில் இருக்கிறது. திருப்பதியில் நின்று அருள் வழங்கும் வேங்கடவனுக்கு அண்ணன் என்று இப்பெருமானைக் குறிப்பிடுவார்கள். திருப்பதிக்கு நேர்ந்து கொண்ட பிரார்த்தனை ஏதாவது காரணம் கொண்டு செலுத்த முடியாமல் போய்விட்டால் இந்த ஊரில் செலுத்தி விடலாம்.

இந்த க்ஷேத்திரத்தில் மார்க்கண்டேய மகரிஷி தவம் புரிந்து வந்தார். பூமிதேவி ஒரு குழந்தை வடிவில் துளசிச் செடியின் அடியில் இவருக்குக் கிடைத்தாள். முனிவரும் மிக்க மகிழ்ச்சியுடன் அக் குழந்தையை வளர்த்து வந்தார். உரிய பருவம் வந்ததும் பகவான் வந்து அப்பெண்ணைத் தனக்கு மணம் புரிந்து வைக்கும்படி கேட்டார். ஆனால் முனிவருக்கு மகளைப் பிரிய இஷ்டமில்லை. தட்டிக் கழிப்பதற்காக ''ஐயா, என் பெண் மிகவும் சிறியவள். உப்பிட்டுச் சமையல் செய்யக்கூட அவளுக்குத் தெரியாதே'' என்று கூறினார்.

பகவான் ''அப்படியே ஆகுக. நான் உப்பில்லாமலேயே உணவு உட்கொள்ளுவேன்'' என்று கூறித் தம் சுய உருவைக் காட்டவே மகரிஷி மகிழ்ந்து மகளைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

தாம் கொடுத்த வாக்கை மீறாமல் பகவான் இன்னும் உப்பில்லாமலே அமுது செய்கிறான். கோவில் பிரசாதங்களில் உப்பே கிடையாது. பிரஸாதங்களைப் பெற்றுக்கொள்வோர் வீட்டுக்குச் சென்று கூட உப்புச் சேர்த்து உண்ணக் கூடாது.



✠ மூன் ராஜ கோபுரம்

ராஜலக்ஷ்மி ராகவன்

கருடன் சன்னதியைத் தாண்டி உப்பைக் கொண்டு போகக் கூடாது. கருடன் சன்னதியின் முன் பிரார்த்தனையாக உப்பைக் கொண்டு வந்து கொட்டுவார்கள்.

திருப்பதியைப் போலவே முடி இறக்குதல், அங்கப் பிரதட்சிணம் செய்தல், எல்லாம் இக்கோயிலிலும் உண்டு. ரூ. 250 கட்டினால் பெருமாளுக்கும் தாயாருக்கும் திருக்கல்யாணம் செய்வித்து மகிழலாம். ஊஞ்சல், லாலி, மாலை மாற்றல், தேங்காய் உருட்டுதல் எல்லாம் செய்கிறார்கள்.

ஸ்வாமிக்கு நேர்த்திக்கடனாகப் பெரிய திருமஞ்சனம் செய்விப்பார் உண்டு. சர்க்கரையாலும் மஞ்சள் பொடியாலும் அபிஷேகம் செய்ததும் ஒவ்வொரு தடவையும் திருக்கண்கள், திருநாசி, திருவாய் முதலியவைகளை மாத்திரம் துடைத்துவிட்டுக் கற்பூர ஹாரத்தி எடுப்பார்கள். அப்பொழுது அப்பனின் அழகு வர்ணிக்க முடியாத ஒன்று.

தனக்கு நிகரில்லாதவன் (தன் ஒப்பார் இல் அப்பன்) என்று ஆழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்டமையால் ஒப்பிலியப்பன் ஆனார். படங்கள்: ராமகிருஷ்ணா

கலைமாமணி பெற்ற கரகமணி

"கரகாட்டம் என்பதை ஏதோ கிராமத்தில் ஆடும் சாதாரண ஆட்டமாக எல்லோரும் நினைத்துவிடுகிறார்கள். ஆனால் அதற்குள் நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்டைய பொக்கிஷமே மறைந்திருக்கிறது என்று சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும் இல்லையா?"

என்று வினா எழுப்புகிறார் சென்ற வாரம் கலைமாமணி விருது பெற்ற திருமதி அய்யம்மாள்.

மதுரையில் பிறந்த இந்த முப்பது வயதுப் பெண்மணி, இக்கலைக்கே தந்தை என்று சொல்லப்படும் பெரியசாமி அவர்களிடம், ஐந்தாண்டுகள் கலைப் பயிற்சி பெற்றிருக்கிறார். பதினெட்டு வயதிலிருந்து கரகம் ஆடிவரும் இவர், கலாசாரத் தூதுக் குழுவில் இடம்பெற்று அமெரிக்காவுக்கும் சென்று வந்திருக்கிறார்.

மேல் நாட்டவர் எங்கள் குழு தலையில் கரகத்துடன் நடத்திய சாகஸங்களைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஆட்டம் முடிந்தவுடன் ஒவ்வொன்றைப் பற்றியும் துருவித் துருவி விசாரித்தார்கள். அங்கு இருக்கும் விஷ்ணு தேவானந்த் அமெரிக்கர் சார்பாகக் 'கலைவாணி' என்ற பட்டமும் கொடுத்தார். ஏராளமான பரிசுகளும் குவிந்தன.

இதெல்லாம் மேலை நாட்டில். நம் நாட்டில் கரகத்தின் நிலை...? இப்போது ஓரளவு ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் மற்ற நாட்டியங்களும், இசையும் பெற்ற அளவுக்கு இது மகத்துவம் பெறவில்லைதான்...."

என்று வருந்துகிறார் திருமதி அய்யம்மாள்.

கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடுவது என்பது எப்போது ஏற்பட்டது?

கோயில்களில் உள்ள தெய்வங்களுக்கு நீராட்ட ஆற்றிலிருந்து நீர் எடுத்துக் கொண்டு வந்தார்கள். இதைக் கும்பம், கலசம் போன்ற செம்புகளில் கொண்டு வந்தார்கள். பிற்காலத்தில் வாத்திய இசைக் கருவிகள் முழங்க வந்தபோது தானே ஆட்டம் பிறந்தது! இதனுடைய வளர்ச்சி வடிவமே கரகாட்டம்!

மற்றொன்று, மற்ற எல்லா ஆட்டங்களுக்கும் 'கலப்பட' இசைக் கருவிகள் துணை புரிகின்றன. ஆனால் மேளம், பறை கொட்டு, முழவு எனப் ப மையான தமிழக இ கருவிகள் மட்டுமே இதற் துணை புரிகின்றன.

எல்லா நாதங்களுக்கும் அடிப்படை சப்த ஸ்வரங்கள்தான் என்கிறார்கள். ஆனால் தமிழர்கள் ஒரு தனி அடிப்படையை அந்தக் காலத்திலேயே நிறுவியிருக்கிறார்கள். 'தன் தன தனன, தன் தன தனன' என்பதுதான்.


கிராமியக் கலைகளுக்கென்றே ஒரு தனிக்கல்லூரி நிறுவ வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசான் திரு பெரியசாமியின் இலட்சியம் என்கிறார் இக் கலைமாமணி.

பேட்டி: மஞ்சுளா ரமேஷ்






எளிமை மிகு ப்ளெயின் - அல்லது ஏற்றமிகு ஃபேன்ஸீ



எஸ்.குமார்ஸ் பெயர் உன்னத தரத்தின் சின்னம்.




எஸ்.குமார்ஸ் துணிகளின் அணிவகுப்பு...உங்களுக்கெனவே உருவான தனிப்படைப்பு. எஸ்.குமார்ஸ் ப்ளெயின் ஸூட்டிங்குகள்...வானவில்லின் வண்ணக் குவியல். டெக்ஸ்டைல்ஸ், செகவுகள்—மொத்தத்தில் அழகான ஃபினிஷ் அடுக்கடுக்கான படைப்பு... அத்தனையும் உங்களுக்கே!

எஸ்.குமார்ஸ் ஃபேன்ஸீஸ்—விதவிதமான தொழில் உத்தி மூலம் விநோதமான கற்பனைகளின் எழில் வடிவம் ஃபேன்ஸி நெசவு. ஃபேன்ஸி டிசைன். எல்லாமே ஃபேன்ஸி மயம். தேர்ந்தெடுக்க வகை வகையான சீர் வரிசை. செலவிடும் பணத்திற்கேற்ற சிறப்பு எஸ்.குமார்ஸ் ஃபேன்ஸீஸ்—உருவாகும் ஒவ்வொரு மீட்டரிலும் சீரிய கவனம்...சிறப்பான சிக்கனம். இன்னொரு முறை எஸ்.குமார்ஸ் புரிந்து விட்ட சாதனை—அதி உன்னத தரம்...மிகக் குறைந்த விலை.

எனவேதான் எங்கள் விற்பனையாளரிடமிருந்து துணி வாங்கும்போது, ஒவ்வொரு மீட்டரிலும் உயர்ந்த தரத்தைப் பெறுகிறீர்கள்—நயமான விலையில்!





'டெரீன்' மற்றும்
பாலிஅக்ரான்.
ஸூட்டிங்,
ஷர்ட்டிங், புடவைகள்,

S. Kumars®

'சிரஞ்துன்', 99, மரீன் ட்ரைவ், பம்பாய் 400 002

மிகக் குறைந்த விலையில்
அதி உன்னத தரம்...


Sista's SK-155-A/81 TAM




ADWAVE NCC/1956

'முரா' பானம் அருந்தியிருக்கிறீர்களா?

படங்கள்: 1. சிரியர்களுக்கு இஸ்லாத்தின் பெருமையை நினைவூட்டும் மசூதிகளில் ஒன்று. 2. சிரியா பாலைவனத்தில் இடியாதேற புராதனக் கட்டிடம் அந்நாட்டின் தொன்மையான நாகரீகத்துக்கு எடுத்துக்காட்டு.





இரா. அன்பரசு



பாராளுமன்ற சபாநாயகர் பலராம் ஜாகர் தலைமையில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சிரியா, குவைத், துபாய் ஆகிய நாடுகளுக்குப் போயிருந்தார்கள். ஐந்து பேரில் ஒருவர் இ. காங்கிரஸ் உறுப்பினர் இரா. அன்பரசு. அவரைப் பேட்டி கண்டபோது...

● சிரியா ஒரு முஸ்லிம் நாடு என்றாலும், தலைநகரான டமாஸ்கஸில் இருக்கும் முஸ்லிம் பெண்கள் ஐரோப்பியப் பெண்களைப் போலவே மிகவும் சகஜமாய்ப் பழகுகின்றனர். ஒரு விருந்தில் எங்களைக் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு வரவேற்றனர் அந்த நாட்டுப் பெண்கள்!

● அந்த நாட்டு மக்களுக்குத் தெரிந்த இரண்டு இந்தியப் பெயர்கள்; இந்திரா காந்தி ஷம்மி கபூர்.

● அடிக்கடி இஸ்ரேலுடன் மோதிக்கொண்டிருப்பதால் ஏராளமான ராணுவத் தளவாடங்களை ரஷ்யாவிடமிருந்து சிரியா வாங்கியிருக்கிறது. ஆனால் அவைகளைப் பாதுகாப்பாக வைக்க இடங்கள் இல்லை. இதனால் போரில் சுலபமாக இவற்றை அழித்து விடுகிறது இஸ்ரேல்.

● ஒரு விருந்தின்போது ''முரா'' என்ற பானம் வழங்கப்பட்டது. ஒரே ஒரு கோப்பையில்தான் அந்தப் பானம் கொடுக்கப்பட்டது. வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் கொஞ்சம் கொஞ்சம் அருந்திவிட்டு இன்னொருவருக்குக் கொடுத்தார்கள். காப்பியுடன் ஏலக்காய் போன்றவை போட்டு, நல்ல மணமுள்ளதாக இருந்தது இந்தப் பானம்.

● ஓட்டல் அறையைப் பூட்ட நான் முயன்றபோது அங்கிருந்த பணியாள் என்னைத் தடுத்துப் பூட்ட வேண்டாம் என்று கூறிவிட்டார். திருடு, போன்ற குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் உண்டு என்பதால் அங்கு திருடு என்ற பேச்சே இடையாது. கதவைப் பூட்டாமல் பெட்டிகளை யெல்லாம் பூட்டாமல்தான் நாங்கள் வெளியே சென்றோம்.

● ஆடு மேய்ப்பவர்கள் லாரிகளில் ஆடுகளை ஏற்றிக் கொண்டு வந்து மேய்ச்சலுக்கு விடுகின்றனர்.

● டாடா கம்பெனியின் பிரதிநிதி ஒருவர் துபாயில் குடித்துவிட்டு வேகமாகக் கார் ஓட்டியதற்காகப் பத்து கசையடிகளைத் தண்டனையாகப் பெற்றாராம்.

● சிரியாவில் நடைபெற்று வரும் ஜனாதிபதி ஆட்சி முறையைப் பற்றிப் பிரதமரிடம் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறேன்.

பேட்டி : ப்ரியன்

ஆபீசுக்குள் நுழைந்து அட்டெண்டென்ஸில் கையெழுத்துப் போடும்போதே மீராவின் கண்கள் கண்ணனைத் தேடின.

காணோம்.

சீட்டில் போய் உட்கார்ந்து, ஆசுவாசப்படுத்திக்கொண்டு 'க்ளோக் ரூமுக்கு'க் கிளம்பினள்.

பஸ் பிடித்து, ரயில் பிடித்து, அரை கிலோ மீட்டர் நடந்து ஆபீஸ் வந்து சேருவதற்குள் முகமெல்லாம் எண்ணெய் வழிந்து தலை கலைந்து, வீட்டிலிருந்து கிளம்பும்போது செய்து கொண்ட அலங்காரத்தை அர்த்தமில்லாததாக ஆக்கிவிடுகிறது என்கிற தாபம் அவளுக்கு எப்போதும் உண்டு.

'க்ளோக்' ரூமில் கலைந்த தலையைச் சரியாக்கிக் கொண்டு, முகம் அலம்பி, ஹேண்ட் பாக்கில் கொண்டுவந்த வானிஷிங் கிரீமைப் போட்டுக் கொண்டு ஒரு கோட் 'சாண்டல் வுட்' பவுடரைப் பூசிக் கொண்டதும்தான் அவளுக்குத் திருப்தி வரும்.

அலங்காரத்தை முடித்துக் கொண்டு சீட்டிற்கு அவள் மறுபடி திரும்பியபோது மணி பத்து இருபத்தைந்து.

கண்ணனைக் காணோம்.

பிங்க் கலர் என்றால் கண்ணனுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

சென்ற வாரம் பிங்க் கலரில் வாங்கியிருந்த 'இம்போர்ட்டட்' அமெரிக்கன் புடவையைக் கட்டிக் கொண்டு வந்திருந்தாள். எப்படி இருக்கிறது என்று கண்ணனின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம் என்றால் அவனைக் காணோம்.

மீராவின் கணவன் சாரங்கனுக்கு அமெரிக்கன் ஜார்ஜெட் புடவை என்றால் பிடிக்காது. 'டிரான்ஸ்பெரண்டா' இருக்கிறது என்பதால் அவனுக்குப் பிடிக்காது. மீராவுக்கோ அமெரிக்கன் ஜார்ஜெட்தான் ஃபேவரிட்.

'அமெரிக்கன்' கட்டிக் கொண்டு வருகிற நாட்களில் அவன் ஆபீஸ் கிளம்பியதும் தான் அதைக் கட்டிக் கொள்வாள். இல்லாவிடில் அவன் முகத்தால் அடிப்பான். மாலை வேளையிலும் அவன் நாலு மணிக்கே ஆபீஸிலிருந்து கிளம்பி வீட்டுக்கு ஐந்துக்குள் சென்றுவிடுவாள். அதன் பிறகுதான் சாரங்கன் வருவான்.

கண்ணனைக் காணோம்.

மணி பத்தே முக்கால் ஆகிவிட்டது. லீவாகத்தான் இருக்கும். தான் மறுநாள் லீவு போடப் போவதை முன் தினம் அவன் சொல்லவில்லையே என்று நினைத்துக்கொண்டாள்.

'என்ன மேடம்... திடீர்னு சொல்லாம லீவு போட்டுட்டீங்க... என்னமோ ஏதோ காணோமேன்னு நேத்திக்கெல்லாம் யோசனை பண்ணிண்டே இருந்தேன்' என்று அவள் எப்போதாவது திடீரென்று லீவு போடும்



சமயம் கண்ணன் சொல்லிக் கொண்டே இருப்பான்.

'என்னைச் சொல்லிவிட்டு, சொல்லாமல் நீங்கள் மட்டும் லீவு போட்டு விட்டீர்களே' என்று கண்ணனிடம் கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

கண்ணனிடம் அவள் பேசுவதைக் கண்டாலே சூப்பிரெண்டெண்ட் ராமசாமிக்குப் பிடிக்காது.

'இவளும் கல்யாணமானவள். அவனும் கல்யாணமாகி ஒரு குழந்தைக்குத் தகப்பன். ரெண்டு பேருக்கும் அப்படி நாளெல்லாம் என்ன பேச்சோ... பார்க்கவே அசிங்கமா இருக்கு' என்று அவர் கமெண்ட் அடித்து அது மீராவின் காதுக்கு வந்தது.

'என்ன சார்.. எனக்குப் பின்னாலே என்னைப் பற்றி ஏதேதோ கமெண்ட் அடிக்கிறீர்களாமே!' என்று மீரா அவரிடம் நேராகக் கேட்டபோது மனுஷர் வெலவெலத்துப் போய்விட்டார்.

'ஐயையோ... நான் ஒண்ணுமே சொல்லலையே' என்று அவர் பயந்த முகத்தோடு பதறினதைக் கண்டதும் 'ஒழிஞ்சு போறான் மனுஷன்' என்று விட்டு விட்டாள்.

கண்ணன் வராமல் இவள் சற்றுத் தவித்து விட்டு வேலை செய்ய ஆரம்பித்ததைக் கண்டு அவர் ஒரு விதத் திருப்தியுடன் இருப்பதை மீராவும் கவனித்துக் கொண்டாள்.


'குமரன் சில்க்ஸ்' கடைக்குப் பணம் கட்டவும், தங்க மாளிகையில் சீட்டுக் கட்டவும் பணம் கொண்டு வந்திருந்தாள். மாதா மாதம் கண்ணனிடம் கொடுத்துத்தான் கட்டச் சொல்வாள். ஒரு மாதம், ஏதோ பிரமேயமாக அவள் போக நேர்ந்து அவனே கட்டிவிட்டான்.

'என்ன மேடம் என்னிடம் நம்பிக்கை போய்விட்டதாக்கும்... என்ன இருந்தாலும் நான் அயல் மனுஷன்தானே!' என்று கண்ணன் நிஷ்டூரப்பட்டுக் கொண்டதிலிருந்து, அவனிடம் கொடுத்துப் பணத்தைக் கட்டச் சொல்வாள்.

''மீரா நேத்திக்குத் தயார் செய்த ஸ்டேட்மெண்டைக் கம்பேர் செய்யலாமா? ஃப்ரீயா இருந்தா வாருங்கள்'' என்று ராமசாமி கூப்பிட்டார்.

'தானுகப் பார்த்துக் கொள்ள வேண்டியது தானே! எதிரில் உட்கார வைத்துக் கொண்டு ஏதாவது இளிக்க வேண்டும் என்று நைப்பாசை... என்ன வயசானால் என்ன! இதுகளுக்கெல்லாம் சபலம் போகாது!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டு நாற்காலியை இழுத்து அவர் எதிரில் போட்டுக் கொண்டு அவள் உட்காருவதற்கும் கண்ணன் ஆபீசில் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

வரும்போதே பார்வையால் இவளைத்தேடி ஒரு புன்சிரிப்பை உதிர்த்து தலையசைத்து 'குட்மார்னிங்' கூறுவது போல் 'விஷ்' செய்தான். இவ



ளும் அதே பாணியில் 'விஷ்' செய்தாள்.

கண்ணனைக்கண்டதும் ராமசாமியின் முகத்தில் வெறுப்புக் கலந்த கருக்கம் படர்ந்ததையும் கவனித்தாள்.

'லேட்' ஆகிவிட்டதால் அட்டெண்டென்ஸை எடுத்துக் கொண்டு கண்ணன் மேனேஜரின் அறைக்குள் நுழைவதைக் கண்டாள்.

''சார்... சற்றுத் தலைவலியாக இருக்கு. காண்டீனில் ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டு வந்து விடுகிறேன். பரவால்லேன்னு மத்தியானம் ரெண்டு மணிக்கு கம்பேர் பண்ணிக்கலாமா?'' என்றாள் ராமசாமியிடம்.

கண்ணன் வருவதைக் கவனித்ததுமே, இனி இவள் ஒழுங்காக 'கம்பேர்' செய்யமாட்டாள் என்று முடிவெடுத்திருந்த அவர், அவளாக அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்றதும் ''அதனுலென்ன, பரவாயில்லே... நான் சுந்தரை வைத்துக் கம்பேர் செய்து கொள்கிறேன்'' என்று அவளை அனுப்பி விட்டார்.

காண்டீன் போய் அவசரம் அவசரமாய் ராமசாமியிடம் சொல்லி விட்டோமே என்பதற்காக ஒரு 'கப்' காப்பி சாப்பிட்டு விட்டு மீரா சீட்டுக்குத் திரும்புவதற்கும் கண்ணன் அவளுக்கு எதிரில் உள்ள தன் சீட்டில் உட்காருவதற்கும் சரியாக இருந்தது.


''மட்டம் அடிச்சுட்டீங்களோன்னு நினைச்சுட்டேன்'' என்றாள்.

''வொய்ஃபுக்கு உடம்பு சரியில்லே. நல்ல ஜுரம். டாக்டரிடம் அழைத்துப் போனேன். லேட் ஆயிடுத்து. லீவு போடலாம்னு ஒரு யோசனைதான்.... வொய்ஃபும் சொன்னு... காஷுவல் லீவு வேறே கிடையாது. பிரிவிலேஜ் லீவுதான். யோசனையா இருந்தது. அதோட தங்க மாளிகையிலே நீங்க சீட்டு கட்ட வேண்டியது இன்னிக்குத்தான் கடைசி நாள். அவஸ்தைப்படப் போறேளேன்னு...''

''பரவாயில்லேயே.. வொய்ஃபுக்கு உடம்பு சரியில்லேன்னு நீங்க துடிதுடிச்சுப் போயிருக்கிற சமயம்கூட என் ஞாபகம் இருக்கே... தேங்க் யூ...''

''இந்த மாதிரி சந்தர்ப்பத்திலே ஒருவேளை நீங்க என்னை மறந்துடுவேளோ என்னமோ... அதான் அதே மாதிரி என்னையும் நினைக்கிறேன்....''

''இதுவும் பேசுவீங்க... இன்னும் பேசுவீங்க... ஒரு தடவை 'பீரியட்' சமயத்திலே



-செம்பூர் சந்துரு

ஒரு நாள் ரொம்ப வயத்து வலின்னு லீவு போட்ட போதுகூட பக்கத்து வீட்டுக்குப் போய் நான் லீவுன்னு உங்களுக்குப் போன் செய்ததை மறந்துட்டீங்களா?''

''சாரி...சாரி... சும்மா வார்த்தைக்குச் சொன்னேன்... பை த பை.. இது லாஸ்ட் வீக் வாங்கிய புடவை தானே... உங்களுக்குப் பிரமாதமா இருக்கு....''

''இதுவும் லேட் ஞுனிலே இன்னென்னும் வந்தது. அதுவும் பிரமாதமா இருந்தது. பிங்க் கலர் உங்க ஃபேவரிட் ஆச்சேன்னு இதையே செலக்ட் செஞ்சேன்.''

''ஐ ஆம் ஹானர்ட்...'' என்றுன்.

''அடுத்த வாரம் எங்களோட மேரேஜ் டே வரது. அவருக்கு பாண்ட் ஷர்ட் எடுக்க உங்களைக் கூட்டிண்டு போய் சலினிங் செலக்ட் பண்ணலாம்னு இருந்தேன். வொய்ஃபுக்கு உடம்புன்னு சொன்னீங்களே!''

''அதனுலென்ன... பாண்ட் ஷர்ட் வாங்க அதிகப்படி அரை மணி ஆகும். நானும் அடுத்த வாரம் வொய்ஃபுக்குப் புடவை வாங்கணும்னு இருந்தேன். நீங்களே செலக்ட் பண்ணி வாங்கிக் கொடுங்கோ... துணி வாங்கிட்டுப் பதினென்னும் நம்பர் பஸ் பிடிச்சு மாம்பலம் போய்த் தங்க மாளிகைலே சீட்டுக் கட்டிட்டு நான் போயிடுவேன்'' என்றுன்.

இதற்குள் மீராவுக்குப் போன் வரவே அட்டெண்ட் செய்யப் போனுள்.

கண்ணன் பைலைப் பிரித்து வேலை செய்யத் தொடங்கினன்.

''ரொம்ப பிஸியா?'' என்று மீராவின் குரல் கேட்டு நிமிர்ந்து லேசாக முறுவலித்தான்.

''என்னோட ஹஸ்பண்ட்தான் போன்செய்தார்.... சலினிங் யாரோ அவரோட ஆபிஸர் வீட்டுக்கு ஒரு பார்ட்டிக்குப் போகணுமாம். என்னையும் வரணும்னர். தானே சலினிங் வந்து பிக்கப் பண்ணிண்டு போறேன்னர். சரின்னுட்டேன்... நீங்க மிஸ்டேக் பண்ணிக்கலேன்னு நாளைக்குப் போய்த் துணி வாங்கிக்கலாமா?...பாவம்...உங்க வொய்ஃப் வேறே உடம்பு சரியில்லாம வீட்டிலே இருக்காங்க. நீங்க தங்க மாளிகைலே சீட்டுக் கட்டிட்டு வீடு போறதுக்கே ஏழாயிடும். ப்ரோக்ராம் கான்சல் ஆனதும் நல்லதுக்குத்தான்'' என்றாள்.

''கரெக்ட்... கரெக்ட்... ப்ளெஸ்ஸிங் இன் டிஸ்கய்ஸ்தான்... ஆமாம்... அமெரிக்கன் கட்டிண்டால் உங்க ஹஸ்பெண்டுக்குப் பிடிக்காதே... சலினிங் இதோட உங்களைப் பார்த்தால் கோவிக்கக்க மாட்டாரா?''

''பரவாயில்லேயே... நான் நினைச்சதையே நீங்களும் சொல்றீங்க.... சலினிங் எல்லாம் சிடுசிடுன்னுதான் இருப்பார். பார்ட்டி முடிஞ்சு வீட்டுக்குப் போனதும் என்னோட 'யூஷுவல்' மெதேட்லே அவரைச் சரிக்கட்ட வேண்டியது தான்'' என்று கூறி ஒரு மாதிரி சிரித்தாள்.

அந்தச் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அவனும் சிரித்தான்.

அவர்களது சிரிப்பைக் கண்டு ராமசாமி முகத்தைச் சுளித்துக் கொண்டு தமக்குள்ளாக ஏதோ முணுமுணுத்துக் கொண்டார்.

மாலை சூட்டி மகளுக்கு
மண வாழ்த்தொலிக்க ஓலை தீட்ட வாரீர்
உங்கள் தவம் பலிக்க...



வாழ்நாள் கனவுகள் பலிக்க...

வாச மல்லிகை வீசிட...
வாழைகட்டி உங்கள்
வாசலில் கொட்டுமேளம் வாசிக்க...

ஆசைச் செல்விக்கு இல்லற வாசல்
திறக்க...

வருகுதே நாளும் கோளும், வருகுதே
வரன் - -

கல்விமானும், கைநிறைவாய் நல்வருவாய்
காண்பவனும், நற்குடி மகனும்,
பெற்ற தாய்தந்தைக்கு
இணையாய்ப் பெண் மீது
பேரன்பு பொழிபவனும்...

எப்படி எங்கு தேடுவீர் அப்படி ஒருவனை ?
ஏடு விரித்து அழைக்கின்றோம்
தேடிக்கொள்வீர் - - தேர்ந்த வரன் !
குலமும் கோத்திரமும்
உயர் குடும்ப நிலையும்,
படிப்பும் பணமும் பண்பும் ஏற்றமுறப்
பொருந்துமாறு - -

எடுத்த எடுப்பில் கிட்டும் - -
பல்லாயிரம் குடும்பங்கள் ஆதரித்த
பாதையிலே, உங்கள் செல்விக்கு - -
மனம்போல் மாங்கல்யம் ...

உளம்போல் தேர்ந்தெடுப்பீர்.
விளம்பர மேடை இதோ

THE TIMES OF INDIA

THE MATRIMONIAL COLUMNS

BOMBAY • DELHI • AHMEDABAD

டைம்ஸ் ஆஃப் இந்தியா திருமணப்பத்திகள்
"காலங்கள்" எல்லாம் சுபம் சுபம் சுபம் !

SIMOES/BC/MAT/5/81

க்யூ



அகஸ்தியன்

''அடப் பாவி....மணி ஒன்றரை கூட ஆவல்லே. மூணு மணி ஆட்டத்துக்குக் கியூ இவ்வளோ நீளமாயிருக்குது...''

''ஒண்ணு ஐம்பது கிடைக்காது. சோமு. ரே ஞ்ண்டிலே நிக்கலாம்.''

''அட்வான்ஸ்லே நிறையப் போயிருக்கும். சான்ஸ் இல்லே.''

''சும்மா நில்லு பாப்போம்.''

''யாரப்பா அது நடுவுலே பூர்றது. டாணுக் காரரே அப்புறம் பீடி பிடிக்கலாம். இங்கே ரவை வாங்க.''

''யாரும்மே புக்கிங் ஜன்னலண்டே நிக் கறது?''

''நான் எங்கியாவது நிக்கறேன். உனக்கு இன்னா வலிக்குது? ஒன் தலே மேலேயா நிக்கறேன்?''

''ஏன், கெயவி... இங்கேயே வெத்தலே யைத் துப்பறயே... போற வழின்னு தெரி யலே....''

''பாருய்யா காலம் எப்படி இருக்குதுன்னு! தொண்டு கிழம். கண் பார்வை கூட சரியா இருக்காது. கரெக்டா சினிமாவுக்கு வந் துட்டுது.''

''புக்கிங் எப்ப ஆரம்பிப்பாங்க?''

''வேண்டப்பட்டவங்களுக்குப் பின் பக்க மாக டிக்கெட்டைக் கொடுத்துட்டுத்தானே தொறப்பாங்க... எல்லாம் ப்ளாக்கிலே போகும். இவனுக்கும் கமிஷன் ஆச்சே!''

''சரிதான் ஸார். நீங்க சொல்லுவீங்க. 150 ரூபாய் சம்பளம் கொடுப்பாங்க. ராத் திரி பத்து மணி வரை டூட்டி... அவன்தான் என்ன செய்வான்? இப்படிப் பணம் பண் ணத்தான் உண்டு.''

''யாருய்யா நெருக்கறே. மூச்சு விட வுடுங்கய்யா.''

''பாருய்யா... நாலு ரூபாய் கியூவிலே நிக்குது. மார்க்கெட்டிலே கொத்தமல்லி விக்கிற பொண்ணு. நாம நிக்கறோம். ரெண்டு தொண்ணூறிலே.''

''மூஞ்சியிலே பவுடர் பார்த்தியா... லிப்ஸ் டிக்கூடப் போட்டுக்கிட்டு இருக்குது.''

''ஸார்... பத்து ரூபாய்க்கு சேஞ்ச் இருக்குமா? ஆட்டோவுக்குக்கொடுக்கணும்.''

''புக்கிங்கிலே கேட்டுப் பாருங்கோ.''

''என்னங்க கொஞ்சம் இடத்தைப் பிடிச் சுக்குங்க. ஒண்ணுக்கு இருந்துட்டு வரேன்.''

''இது பாடாவதிக் கொட்டாப்பா. ஜனங்க வெய்யில்லெ நிக்க வேண்டியிருக்குது.''*



''இங்கே வெச்சிருக்கிற ஷீல்டைப் பாத்தியா... இப்ப எல்லாம் பினாய்டிக்லே வந்துடுத்து. பழைய பட ஷீல்டுங்க வெள்ளியிலே பண்ணியிருக்குது.''

''சரிதாம்பா. நீ சொல்லே. படமே அவங்க செலவிலே நூறு நாள் ஓட்டறாங்க. ஷீல்டு வேறே வெள்ளியிலே குடுப்பாங்களா!''

''போவ்... புக்கிங்கு. போறும்யா சும்மா பிடி குடிச்சுக்கிட்டு இருக்கே. டிக்கெட்டைக் கொடுத்தால் நிழல்லேயாவது போவயில்லே''

''மணி... சண்டே மார்னிங் என்னடா போடறான்?''

''மிஸ்ஸியம்மாடா... சாவித்திரி ஆக்டிங்குக்கே கொடுக்கலாம்.''

''டீவிலேகூட அவங்க செத்த உடனே அவங்க நடிச்ச படம்தான்!''

''அப்பாடி... மணி அடிச்சாண்டா பாவி மானேஜர்... யாரு... நெருக்காதீங்கய்யா... அட... எவன்யா செருப்பை மெதிச்சுக்கிட்டு நிக்கறே....''

''ஸார்... எனக்கு ஒரு டிக்கட் வாங்க முடியுமா... இந்தாங்க பணம்.''

''போய் வாங்காதய்யா... லைனிலே நிக்கறவங்க எல்லாரும் முட்டாளுங்க. இவர் வார்ட் லம்பக் துரை. கர்க்டா வருவாரு. இவருக்கு டிக்கட் வாங்கிக் கொடுக்கணும்.''

''உனக்கு என்னய்யா போச்சு. உன்னைக் கேக்கலியே.''

''கலியாணி, நீ வரேன்னு சொல்லலியே. ஆமாம், இது எத்தனாவது வாட்டி?''

''இரண்டாவதுதான். முதல் தடவை குழந்தை அழுதான். பாதியிலேயே பூட்டேன். அவருக்கு இன்னிக்கு ஆஃப். கொழந்தையைப் பார்த்துக்கிட்டுஇருக்காரு! ரவிக்கை நல்லா தெச்சுருக்கே. யாரு டைலர்?''

''ஏம்பா... வழியை வுட்டு நில்லுங்கப்பா. உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு. ரிஜர்வேஷன் பண்ணியிருக்கிறவங்க உள்ற போவ வேணாம்?''

''பாருய்யா அதுக்குள்ள அவுஸ் ஃபுல் போர்டு போட்டுட்டான். சரியான கேப் மாதிங்க... சரி... வெளியிலே வெத்தலே பாக்குக் கடையிலே விப்பான்.''

''போங்க... போங்க... கதவை மூடணும். ஏம்மா பாத்துக்கிட்டு நிக்கறியே... ஏம்மா... பெரிம்மா... நவுரு... கதவை மூடணும்....''

குமரேச சதகம்

கீரன்

சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்ட நூல். இது தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கிய வரிசையில் வைத்து எண்ணப் படுவது.


பெரும்பாலும் சதக நூல்கள் காப்பு, அவையடக்கம் ஆகிய உறுப்புக்களுடன் தொடங்கிச் சமூகப் பார்வையில் இறை உணர்வையும் நல்லொழுக்க நெறிகளையும் உணர்த்துவன. சமூகத்தில் யார் யார் தந்தை போல் மதிக்கப்பெறத் தக்கவர்கள், எந்த அடிப்படையான குணத்தால் பிறிதொரு நற்குணம் வளரும், யார் யாருக்கு எதில் நினைவு என்ற சுவை மிக்க செய்திகளைத் தொகுத்துத் தருவது சதக நூலின் சாரமான கருத்தாகும்.

தமிழில் பல சதக நூல்கள் தோன்றியிருப்பினும் குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கைலாசநாதர் சதகம், அண்ணாமலை சதகம், அவையாம்பிகை சதகம், திருவேங்கட சதகம், தண்டலையார் சதகம், அருணாசல சதகம், எம்பிரான் சதகம் கோவிந்த சதகம், தொண்டை மண்டல சதகம், வடவேங்கட நாராயண சதகம் ஆகியவை மிகச் சிறப்பானவை.

ஒவ்வொரு சதகப் பாடலின் இறுதியிலும் எந்தத் தெய்வத்தின் பெயர் சுட்டப் படுகிறதோ, அதன் பெயராலேயே அச் சதகம் அமையும்.

இரவு டூட்டி நர்ஸ்: இரவு 12 மணி, 2 மணி, 4 மணிக்கு என்னை நீங்க எழுப்பணும்.
நோயாளி: எதுக்கு சிஸ்டர்?
நர்ஸ்: உங்களுக்கு நேரப் பிரகாரம் மருந்து 'கொடுக்கத்தான்!

—அ.தெ.



'மயில் ஏறி விளையாடு குகனே! புல்வயல் நீடு மலைமேவு குமரேசனே!' என்ற மகுடத்துடன் ஒவ்வொரு பாடலும் முடிவது குமரேச சதகம்.

'அநுதினமும் மனதில் நினை தரு சதுரகிரி வளர் அறப்பளீசுர தேவனே' என முடிவது அறப்பளீசுர சதகம்.

பெரும்பாலும் சதக நூல்கள் இறையுணர்வையும் நல்லொழுக்க நெறிகளையும் வற்புறுத்துவன.

சதக நூல்களில் காணப்பெறும் சாதி ஒழுக்கங்கள் பற்றிய சில கருத்துக்களைச் சொல்லும் பாடல் இந்தக் காலத்தில் பொருந்தாதனவாகவோ அல்லது தேவையற்றனவாகவோ தோன்றலாம். இங்ஙனம் சதகத்துக்கு இரண்டொன்றாக அமைந்திருக்கும் பாடல்களை நீக்கி ஏனைய பாடல்களைச் சிந்தித்தால் அவை ஒழுக்க நெறிக்கு எவ்வளவு முக்கியமானவை என உணரலாம்.

மேலும் பொருத்தமான உவமைகளைக் கையாள்வதில் சதக நூல்கள் தனித்தன்மை பெற்றவை.

குமரேச சதகம் என்பது திருப்புல்வயல் குருபாத தாசர் இயற்றியது.

என்றும் மாறாத சில கருத்துக்களைக் கூறுகின்றது.

செத்தும் சாகாதவர் யார்?

குமரேச சதகம் பதில் கூறுகிறது. அன்னவர்க்கும் உதவினோர், குளம் கிணறு உண்டாக்கினோர், நீதி மன்னர், அழியாத தேவாலயம் கட்டிவைத்து அறம் வளர்த்தோர், தனை ஒப்பில்லாத புதல்வரைப் பெற்றோர், போர் வென்ற வீரர், அறிவுள்ளோர், ஓயாத கொடையாளர், காவியஞ் செய் கவிஞர், கற்பிற் சிறந்த பத்தினி ஆகியோர் செத்தும் சாகாதவர்.

மனிதர்களாகப் பிறந்தவர் எல்லோரும் மனிதரா?

இல்லை என்கிறது குமரேச சதகம்.

தான் பிடித்தது பிடிப்பேன் என்று மேலவர் புத்தியைத் தள்ளுபவன் குரங்கு சபையில் குறிப்பறிய மாட்டாதவன் மரம்; வீம்பினால் எளியவரை எதிர் செய்பவன் ஒரு நாய்; மிகநாடி வருபவர் முகம் பார்க்க வருபவன் கழுதை; சூதுடன் அடுத்தோர்க்கு இடுக்கண் விளைவிப்பவன் கொட்டிடும் தேள்.

சதகத்தில் நகைச்சுவைக்கும் குறைவில்லை.

சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதவர் குறைவு. ஆனால் பெரும்பாலும் கிரகங்கள் தீமையே செய்கின்றன என்றே எவனும் எண்ணுகிறான்.

கிரகங்கள் மட்டும்தான் தீமை செய்கின்றனவா? தீமை செய்பவர்கள் கிரகங்கள் என்கிறது சதகம்.

அன்னை, தந்தை அறிவுரை கேளாதவர் அஷ்டம் சனி; அஞ்சாமல் எதிர் பேசி நிற்கும் மனைவி வாக்கில் அங்காரகன்; தன்னை மிஞ்சிப் பேசுகின்ற பின்னை சந்திராஷ்டகம்; தன் பங்கு தா என்று நீதிச் சபை ஏறும் தம்பியோ சார்ந்த சன்மச் சூரியன்; நன்னயம் இல்லாமல் வஞ்சனை செய்யும் தமையன் மூன்றுமிடத்தில் வியாழன். நாள் தோறும் தகராறு செய்பவர்கள் ராகு, கேதுக்கள்.

எப்படியோ சமூகத்தில் புகுந்துவிட்ட சாதிப் பகுப்பை சதகம் சாடுகிறது. பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிப்பதைக் கண்டிக்கிறது.

சேற்றில் பிறந்திடும் தாமரை கடவுள் முடிமீதிருக்கும்; சிப்பியின் முத்து தேகத்தின் மேலிருக்கும்; பூச்சிவாய்ப் பட்டு பூசைக்கு நேசமாகும்; வண்டு எச்சிலான தேன் புனித அபிஷேகப் பொருளாகும்; கோரோசனை, புனுகு, சவ்வாது அனைவர்க்குமாம் அல்லவா?

''சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேல் இருக்கும்;
திகழ்சிப்பி உடலில் சனித்தமுத்து அரசரது
தேகத்தின் மேல் இருக்கும்;
போற்றிடு பூச்சியின் வாயில்நூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்;
புகல்அரிய வண்டெச்சில் ஆனதேன் தேவர்கொள்
புனித அபிடேகமாகும்;
சாற்றிய புலாலொடு பிறந்த கோரோசனை
சவாது புனுகு அனைவர்க்குமாம்.
சாதியீனத்தில் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின் மேல் வட்டமன்றோ
மாற்றிச் சுரத்தனை விபூதியால் உடல்குளிர
வைத்த மெய்ஞ்ஞான முதலே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!



இலக்கியத்தில் இறையுணர்வு



“முட்கள்

இந்துவைப் பெண் பார்க்க வரப் போகிறார்கள்! மாப்பிள்ளை வீட்டார் மாலை ஐந்து மணிக்கு மேல் வருவதாகத்தான் எழுதியிருந்தார்கள். ஆனால் மூன்று மணியிலிருந்தே பரபரப்பும், மனத்தில் ஓர் இறுக்கமான சூழ்நிலையும் ஏற்படத் துவங்கி விட்டது!

'இந்து' அப்படி ஒன்றும் அழகற்றவள் அல்ல! நல்ல அழகுதான். ஏனோ அவளுக்குக் கல்யாணம் மட்டும் தட்டிக் கொண்டே போய்க் கொண்டிருந்தது. இதுவரை ஆறு ஏழு பேராவது வந்து இந்துவைப் பெண் பார்த்துவிட்டுப் போயிருப்பார்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம். ''வரதட்சிணை போதாது'' – ''பெண் கறுப்பு'' – ''இதைவிட இன்னும் பெரிய இடமாகப் பார்க்கிறோம்'' – ''பையனுக்கு இப்போது கல்யாணமே வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறான்'' – என்று எவ்வளவோ காரணங்கள்.

கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது.

இந்த இடமாவது ஒழுங்காக நடக்க வேண்டுமே என்று எல்லோரும் வழக்கத்தை மீறி ஒருவித 'டென்ஷ'னுடனேயே இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

தலைவாரிப் பின்னிவிடும்போது இந்துவின் அம்மா சொன்னாள்:

''இவ்வளவு இடமும் தட்டிப்போனதுகூடப் பரவாயில்லை. இந்த இடமாவது உனக்கு அமைய வேணும். உன்னைப் பற்றி நினைத்தே உன் அப்பாவுக்குப் போன வருஷம் 'ஹார்ட் அட்டாக்' வந்து விட்டது. ஏதோ கடவுள் புண்ணியத்தில் பிழைத்து எழுந்தார்.''

இந்துவின் மனத்தில் சுரீரென்று உரைத்தது அந்தக் கடைசி வரிதான்.

தன் அம்மாவின் மனத்தில் இருந்த தாபமும் அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

எப்படியாவது இந்த இடமாவது நடக்க வேண்டும்!

மாலை ஐந்து மணிக்குச் சொன்னபடி மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து விட்டனர்.

''இந்த இடம் ரொம்ப நல்ல இடம். மிக மிக நல்ல மனிதர்கள். மாப்பிள்ளைக்கு நல்ல உத்தியோகம். கைநிறையச் சம்பளம். மாப்பிள்ளையின் பெற்றோர்களும் மிக மிக அன்பானவர்கள். எப்படியும் அவர்கள் கைகாலைப் பிடித்தாவது இந்துவுக்கு இந்த இடத்தை முடித்து விடப் போகிறேன்'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்த தன் தந்தையின் பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு இந்துவுக்குமே அவளையும் மீறி ஓர் ஆசை வளர்ந்து நின்றிருந்தது மனத்தில்!

சம்பிரதாயமாக வந்திருந்தவர்களை வரவேற்று ஹாலில் உட்கார வைத்துக் கொஞ்ச நேரம் ஏதோ விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தவர் உள்ளே ஓடிவந்து, ''டிபன் கொண்டு வா'' என்று குரல் கொடுத்துவிட்டு மீண்டும் ஓடினார்.

மாப்பிள்ளை வீட்டார் டிபன் சாப்பிட்டு முடித்ததும் பெண் பார்க்கும் படலம் துவங்கியது.

அலங்காரம் செய்து வைத்த கோவில் சிலையாக இந்து அறையை விட்டு வெளியே வந்தாள்.

வெளியே உட்கார்ந்திருந்த அவ்வளவு பேரின் கண்களும் அவள் மீதே லயித்தன.

சாதாரணமாகப் பார்த்த மாப்பிள்ளை பாஸ்கர் 'சட்'டென்று பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தான்.

மூளையின் செல்களைச் சுறுசுறுப்பாக்கிவிட்டுக்கொண்டு யோசித்தான்.

''இவளை...இவளை... எங்கோ பார்த்திருக்கிறோம்.... எங்கே.... எங்கே....?''

அவன் ரத்த நாளங்கள் சுறுசுறுப்பாகி எதிரே நிற்கும் பெண்ணை நினைவில் தேடிக் கொண்டிருந்த அவனுக்கு மேலும் சூடேற்றிக் கொண்டிருக்க—

''பையனை நன்றாகப் பார்த்துக் கொள். அப்புறம் நான் பார்க்கவே இல்லை என்று சொல்லிவிடாதே'' என்று விளையாட்டாகச் சொல்லிக் கொண்டு இந்துவின் முகத்தை உயர்த்தினாள் ஒரு பெண்.

நிமிர்ந்து பார்த்த இந்துவின் மனத்தில் திடீரென்று ஆயிரமாயிரம் மின்னல்கள் பளபளத்தன.

இவனை எங்கேயோ பார்த்திருக்கிறோம்... எங்கே.... எங்கே....

'சட்'டென்று நினைவு வந்து விட்டது.

ஹாங்... அங்கேதான் — அவன்தான். அவனேதான்?—

இந்துவின் மனம் படபடத்தது.

இந்தக் கல்யாணம் நடக்குமா?

அவள் மூடிய கண்களில் அன்றைக்கு நடந்த காட்சி விரிந்தது.

சினிமாத் தியேட்டர்.

அறை முழுவதும் இருளில் மூழ்கிக் கிடந்தது.

பின் சீட்டிலிருந்து நீண்ட கால் ஒன்று அவள் கால்களை மோதியது.

புடவை விளிம்பைப் பற்றி இழுத்தது.

துத்துவதற்கல்ல!”



''யூ ஸ்கௌன்ட்ரல்....'' என்று இந்து ஆத்திரத்துடன் எழுந்து தன்னையும் மீறிக் கத்தி விட்டாள்.

பக்கத்து சீட்டில் இருந்தவர்கள் ''என்ன? என்ன?'' என்று எழுந்து விட்டார்கள்.

கொஞ்ச நேரத்துக்குள் அங்கே ஒரு பெரிய ரகளையே நடந்து முடிந்துவிட்டது.

ஐந்து நிமிடங்களுக்குள் யார் யாரோ அந்த இளைஞனின் சட்டையைப் பிடித்து இழுத்து ''உங்களுக்கெல்லாம் அக்கா தங்கச்சிகளே இல்லையாடா ராஸ்கல்'' என்று கண்மண் தெரியாமல் அடித்து விட்டார்கள்.

அத்தனைக்கும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை அவன்.

கையை நீட்டி ஏதோ அடையாளம் காட்டினான். என்னவென்று ஒருவருக்கும் புரியவில்லை.

''ஊமைப் பயல்'' என்றான் ஒருவன்.

''இதுதான் ஊமைக்குறும்பு'' என்று மற்றவன் சொல்ல, சுற்றி இருந்தவர்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

இந்துவுக்கே கூட அடிபட்டு நின்ற அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

சட்டை கிழிந்து — தலை அலங்கோலமாய்க் கலைய — மூக்குக் கண்ணாடி தூள் தூளாகச் சிதறிப்போக உதட்டோரம் இலேசான ரத்த முத்து எட்டிப் பார்க்க — அவன் மௌனமாகத் தியேட்டரை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான்.

அன்றைக்குப் படம் முடிந்து எல்லோரும் வெளியே வந்தபோது அவள் வரிசைக்கு முன் வரிசையில் உட்கார்ந்திருந்த பெரியவர் ''இது எவருடையது?'' என்று பேனாவைப் போல் இருந்த ஒரு பென் டார்ச் லைட்டை வைத்துக் கொண்டு எல்லோரிடமும் கேட்டுக் கொண்டிருந்தார்.

''ஒருவேளை இது அந்த இளைஞனுடையதாக இருக்குமோ? — இதைத்தான் தேடி இருப்பானோ?''

இந்துவின் மனத்தில் 'சுரீர்' என்றிருந்தது.

அவசரப்பட்டு ஓர் அப்பாவியை அவமானப்படுத்தி விட்டோமே?—

ஆனால்—

மறந்து போகவில்லை என்பது இந்துவுக்கு இப்போது நிதர்சனமாகப் புரிந்தது.

அவர்கள் வீட்டு ஹாலில் உட்கார்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அவனும், தன்னைப் போலவே அன்றைக்கு நடந்தவற்றை நினைவில் அசை போட்டுக் கொண்டு இருப்பான் என்று தோன்றியது அவளுக்கு.

அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘அரவிந்தன்’

அவனுக்கும் நினைவு வந்து விட்டது. அன்றைக்குத் தியேட்டரில் அவளைச் சந்தித்த காட்சியும், அதன் பிறகு நடந்தவைகளும் அவன்நினைவில் அவசரம் அவசரமாக வந்தன.

உண்மையில் அன்றைக்கு நடந்தவற்றை நினைத்துஅவனுக்கு வெட்கமாகவே இருந்தது.

நண்பர்கள் சொன்னார்கள் என்று முதன் முறையாக அந்தசினிமாத்தியேட்டரில் முன் வரிசையில் அமர்ந்திருந்த இந்துவிடம் விளையாட்டாகக் காலை விட்டு வேடிக்கை செய்ய நினைத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று அன்றைக்கு அடிபட்டு வெளியே வந்தபோது புரிந்தது.

வாய் பேச முடியாமல் இருப்பதால் குறைந்த அளவு அடியோடு போயிற்று. எப்படியோ அன்றைக்குத் தப்பித்தாகிவிட்டது என்று நினைத்துக் கொண்டது போக, இன்று இவளிடமே வந்து அகப்பட்டுக் கொண்டோமே! அவள் என்ன செய்யப் போகிறாளோ?

அதே சமயத்தில் இந்துவின் மனத்துக்குள் வேறு வகையான எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

''அன்றைக்குத் தியேட்டரில் நடந்த அவமானத்தை நினைத்து நம்மை வெறுத்துவிடுவாரோ? அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் பெருந்தன்மையுடன் மன்னித்து விடுவாரா?—அம்மா கேட்டுக்கொண்டபடி அவன் கழுத்தில் தாலி நிலைக்கவாவது அவரிடம் எப்படியாவது பேசி இந்தக் கல்யாணத்துக்கு அவரைச் சம்மதிக்கச் செய்து விட்டால் என்ன?....''

''எங்களுக்குப் பெண்ணைப் பிடித்துவிட்டது. மாப்பிள்ளை பெண்ணிடம் ஏதோ தனியாகக் கேட்க வேண்டுமாம். உங்களுக்குச் சம்மதமென்றால் அவர்கள் பேசட்டும். என்ன சொல்கிறீர்கள்?''

மாப்பிள்ளை வீட்டார் இந்துவின்அப்பாவிடம் கேட்டார்கள். தானாகத் தேடிய ஒரு வாய்ப்பு இப்படி வலுவில் வருகிறதே என்று இந்துவும் உடனே சம்மதித்து விட்டாள்.

அவள் அந்த அறையினுள் தனியாக நின்றிருந்தாள்.

அவன் வந்து மௌனமாக நின்றான்.

ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி அவளிடம் நீட்டினான்.

''என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்றபடி அவன் கையிலிருந்த காகிதத்தை வாங்கிப் பார்த்தாள் இந்து.

''என்னை மன்னித்துவிடு!''

'சட்'டென்று இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

தவறு செய்யாமல் அநியாயமாக அடிபட்டு அவமானப்பட்டதையும் மறந்துவிட்டுத் தன்னிடம் மன்னிப்புக் கேட்ட அவன் பெருந்தன்மை இந்துவை ஆச்சரியப்பட வைத்தது.

அதே சமயம்—

அன்றைக்குத் தியேட்டரில் தான் நாகரிகமற்ற முறையில் நடந்து கொண்டதைப் பொருட்படுத்தாமல் அவள் தன்னிடம் மன்னிப்புக் கேட்பதன் மூலம் மிகவும் உயர்ந்து விட்டதாக அவன் நினைத்தான்.

பிறகு...


பிறகு என்ன?—

அவளுக்கும் அவனுக்கும் திருமணம் முடிந்து விட்டது.

இன்றுவரையிலும் அவர்கள் ஒவ்வொருவரும்அவரவர் கோணத்திலேயே மற்றவரைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால்—

அன்றைக்குத் தியேட்டரில் அந்த 'பென்டார்ச்சை' எடுத்தவர்தான் இன்னமும் அது யாருடையது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்!



இவர் பார்வை...

ரொம்ப ரொம்ப மோசமான கண் பார்வை உடையவர்கள் கூட இந்த அதி சக்தி வாய்ந்த மூக்குக் கண்ணாடி மூலம் நல்ல பார்வை பெற முடியும். அமெரிக்க டாக்டர் வில்லியம் ஃபேய்ன்புளும் கண்டுபிடித்துள்ள இந்த மூக்குக் கண்ணாடியில் ஒவ்வொரு கண்ணுக்கும் உரிய கண்ணாடி முன் மூன்று சிறிய டெலஸ்கோப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. தேனியின் கண் இயற்கையில் எப்படி அமைந்திருக்கிறதோ அந்த அடிப்படையில் உருவானதுதான் இந்தப் புதிய கண்டுபிடிப்பு!

...தேனீ பார்வை!


கோத்ரெஜ்
நரை முடி பற்றியும்
ஹேர் டைகள் பற்றியும்
ஏற்படும் கவலைகள்
அனைத்தையும் போக்குகிறது.
நரைக்கு டை
செய்வது செயற்கை
யான தோற்றமளிக்கக்கூடும்.
ஆனால், நீங்கள் சரியான 'டை'யை
தேர்ந்தெடுத்துவிட்டால்
இயற்கையாகவே விளங்கும்.
கோத்ரெஜ் ஹேர்டை
தேர்ந்தெடுத்த பொருட்களால்
தயாரானது— சேர்த்தியாக
டை செய்கிறது. எவராலும்
வித்யாசம் காண முடியாது.
நரை முடி 'எடுப்பான'
தோற்றத்தைத்
தருகிறது!
'எடுப்பான' தோற்றம் அளிக்கக்
கூடும். ஆனால், தோற்றத்தில்
முதுமையையும் எடுத்துக்காட்டும்.
உங்கள் நண்பரையே கேட்டுப்
பாருங்கள்.
முடிக்கு டை
செய்யும் தொல்லையை
எவர் விரும்புவர்?
ஒருவரும் விரும்பமாட்டார்.
அதனால்தான், கோத்ரெஜ்
வழங்குகிறது தானாகவே பரவும்
ஒரு ஹேர் டை. இனி நீங்கள்
'முடியை பகுதிகளாகப் பிரித்து
சாயம் பூசும்' தொல்லைக்கு
உள்ளாக வேண்டாம். இந்த டை
உபயோகித்து, நுரை வரச்செய்து,
சிறிது காத்திருந்து, கழுவி
விடுங்கள். ஆஹா...
எவ்வளவு சுலபம்.
ஹேர் டை உபயோகிப்பதினால்
முடி பாதிக்கப்படுமா?
ஆம், பழைய முறையில் செய்யப்
பட்ட சாயங்கள் பாதிக்கலாம்.
அதனால்தான், கோத்ரெஜ்
அலாதியான ஹேர் டை
தயாரித்தளிக்கின்றனர். இதில்
'ஹேர் கண்டிஷனர்' சேர்க்கப்
பட்டிருப்பதால் உங்கள் முடிக்கு
இளமை தோற்றத்தை அளிக்கிறது.
Godrej
Permanent
hair dye
கோத்ரெஜ் பர்மனென்ட் ஹேர் டை
ஹேர் டை செய்வதிலுள்ள தொல்லையைப் போக்குகிறது;
தோற்றத்தில் இளமை பூரிக்க வைக்கிறது.
2 வண்ணங்களில்: இயற்கையான கறுப்பு, கரும் பழுப்பு. 20 மி.லி. மற்றும் 40 மி.லி.
CASGS-154-204 TAM


நிஜமெல்லாம் நித்யா 5
... அவ்வளவு தான் மேன், விஷயம். எல்லாமே நீ நடந்துக்கறதைப் பொறுத்துத்தான் இருக்கு.
சரி சார். நீங்க சொன்ன படியே செய்துடறேன்.
கவனமாப் பேசு. படிப்படியா டென்ஷனை அடர்த்தியாக்கு. உண்மையைக் கண்டு பிடிக்க, ஒரு சூழ்நிலையை உண்டாக்கு...
இங்கே இப்படி ஒண்ணு நடந்திருக்குன்னு நமக்கு போன் செஞ்சு தகவல் சொன்னது இவனா இருக்கும்னு தோணலை சார்.
நாம ஒரு முடிவுக்கும் இப்போ வர முடியாது. இவனே கொலையைச் செய்துட்டு, இவனே நமக்கு போனும் செய்து இப்படி ஒரு நாடகம் ஆடலாம் இல்லியா? என் மனசிலே மெல்லிசா ஒரு எண்ணம் ஓடுது...
என்ன சார் அது?
இன்னும் தெளிவா மனசிலே விழலை. ஸ்டேஷனுக்கு வந்து சொல்றேன். அதுக்கு முந்தி நான் சொன்னபடி கரெக்டா நடந்துக்க. என்ன புரியுதா?
அப்படியே செய்துடறேன் சார்.
இப்படி நாம தனியாப் பேசறதே அவன் மனசிலே ஒரு குழப்பத்தையும் டென்ஷனையும் உண்டாக்கிடும். அதோ... பார்த்தாலே தெரியுது... அவன் முகமே சரியா இல்லை...


இதையே அஸ்திவாரமா வச்சுக்கிட்டு மேற்கொண்டு நீ நடந்துக்கறதைப் பொறுத்துத் தான் என் திட்டத்துக்கு வெற்றியா, தோல்வியாங்கறது இருக்கு. ஓ.கே.? போ...
இவங்க ரெண்டு பேரும் குசு குசுன்னு பேசறதைப் பார்த்தா... கடவுளே! என்னைக் குற்றவாளின்னு முடிவு கட்டிடுவாங்க போல இருக்கே! அப்புறம்...
...நோ... எது எப்படியானாலும் நான் இவங்க கிட்டே மாட்டிக்கக் கூடாது. நித்யாவோட மரணத்துக்குப் பழி வாங்கப் போறது நான் தான். அதுக்கப்புறம் எனக்கு என்ன நடந்தாலும் கவலை இல்லே...
வண்டியைக் கிளப்பு சார், போகலாம். நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு விடு...
சற்றுத் தொலைவு சென்றபின்—
ஏன் சார் இப்படிச் செஞ்சு மாட்டிக்கிட்டே? இந்த இன்ஸ்பெக்டர் சுத்த முரட்டு ஆள் ஆச்சே! ஸ்டேஷனுக்கு வந்தப்புறம் உன்னை உண்டு - இல்லேன்னு ஆக்கிடுவாரே! உன்னை நினைச்சா பாவமா இருக்கு சார்!
தொடரும்

தமிழ் நாட்டில் ஒரு சபரிமலை

"சுவாமி ஐயப்பனைத் தரிசித்துவிட்டு வர எல்லோருக்குமே ஆசைதான். ஆனால் பல ஏழை எளியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் இவர்களுக்கு ஆசை இருந்தும் போக முடிவதில்லையே. முக்கியமாக அவர்களுக்காகவே இந்தக் கோயில் கட்டியிருக்கிறோம்'' என்கிறார் திரு சபாரத்தினம். (ஐயப்ப சுவாமி அறக்கட்டளைக் குழு பொருளாளர்.)

★ சிருங்கேரி மகாசன்னிதானம் முன்னின்று நடத்திவைக்க, கடந்த ஜனவரி 29ம் தேதி குடமுழுக்கு ஆன இக்கோயிலைக் கட்டிமுடிக்க ஆன செலவு சுமார் 40 லட்சம்; காலம் ஏழு ஆண்டுகள். திரு எம். ஏ. எம். ராமசுவாமி அவர்களுக்குத் தோன்றிய எண்ணம் செயலாகியிருக்கிறது. தனிமனிதர் ஒருவராகக் கோயில் கட்டக் கூடாது என்று ஐதிகம் இருப்பதால் இதற்கான செலவில் பெரும் பங்கேற்ற செட்டி நாட்டரசர் குடும்பத்துக்கு மற்றப் பெருந்தகைகளும் உதவியுள்ளார்கள்.

★ சபரி மலையில் இருப்பது போலவே, சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் ஆலயத்தில் வேறு சில வசதிகளும் உண்டு. 1500 பேர் அமர்ந்து சமயச் சொற்பொழிவு கேட்பதற்கென்று பெரிய மண்டபம் உள்ளது. பல நிறம் கொண்ட ஜெய்ப்பூர் பளிங்குக் கற்களால் ஆனது இம்மண்டபம்.

★ கேரளத்தில் உள்ளது போலவே அப்படியே எண்ணவும் மாறாது இருக்கிறதா மண்டபம்? ''இரு முடி விரதக்காரர்களுக்கென்றே இருக்கும் 18 படி அமைப்பு அச்சாக அது போல இல்லை. படிகளுக்கு இடையே உள்ள இடைவெளி கேரளக் கோயிலில் அதிகம்'' என்று சிலர் கருத்துத் தெரிவித்தார்கள்.

''ஐயப்ப சுவாமியின் திருவுருவம் தரிசனத்தின்போது சரியாகத் தெரியவில்லை. மகாலிங்கபுரம் கோயிலில் நன்றாகத் தெரிகிறது'' என அபிப்பிராயம் சொன்னவர்களும் உண்டு.

''ஒவ்வொரு கட்டத்திலும் அங்கு சென்று பார்த்து மில்லி மீட்டர் அளவு கூட மாறாது, நிபுணர்களைக் கொண்டு கட்டியிருக்கிறோம். நெய் அபிஷேகம் எல்லாம் ஆக ஆக பிரபை நன்றாகத் தெரியும்'' என்று இதற்குப் பதில் சொல்கிறார் சபாரத்தினம்.


★ ஐயப்பன் மலை மீது இருக்கிறதல்லவா? அதற்காகவே இங்கும் மேலே கர்ப்பக்கிரகம் இருக்கும் இடம் கீழே பூமியைத் தொடுகிறமாதிரி மண்ணைக்கொண்டு நிரப்பிக் கட்டியிருக்கிறார்கள்.

★ ''இங்கிருந்து போன தெய்வம்தான் ஐயப்பன். மறுபடி இங்கேயே திரும்பி வந்துவிட்டது. இது வட சபரி'' என்றார் சிருங்கேரி சுவாமிகள் குடமுழுக்கு விழாவில்.

- தமயந்தி



எம்.ஏ.எம். ராமசாமி ''எண்ணம் செயலாயிற்று''




''வட சபரி''



5

பரணியின் நடையில் வழக்கமான கம்பீரத்துக்குப் பதில் ஓர் ஒயில் காணப்பட்டது. கடினமான வேட்டையில் ஈடுபட இளவலுக்கு உறுதுணையாக இருந்ததுடன் ஓர் இக்கட்டான நிலையில் அவன் தப்பவும் உதவியதால் ஏற்பட்ட பெருமிதத்தில் அது துள்ளியதா? அல்லது இளவலுக்குப் பலமான அடிபட்டும் அவன் காயங்கள் ஆறி ஆரோக்கியம் பெற்றதில் மகிழ்ந்ததா? ஒருவேளை, குவளையும் விஜயாலயனும் நெருங்கி உறவாடுவதைக் காணாதது போல் கண்டு, 'ஓ, அப்படியா சங்கதி!' என்ற எண்ணத்தில் அது ஆனந்தமடைந்ததா? எதுவோ தெரியவில்லை. எவ்வாறுயினும் இன்று அது நடப்பதாகவே தோன்றவில்லை. மாலை நேரத்தில் அது பழையாறை நகருக்குள் நுழைந்து ராஜ வீதியில் சென்றபோது நடனமாடிக் கொண்டே முன்னேறுவது போல்தான் இருந்தது! 'உனக்கு இன்று என்னவாகி விட்டது?' என்று விஜயாலயன் கேட்டு அதை அதன் கழுத்தில் தட்டிக் கொடுத்து அமைதிப்படுத்த வேண்டியிருந்தது.

அவனுக்குப் பின்னால் தன் எடையைத் தாங்க வல்ல, செழிப்பாக வளர்ந்த அராபியக் குதிரை மேல் அமர்ந்து வந்தான் சீனன். ஒரு கனத்த மௌனம் தஞ்சைநகரை ஆக்கிரமித்திருப்பதையும், ஏதோ ஒரு சோகம் பரவி நகரம் அழுது வடிந்து கொண்டிருப்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். கோட்டை வாயில் காவலர்கள் கூட முதலில் இவர்களைப்



செம்பியன்



பார்த்து ஆச்சரியத்தில் செயலற்றுப்போய் நின்று பிறகுதான் மகிழ்ச்சி கலந்த பரபரப்புடன் வரவேற்க முற்பட்டனர். கொம்புகள் முழங்கின; முரசங்கள் அதிர்ந்தன. அதைக் கேட்டுப் பழையாறை மக்கள் அடக்க மாட்டா ஆர்வத்துடன் வீடுகளைத் துறந்து வீதிக்கு வந்தனர்.

ராஜபாட்டையில் பரணி மீது ஆரோகணித்து அனுயாசமான ஒரு வாகவத்துடன் வரும் இளவலைக் கண்டதும் அவர்கள் குதூகலம் பீறிட்டு எழ, ''இளவல் வாழ்க!'' ரவிகுல திலகன் வாழ்க! வீரவேல் வெற்றி வேல்!'' என்று கோஷங்களை எழுப்பினர். அவ்வளவுதான். ஐந்து—பத்து பேர்களாக இருந்த கூட்டம் வெகு சீக்கிரமே நூறு—இருநூறு என வளர்ந்து கொண்டு போயிற்று. பல்லக்குகளும், ரதங்களும் இதர வாகனங்களும் நகர முடியாமல் போக்குவரத்து தடைப்படத் தொடங்கியது.

விஜயாலயன் மக்களுடைய இந்த எழுச்சியின் காரணத்தை எளிதாகப் புரிந்துகொண்டான். நாலு நாள் என்பது ஏழு நாட்களாக வளர்ந்தும் அவை ஏழு கணங்களாக ஓடி விட்டது போல்தான் இருந்தது அவனுக்கு... கானகத்தில் குவளையுடனும் அவனுடைய சுற்றத்தாருடனும் அவன் தங்கியிருந்த அவ்வேளையில் அவனுடன் வேட்டைக்கு வந்த பரிவாரங்கள் தலைநகர் திரும்பியிருக்கும்! அடுத்து அவனைத் தேடிப் புறப்பட்ட சில



வேளக்காரப் படைகளும் ஏமாற்றத்தையே சுமந்து வந்திருக்கும். இதனாலெல்லாம் இளவரசருக்கு என்ன ஆயிற்றோ? திரும்பி வருவாரோ என்றெல்லாம் கவலைப்பட்டும், திரும்பிப் பத்திரமாக வரவேண்டுமே என்று வீடுகளிலும், ஆலயங்களிலும் விசேஷப் பிரார்த்தனைகள் நடத்தியும் பழையாறை மக்கள் வருத்தச் சுமையை இறக்க முடியாமல் தவித்திருக்கிறார்கள். சோழ குலத்தின் ஒரே நம்பிக்கைத் தாரகையான அவனை எப்படியாவது தெய்வம் கொண்டு வந்து சேர்த்துவிடும் என்ற எதிர்பார்ப்புடன் சோதிடர்களையும் கலந்து ஆலோசித்து வந்திருப்பார்கள். இப்போது தங்கள் தெய்வ நம்பிக்கையும் பக்தியும் வீண் போகவில்லை எனக் கண்டதும் அவர்கள் மகிழ்ச்சி கரை கடந்ததில் வியப்பென்ன? சீக்கிரமே மக்கள் ஆயிரக் கணக்கில் கூடிவிடுவார்கள் என்றும் அவர்களுடைய அன்புத் தொல்லையிலிருந்து மீள்வதே கடினமாகி விடும் என்றும் கணித்தவனாக, ''சீனா! நீ மெல்ல வா! நான் முன்னால் விரைந்து போகிறேன்'' எனச் சைகை காட்டிய படியே ஆணையிட்டுவிட்டுத் தன் குதிகால்களால் பரணியின் அடிவயிற்றில் தட்டினான் விஜயாலயன். சமிக்ஞையை உணர்ந்து பரணி பறந்தது!

தன்னை நிதானித்து வரச் சொல்லி விஜயாலயன் உத்தரவிட்டதன் உட்பொருளைச் சீனன் உடனடியாகக் கண்டு கொண்டான். மக்களுடைய கோபத்துக்கும் துயருக்கும் மட்டுமின்றி மகிழ்ச்சிக்கும் கூட வடிகால் தேவைதான்! இன்று அந்த வடிகால் சீனன் தான். ஆரத்தி கரைத்து எடுத்துக் கொண்டு வந்த இளம் பெண்களும் திருஷ்டி சுற்றிப் போட வந்த மாதர்களும் இளவலைக் காணாது சற்றே ஏமாற்றமடைந்தாலும் அவரைப் பாதுகாப்பாக அழைத்து வந்து சேர்த்துவிட்ட சீனனைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவனுக்கே அந்த உபசாரங்கள் நடந்தன! ''வேளக்காரப் படையினர் கூடச் சாதிக்காததை நீ செய்து விட்டாயே பெரிய ஆளப்பா நீ!'' என்று கூறியவாறு இளைஞர்கள், குதிரையை விட்டுக் கீழே இறங்கி வந்த சீனனைத் தட்டிக்கொடுத்தார்கள். சிலர் அவனைக் கட்டிப் பிடிக்க முயன்று முடியாமல் சிரித்தார்கள். இந்த உல்லாசத்தில் தானும் பங்கு கொண்டவாறே மெல்ல மெல்ல வழி ஏற்படுத்திக் கொண்டு முன்னேறினான் சீனன்.

காட்டுத் தீபோல் துரிதமாகச் செய்தி பரவிவிட சோழ மாளிகை முன்னால் ஆயிரக் கணக்கில் மக்கள் குழுமிவிட்டனர். ஆராய்ச்சி மணி பெரு ஓசை எழுப்பத் தொடங்கியது. ஒற்றர் தலைவன் ஆகவமல்லனும் வேறு உயர் அதிகாரிகளும் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் அவர்கள் கலைந்து செல்கிற வழியாயில்லை. ''வீரவேல்! வெற்றி வேல்!'' என்ற அவர்களுடைய பேராரவாரத்தைச் செவியுற்று மேன் மாட நிலா முற்றத்தில் மன்னர் குமாராங்குசன் வந்து நின்றார். உடனே, ''இராஜகேசரி குமாராங்குசன் வாழ்க!'' என்று முழக்கங்கள் எழுந்தன.

கட்டியம் கூறுவோனை அழைத்து, தேவி பராசக்தியின் அருளால் இளவரசர் பத்திரமாக வந்து சேர்ந்த விவரத்தை மன்னர் தெரியப்படுத்தினார்.

அப்போதும் ''இளவல்! இளவல்!'' என்ற கோஷம் ஆயிரமாயிரம் கண்டங்களிலிருந்து ஒரே சீராக ஒரே சமயத்தில் இடி முழக்கம் போல் எழுந்ததே யொழிய யாருமே விஜயாலயனைத் தரிசிக்காமல் திரும்பிப் போகச் சித்தமாயில்லை. அந்த அன்பு மன்னரின் மனத்தைக் குளிரச் செய்தது; அவர் மேனி சிலிர்த்தது. அவர் விஜயாலயனை அழைத்து வருமாறு கூறி ஆகவ மல்லனை அனுப்பினார்.

இதையெல்லாம் எதிர்பார்த்தே அவசரமாகக் குளித்து மாற்றுடை தரித்து விரைந்து வந்துகொண்டிருந்த விஜயாலயன் ஆகவமல்லனை எதிர்கொண்டு, அவன் திசை திரும்பித் தன் பின்னே ஓட்டமும் நடையுமாக வர, இவன் அகலக் கால் வைத்து மத்தகஜம் போல் நடந்தான். மேன் மாடத்தில் விஜயாலயனின் உருவம் மாலை நேரப் பொன்னொளியால் குளிப்பாட்டப்பெற்று, பட்டாடைகளும் ஆபரணங்களும் ஜொலிக்கக் காணப்பட்டபோது மக்களின் ஆனந்தம் கரை புரண்டது! கரம் கூப்பி வாழ்த்துக்களை ஏற்றான் விஜயாலயன். பின்னர் கரங்களை உயர்த்தி அமைதி நிலவச் செய்தான். ஆரவாரம் சற்று அடங்கியபோது கூட்டத்தின் முன்னணியில் இருந்த ஒரு முதியவர், ''ராமர் பதினாலு ஆண்டுகள் கானகம் சென்றபோது அயோத்தி நகரமக்கள் அடைந்த துயரத்தை நாங்கள் ஏழே நாட்களில் பெற்று விட்டோம் பிரபோ! தாங்கள் இம்மாதிரி தேவையற்ற ஆபத்துக்களுக்குத் தங்களை உள்ளாக்கிக் கொள்ளக் கூடாது'' என்றார். ''ஆம்! ஆம்'' என்று பல கண்டங்கள் அவர் கருத்தை ஆமோதித்தன.

விஜயாலயன் அவர்களைக் கையமர்த்தி விட்டு, ''பெரியவரே! உமது அன்புக்குத் தலை வணங்குகிறேன். உங்கள் அனைவரது கவலையும் எனக்குப் புரிகிறது. ஆனால் உங்கள் கருத்து ஏற்கத் தக்கதல்ல. ஒருவன் அரச குடும்பத்தில் பிறக்கும்போதே அவனுக்கு ஆபத்து இரட்டைச் சகோதரனாகப் பிறந்து

கிரிக்கெட் ரசிகரான ஒரு பாகவதர் சொன்னது:

இராமன் கிழித்த கோட்டைத்தாண்டிய சீதையை—
''பௌண்டரி சீதை'' என அழைத்தால் என்ன?''

- கே. எம். இளங்கோ



விடுகிறது. இதில் தேவையற்ற ஆபத்து, தேவையுள்ள ஆபத்து என இனம் பிரிப்பது எங்ஙனம்? இப்போது எனக்கு ஏற்பட்ட சிறிய ஆபத்தின் பின் விளைவாகச் சில பெரிய நன்மைகளும் ஏற்படப் போகின்றன. அவற்றை நீங்கள் உரிய நேரத்தில் அறிவீர்கள். அமைதியாகச் சென்று வாருங்கள்'' என்றான். ''வீரவேல்!''என்று அவன் அடியெடுத்துக்கொடுக்க ''வெற்றி வேல்!'' என்று மக்கள் முழங்கிவிட்டுத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி, கூட்டம் கூட்டமாய்க் கலைந்தனர்.

மன்னர் மகனை ஏறிட்டு நோக்கினார். 'சிறிய ஆபத்திலிருந்து பெரிய நன்மையா? என்ன சொல்கிறாய் நீ?' என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை. தொடர்ந்து தாங்கள் தனித்து விடப்படுவதை விரும்புவதாய் உணர்ந்த அவர் கரம் அசைக்க, குறிப்பறிந்து அனைவரும் விலகினர். ஆகவமல்லன் மட்டும் உரிமையோடு அகலாதிருக்க, விஜயாலயன், ''ஆகவமல்லா! வீதியில் பெரும் கூட்டம் எங்களைச் சூழ்ந்தபோது சினனை அவர்களிடையே விட்டு வந்தேன். அவன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தானா, கவனி'' என்றான்.

ஒற்றர் தலைவனின் முகம் சட்டென்று கோணியது. அடுத்த கணமே அவன் தன்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டு குனிந்து வணக்கம் தெரிவித்துப் பிரிந்தான். காற்றுட ஓர் ஆசனத்தில் அமர்ந்த குமாராங்குசன், ''மகனே! ஆகவமல்லனை அன்று நீ அவமானப்படுத்தியிருக்கக் கூடாது! அவனை உதைத்து நீ செய் குளத்தில் தள்ளியது பற்றி அரண்மனையில் குற்றேவல் புரிவோர் கூட ரகசியமாய்ச் சிரித்ததாக எனக்குத் தெரிய வருகிறது. விஜயாலயா! யாரைப் பகைத்தாலும் ஒற்றர் தலைவனைப் பகைக்கலாமா? அன்று நீ அவனுடைய மர்மப் பகுதியில் உதைத்ததால் வலியால் துடித்து வைத்திய உதவியையும் அவன் நாட வேண்டியிருந்ததாய் அறிகிறேன்'' என்றார்.

''தவறுதான் தந்தையே! உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன்'' என்று ஒப்புக்கொண்ட விஜயாலயன், தனக்குக் கானகத்தில் நேர்ந்த விசித்திர அனுபவங்களையெல்லாம் விவரமாகக் கூறி முடித்தான்.

''மகனே! எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பி வந்திருக்கிறாய்! இதையா சற்றுமுன் சிறிய ஆபத்து என்று சொன்னாய்?'' என்று கேட்ட குமாராங்குசன், மைந்தனிடமிருந்து பதில் ஏதும் வராதது கண்டு, ''நல்லது, ஓர் இளவல் தன் மக்களிடம் எப்படிப் பேசவேண்டுமோ அப்படிப் பேசினாய்! இருக்கட்டும், பெரிய நன்மை என்றாயே அது என்ன?'' என்று கேட்டார்.

காட்டில் தான் சந்தித்த மக்களின் அபார சக்திகளை விவரித்தான் விஜயாலயன். பச்சிலைகள், மூலிகைகளைப் பயன்படுத்தும் மருத்துவத் திறன், உணர்ச்சி மிக்க நாட்டிய நாடகங்களை நடத்தும் கலை ஆற்றல், ஏதோ மந்திர மாயம் போல் காட்டு மிருகங்களை—குறிப்பாக ஓநாய்களை அவர்கள் பழக்கியிருக்கும் அதிசயம் அனைத்தையும் சாங்கோபாங்கமாகஎடுத்துரைத்தான். முடிவாக,''தந்தையே!எனக்கு ஏற்பட்ட காயங்கள் நாலே நாட்களில் எப்படி ஆறிவிட்டன பாருங்கள்! மரணத்தின் விளிம்புக்கே சென்றிருந்த நான் இதற்குள் பழைய பலத்தை முழுமையாகத் திரும்பப் பெற்று விட்டது ஆச்சரியமில்லையா? தந்தையே! காட்டிலே வசிக்கும் அவர்களை நாட்டுக்குத் தருவிக்க அனுமதி வழங்குங்கள்'' என்றான்.

''தருவித்து என்ன செய்யப் போகிறாய் விஜயாலயா?''

''தந்தையே! வீர உணர்ச்சி மன்னருக்கும் அவரது படையினருக்கும் மட்டும்ஏற்பட்டால் போதாது. குடிமக்கள் அனைவரும் சுதந்திர தாகமும் வீர எழுச்சியும் பெற்றால்தான் நமது லட்சியங்கள் ஈடேறும். ஆனால் சோழ மக்களோ எழுநூறு ஆண்டுகளாக அடிமை வாழ்வுக்குப்பழகிப் போய் விட்டிருக்கிறார்கள். 'ஏதோ காஞ்சிக்குத் திரை செலுத்துகிறோமே

கண் டாக்டர்: கண்ணாடி போட்டுட்டேன். இதைப் படியுங்க பார்க்கலாம்!

நோயாளி: சுவரிலே பிரேம் போட்டு மாட்டியிருக்கிறீங்களே சர்டிபிகேட், அதையே எடுங்க படிச்சுப் பார்க்கறேன். இப்ப போலி டாக்டருங்க அதிகமாயிட்டாங்கன்னு பேப்பர்லே அடிக்கடி செய்தி வருது!

—கே. ஆர். எம்.



தவிர மற்றபடி சுதந்திரமாகத்தானே உலவுகிறோம்' என்று எண்ணுகிறார்கள். 'வீரவேல்! வெற்றி வேல!' என்று அவர்கள் முழங்குவது கூட என்மீதுள்ள அன்பினால் தானே அன்றி மெய்யான வீர உணர்ச்சியோடு அல்லவே!''

''ஏற்கத் தக்க கருத்துத்தான், மைந்தா! இந்நிலையை மாற்ற வழி?''

''நிசும்ப சூதனியின் பெரியபெரிய சிலைகளை நாடெங்கும் ஆங்காங்கே நிறுவுவோம். அவற்றின் அருகிலேயே அரங்கங்களைஅமைப்போம். குவளையின் உதவியோடு பல நாட்டியக் குழுக்களை உருவாக்கி, மகிஷாசுரர்களை பராசக்தி வதம் செய்த கதையையும், தேவாசுரப் போரில் முருகப் பெருமான் சூர பதுமனை வென்ற கதையையும் இன்னும் பல தெய்வீக வீர தீரக் கதைகளையும் நாட்டிய நாடகங்களாக நடத்தி மக்களுக்கு வீர உணர்ச்சி ஊட்டுவோம்.... மேலும்....''

''மேலும்?''

''நமது ஆதுரசாலைகளில் உள்ள வைத்தியர்களுக்கு இவர்களிடமுள்ள மூலிகைகளின் ரகசியங்களை எடுத்துச் சொல்லி அவற்றைப் பயன்படுத்தி அனுபவம் பெறச் செய்வோம். போர் என்று வந்தால் எத்தனை வீரர்கள் காயம்பட்டுக்கொள்வார்கள்; மரணத்துடன் போராடுவார்கள்!''

''ஆகக் கூடி நாம் போர்க் களம் காண்பது உறுதி என்கிறாய்!''

''அதில் சந்தேகமென்ன தந்தையே!உங்கள் அனுமதி பெற்று நான் சோழ குலத்தை அவமதித்த முத்தரையரைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறேன்! முதற் படியாக அவர்களுடைய கலை வளமும் செல்வ வளமும் மிக்க நகரான தஞ்சாவூரைக் கைப்பற்றப் போகிறேன். மான் மீது பாயும் வேங்கையென நமது வீரர் படை தஞ்சையைத் தாக்கும்!''

''மகனே! இந்தப் பேராபத்தான யோசனையை உன் மனத்தில் விதைத்தது யார்?''

''விதைத்தது உத்தமசீலியின் செருக்கு; விதைக்கு நீரிட்டு வளர்த்தது குவளையின் கருத்து!''

''குவளை!... ஒரு நாடோடிக் குறமகள் கூறியதைக் கேட்டு....''

''இவ்வளவு பெரிய பையன் ஏதேதோ கிறுக்கிக்கிட்டு இருக்கானே?''

''டாக்டருக்குப் படிச்சிருக்கான் இல்லே, அதான் மருந்துச் சீட்டு எழுதப் பழகிக்கிறான்!''

—சி.பி. ஜெயன்



''தந்தையே!எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு! — குறளை எனக்குப் போதித்தவர் தாங்கள்தானே !''

''உண்மைதான்.ஆனால் உன் அறிவு மெய்ப் பொருளைக் கண்டிருக்கிறதா என்பதில்தான் எனக்குச் சந்தேகம்!... மைந்தா! இதற்கு ஒளிவு மறைவு இன்றிப் பதில் சொல்லு.... இந்தப் பெண் குவளை... அவளைக் 'கட்டழகி' என்றும், 'கருநிற அழகி' என்றும் வர்ணித்தாய்; 'மாயத்தில் வல்லவள்' என்றும் சொன்னாய்! அவளை நீ காதலிக்கிறாயா?''

விஜயாலயன் உடனே பதில் கூறாது சற்றுத் தயங்கினான். ''மகனே! ஏன் மௌனம்?'' என்றார் குமாராங்குசன். ''ஒரு தந்தை தன் மகனிடம் கேட்கக் கூடாத எதையும் நான் கேட்டுவிட வில்லையே. கேட்க வேண்டியதைத்தானே கேட்கிறேன்! எனக்கு உண்மை தெரிய வேண்டும்.''

விஜயாலயன் மேலும் சற்றுத் தலை குனிந்து நிதானித்துவிட்டு நிமிர்ந்து தந்தையை நோக்காமலேயே, ''இல்லை!'' என்றான்.


''அப்படியானால் அந்த உத்தமசீலிதான்...''


''ஆம், தந்தையே! உத்தமசீலிதான் என் கனவிலும் நினைவிலும் இடைவிடாது தோன்றி என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறாள். அவள் என்னை மறுத்ததில் என் கோபம் வளர்ந்து கொண்டே போகிற வேகத்தில் அவளிடம் என் காதலும் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது. என் உள்ளத்தைச் சதா தகித்துக்கொண்டிருப்பது கோபாக்னியா அல்லது காதல் தீயா என்று—புரியாமல் நான் தடுமாறுகிறேன்! தந்தையே! ஒரு தோழனின் நிலையில் உங்களை வைத்துச் சொல்கிறேன், அவளை நான் எப்படியாவது அடைந்தே தீரவேண்டும்!''

''விஜயாலயா! வைரம் பாய்ந்த உன் நெஞ்சிலேயும் கோமளமான பகுதிஒன்றிருப்பதைப் புரிந்து கொண்டேன். அந்த மென்மைப் பகுதியை மேலும் சற்றுக் கீறிப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நான் ஆளாகியிருக்கிறேன். என்னை மன்னித்துவிடு!'' என்ற குமாராங்குசன், மறுத்துப் பேச வாயெடுத்த மகனைச் சைகையாலேயே அமைதி காக்கப் பணித்துவிட்டு மேலும் தொடர்ந்து கேட்டார்: ''இந்தக் குவளை என்ற பெண்ணை நீ காதலிக்கவில்லை என்கிறாய். ஆனால் ஒரு வார காலம் அவளுடன் நெருங்கிப் பழகியும் இருக்கிறாய்... உன் மனம் அவளிடம் கவரப் படவில்லையா?''

ஏதோ ஓர் உள்நோக்குடன்தான் மன்னர் கேள்விகளை அடுக்குகிறார் என்று உணர்ந்த இளவல் வெட்கத்தை ஒதுக்கிவிட்டு, கரகரத்த குரலில் ''மெய்தான் தந்தையே'' என்றான்.

''அப்படியானால் இதற்கும் பதில் சொல்லு! உன் விருப்பத்தை அவளுக்குநீ தெரியப்படுத்தியபோது அவள் எவ்விதம் நடந்து கொண்டாள்? கோபப்பட்டுச் சீறினாளா? அல்லது மகிழ்ச்சியோடு இணங்கினாளா?'' இப்படிக் கேட்டுவிட்டு விஜயாலயனின் முகத்தை உன்னிப்பாய் நோக்கினார் மன்னர். (தொடரும்)


தொகுப்பு:
1
2



எவ்வளவு தெரியும்?

கோவிலைப் பற்றி

1. புகழ்பெற்ற சூரியன் கோவில் எங்கே உள்ளது?
(அ) ஹளேபேடு (ஆ) ஹம்பி (இ) கோணார்க் (ஈ) சாரநாத்

2. ஒரு கோயிலின் ராஜ கோபுரம் இடிவிழுந்து பிளவுண்ட நிலையிலேயே இன்னமும் உள்ளது. அது எங்கே?
(அ) அழகர் கோயில் (ஆ) தென்காசி (இ) திருக்கோவலூர் (ஈ) கும்பகோணம்.

3. ஒரு வெள்ளைக்காரக் கலெக்டரின் பிரார்த்தனைக்கு இரங்கிய கடவுள் மழை வெள்ளம் காரணமாய் ஏரி உடையாமல் ஊரைக் காப்பாற்றினார் என்று நம்புகிறார்கள். அந்த ஊர் எது?
(அ) மாயூரம் (ஆ) திருவரங்கம் (இ) மதுராந்தகம் (ஈ) திருவிடைமருதூர்.

4. மூகாம்பிகை கோவில் தமிழகத்தில் எங்கே உள்ளது?
(அ) திருச்செந்தூர் (ஆ) திரு ஆனைக்கா (இ) திரு இடை மருதூர் (ஈ) காஞ்சிபுரம்.

5. மிக நீண்ட பிராகாரங்களை உடைய கோவில் என்ற புகழைப் பெறுவது எது?
(அ) மதுரை (ஆ) இராமேசுவரம் (இ) தஞ்சாவூர் (ஈ) மன்னார்குடி

6. ''நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும்'' என்று குடும்பத்தின் உடைமையை வெல்லாம் வாரிக் கொடுத்து உருவாக்கினான் ஒருமன்னன், அதுதான்,

⌘ அண்மையில் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் கண்ட சைதை அருள்மிகு காரணீஸ்வரர் கோவில்

(அ) தஞ்சைப்பெரியகோயில்(ஆ)காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோவில் (இ) மதுரை மீனாட்சி கோவில் (ஈ) திருவானைக் கோயில்.

7. குடவோலை முறை மூலம் தேர்தலுக்கு நிற்பவர்களைத் தேர்வு செய்யும் பழக்கம் பற்றிய கல்வெட்டு எந்தக் கோவிலில் உள்ளது?
(அ) காஞ்சி கைலாசநாதர் கோயில் (ஆ) உத்திரமேரூர் (இ) திருச்செந்தூர் (ஈ) திருவரங்கம் பெரிய கோவில்

8. இந்த நான்கு கோவில்களுள் ஒன்று தான் மலையைக் குடைந்து உருவாக்கப் பட்ட 'குடைவரை'க் கோயில். அது எது?
(அ) மதுரை (ஆ) ஸ்ரீபெரும்புதூர் (இ) திருக்கோகர்ணம் (ஈ) சீர்காழி.

9. மிகவும் பெரிய தேர் ஆண்டு தோறும் எந்த ஊரில் ஓடுகிறது?
(அ)திருவாரூர் (ஆ) திருப்பதி (இ) காசி (ஈ) பூரி

10. புகழ் பெற்ற தஞ்சாவூர் நந்தியின் எடை எவ்வளவு தெரியுமா?
(அ) 10 டன் (ஆ) 25 டன் (இ) 50 டன் (ஈ) 40 டன்.

—அமைப்பு: 'யெஸ்பால்'

விடைகள்:

1. இ. கோணார்க்
2. ஆ. தென்காசிக் கோவில்
3. இ. மதுராந்தகம். ஏரி காத்த ராமன்என்றேஅந்தக் கடவுளைக் குறிப்பிடுவர்.
4. இ. திருவிடைமருதூர்.
5. ஆ. இராமேசுவரம். பிராகாரத்தின் ஒவ்வொரு பக்கமும் சுமார் நானூறு அடி நீளம்.
6. அ. தஞ்சைப் பெரிய கோவிலைத்தான் இப்படி உருவாக்கினான் இராஜராஜன்.
7. ஆ. உத்திரமேரூர்.
8. இ. திருக்கோகர்ணம். (புதுக்கோட்டை நகரில் உள்ள மகேந்திர பல்லவன் காலக் கோவில்)
9. ஈ. பூரி. ஒரிசாவில் உள்ள பூரி ஜகந்நாதர் தேரின் சக்கரங்களில் பக்தர்கள் விழுந்து பலி கொடுத்துக்கொள்வார்கள் என்று கூறுவார்கள்.
10. ஆ. 25 டன்.

10ம் சரியானால் அற்புதம். 6 முதல் 9 வரை அருமை. 3 முதல் 5 வரை மகிழ்ச்சி. அதற்கும் கீழே சோகம்.

ஊருக்கு ஒரு பிள்ளை



வக்கீல் வாத்தியாரான கதை.

காதலி 'டு' விட்ட காரணத்துக்காகக் கறுப்புக் கோட்டைக் கழற்றி வீசிவிட்டுப்பிரம்பைக் கையில் பிடிக்கிறார் சிவா. அதற்கு அப்புறம் காதல் விவகாரம் ஊர் விவகாரமாக மாறி அந்தப் பள்ளிக்கூடத்துக்கே உலை வைக்கிறது. ஊரை ஏய்க்கும் மூன்று பெருச்சாளிகளைப் போலீஸார் விட்டு வைக்கிற ரோஷத்தில் மீண்டும் கறுப்புக் கோட்டை மாட்டிக் கொண்டு கோர்ட்டுக்குப் போய்க் குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுக்கிறார் சிவா.

'சப்'பென்று போகிறது கதை.

சிவாஜி கணேசனின் நடிப்புக்கு ஈடு கொடுக்கும் கதாபாத்திரமாக அது அமையாத காரணத்தால் அவரும் உற்சாகமாக நடிக்கவில்லை.

காதலி ஸ்ரீப்ரியா; மனைவி கே.ஆர்.விஜயா.

தனக்காகத் தன் காதலை விட்டுக்கொடுத்திருக்கிறாள் என்பதற்காக வீடு தேடி வந்த கல்யாணியை உபசரித்து அழைத்துச் சென்று தன் வீட்டிலேயே தங்கச் செய்கிறாளாம் பார்வதி. காதிலே பூ.

நம்பியார் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்து மாணவர்கள் முன்னிலையில் அவள் கையைப் பிடித்து இழுப்பதும் அந்தச் சமயம் பார்த்து ஹீரோ வந்து ஒரு பையன் கையில் பிரம்பைக் கொடுத்து வில்லனை விளாசச் சொல்வதும் அப்புறம் அத்தனை மாணவர்களும் சேர்ந்துகொண்டு ஸ்டண்ட் அடிப்பதும் நல்ல ஜோக். ஒரு வக்கீலுக்குத் தோன்றுகிற ஐடியாவா இது:

தேவையற்ற பிளாஷ்பேக் காட்சிகள் பொறுமையைச் சோதிக்கின்றன.

யோகானந்த் போன்ற பழம் பெரும் டைரக்டர்கள் தங்களது திறமையில் புதிய ரசனையைக் கலந்துகொள்ள முயன்றால், இதுபோன்ற படங்களைத் தவிர்க்கலாம்.

கல்யாண காலம்

ஒரு நாள் கூத்துக்கு மீசையை என்னவோ செய்து கொண்டதாகச் சொல்லுவார்கள். ராபர்ட் ராஜசேகரன் 'கல்யாண காலம்' படத்தைப் பார்க்கும்போது அந்த ஞாபகம் தான் வருகிறது.

பொழுது விடிந்தது முதல் இரவு வரை ஒரு கதை. வெரி குட் ஐடியா. அதை விரிவு படுத்தும்போது அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளால் படம் பார்ப்பவர்களைப் பிரமிக்கவைக்க வேண்டாமா?

மின் விசிறியை மாறி மாறி ஆஃப் செய்து படுத்துத் தூங்கும் காட்சியிலும் சரி, பசு மாட்டில் பால் கறக்கும் காட்சியிலும் சரி பச்சைத் தண்ணீரில் குளிக்கப் பயப்படுபவளைக் குளிக்க வைப்பதிலும் சரி, தோழியைக் கிண்டல் பண்ணுவதிலும் சரி என்ன சுவாரஸ்யத்தைக் காட்டி யிருக்கிறார்கள்?

அவர்களே ஜோக் அடித்துக் கொண்டு அவர்களே சிரித்துக் கொண்டால் போதுமா?

இந்தப் படத்தின் உண்மையான பாலைவனச் சோலை சுகாசினிதான். அவர் மட்டும் படத்தில் இல்லையென்றால்...

நினைத்தாலே பயமாக இருக்கிறது.

பாராட்டலாம் – இந்தப் படத்தின் நீளத்தைக் குறைத்த ஒரே ஒரு காரணத்துக்காக.





இவர் ஒரு 'மாதிரி'

பாக்கியராஜின் புதிய அறிமுகம்: கலக்ஷணு. 'தூறல் நின்னுபோச்சு' படத்தில் நாயகியாக நடிக்கிறார். இவரிடம் காணப்படும் விசேஷ அம்சம் என்ன?

பாக்கியராஜ் சொன்னார்:

''கலக்ஷணு பல நடிகைகளின் சாயலைப் பெற்றிருக்கிறார். ஜெயப்பிரதா மாதிரியும் இருக்கிறார், சில கோணங்களில் சந்திரகலா ரோஜா ரமணி மாதிரியும் இருக்கிறார். யாரை நினைத்துக் கொண்டாலும் அவர் மாதிரியே தோற்றமளிக்கிறார். பொதுவாக கே.ஆர் விஜயா மாதிரியோ, சரிதா மாதிரியோ வேறு நடிகைகள் இருப்பதில்லை. இன்னொரு ஆச்சரியம், நேரில் பார்க்கும்போது மட்டும் இவர் யார் மாதிரியும் இல்லை. காமிராவுக்கு மட்டுமே அப்படித் தோன்றுகிறார்.''

மீனே மீனே 'மேன'ம்மா...

'கேரளாவுக்கே குடி போய் விட்டாரோ' என்று சந்தேகப்படுகிற அளவுக்கு மலையாளப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் மேனகாவைச் சேர்ந்த மாதிரி பத்து நாட்கள் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் பார்க்க நேர்ந்தது. 'பொன்னும் பூவும்' என்கிற மலையாளப் படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.

நான் உள்ளே நுழைந்தபோது கையில் ஒரு கொத்து மீன்களைத் தூக்கிப் பிடித்தவாறே தட்டாமாலை சுற்றிக் கொண்டிருந்த பகதூருக்கு முன்னால் முகத்தை அருவருப்போடு வைத்துக் கொண்டு நின்றிருந்தார்.

காட்சி முடிந்தும் கூட அவர் முகம் மட்டும் மாறவில்லை. புடவை முந்தானையால் உதட்டைத் துடைத்தவாறே என்னை நோக்கி வந்தவர், ''மீனிலிருந்து வடிந்த ஒரு சொட்டுத் தண்ணீர் உதட்டில் விழுந்து விட்டது! குமட்டிக்கொண்டு வருகிறது'' என்றார் அருவருப்போடு!

''நடிக்க வந்த பிறகு அசைவத்தைக் கண்டு அருவருப்படைந்தால் எப்படி? அதைச் சாப்பிடுவது போலவோ தொடுவது போலவோ காட்சி படத்தில் அமைந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டேன்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்! எனது முதல் மலையாளப் படமான 'ஓபோலி'ல் பன்றிக் கறி சாப்பிடுவது போல ஒரு காட்சி வந்தது. அசைவத்தைக் கையால் தொட மறுத்து விட்டேன். கடைசியில் சேனைக் கிழங்கைக் கறுப்பாகத் தீயும்படி பொரித்து அதை ஸ்பூனில் எடுத்துச் சாப்பிடுவது போலக் காட்சியை அமைத்தார்கள்.

''இன்னொரு மலையாளப்படத்தில் வாத்தை நறுக்கவேண்டும். அந்தக் காட்சியை மாற்றிப் படத்தில் வரும் என் அம்மாவை நறுக்கச் சொல்லி நான் தட்டத்தில் ஏந்திக் கொண்டு போய் என் அப்பாவிடம் நீட்டுவது போல் நடித்தேன்.

'சாவித்திரி' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது உதவி காமராமேன் ஒருவர் என்னை எப்படியும் அசைவம் சாப்பிட வைப்பதாக மற்றவர்களிடம் போட்டி போட்டிருக்கிறார். இது எனக்குத் தெரியாது.

'எதையோ கொண்டு வந்து வாயைத்திறக்கச் சொல்லி அடம் பிடித்தார். நானும் திறந்து விட்டேன். சப்பாத்தி மாதிரி ஒன்றை வாயில் போட்டுவிட்டார். நல்லவேளை! அவர் சிரித்ததிலிருந்து புரிந்து கொண்டு விட்டேன். உடனே அதைத் துப்பி விட்டேன். பிறகு தான் எனக்குத் தெரிந்தது அது ஏதோ அசைவப் பதார்த்தம் என்று.

''எனக்குக் கோபமே வராது. அன்றைக்கு வந்ததே கோபம்! 'எப்படி அதை வாயில்





போடலாம்?'' என்று கோபித்துக் கொள்ள, அவர் என்னைச் சமாதானப்படுத்தப் படாத பாடு பட்டுப் போய்விட்டார்.
''நான் இதுவரை சுத்த சைவம். இனியும் சைவமாகவே இருப்பேன். நடிக்கும்போது அட்ஜெஸ்ட் செய்து கொள்வேன்'' என்றார்.

யார் பிஸி? அம்பிகாவா ராதாவா?

அறிஞர் அண்ணா வீட்டுக்குப் பின் பகுதியில் குடியிருக்கும் ராதாவைப் பார்க்க முன் அறிவிப்பின்றிப் போயிருந்தேன். ராதா வீட்டில் இல்லை. அவரது தாயார் டைரியைப் புரட்டிப் பார்த்தபடி ஒரு மலையாளக் கம்பெனிக்கு அக்டோபர் மாதத்துக்குக் கால் ஷீட் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''ராதா கால்ஷீட் அக்டோபர் வரை கொடுத்தாகி விட்டதா?'' என்றேன்.

''இல்லை. இது அம்பிகாவின் கால்ஷீட். அவள் மலையாளத்தில் ரொம்ப பிஸி. ராதாவின் கால்ஷீட் விவகாரங்களை சித்ரா லட்சுமணன் கவனித்துக் கொள்கிறார். அவர் மாதிரி ஒரு ஜெண்டில்மேனை நான் பார்த்த தில்லை. என் மகன் மாதிரி'' என்றார்.

எனக்கு இரண்டு ஆச்சரியம். ஒரு நடிகையின் கால்ஷீட் விவகாரங்களை ஒரு பத்திரிகையாளர் கவனித்துக் கொள்வது இதுவே முதல் முறை. இரண்டாவது ஆச்சரியம் அவரை அந்த அம்மையார் பாராட்டிப் பேசிய விதம்.

''சொந்த வீடு வாங்கப் போகிறீர்களாமே?'' என்றேன்.

வீடு வாங்கும் நிலையிலா இருக்கிறோம்? அம்பிகா 67 படங்களில் இதுவரை நடித்து முடித்திருக்கிறாள். அவளே வாங்கவில்லை. ராதா வீடு வாங்க இன்னும் இரண்டு வருஷமாவது ஆகும்'' என்று கூறிவிட்டு ''அவளை அறிமுகப்படுத்தியவர் பவுன் மாதிரி! அது அவள் அதிர்ஷ்டம்தான்'' என்று பாரதிராஜாவை நெஞ்சாரப் புகழ்ந்து முடித்தார். கெட்டிக்கார அம்மா!

தொப்பி தி கிரேட்

'நெஞ்சில் ஒரு ராகம்' படத்தில் நடித்துக் கொண்டிருந்த 'அலைகள் ஓய்வதில்லை' தியாகராஜனை வீனஸ் ஸ்டுடியோவில் சந்தித்தேன். 'லஞ்ச்' நேரத்தில் மரத்தடியில் நின்றவாறே ஜாம் தடவிய ரொட்டியைச் சுவைத்துக் கொண்டிருந்தார்.

''சாப்பாடு சாப்பிடவில்லையா?'' என்றதும் அவர் சொன்ன பதில், நடிப்பில் அவருக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக இருந்தது.

''பிளேண்டாக நடிக்க வேண்டியிருக்கிறது. முகம் வாட்டமாக இருக்க வேண்டிய சோகக் காட்சி. அதனால் காலையில் பிரேக் ஃபாஸ்ட் கூடச் செய்யவில்லை'' என்றார் அவர்.

சமீபத்தில் தான் சிங்கப்பூர்-சென்று வந்ததாகச் சொன்னவர் அதற்கான காரணத்தையும் சொன்னார். ''இப்படத்திற்காக ஜிகினா வேலைப்பாடமைந்த துணி மணிகளும் தொப்பியும் வாங்கவே போனேன். நான் போயிருந்த சமயம் சைனீஸ் நியூ இயர் டே. கடைகள் எல்லாம் மூடியிருந்தன. நான் நினைத்தமாதிரி அனைத்தும் வாங்க முடியவில்லை. திரும்பி விட்டேன்'' என்றார்.

தொப்பி வாங்கச் சிங்கப்பூர் போனதென்றால் அது சாதாரண தொப்பியாகவா இருக்கும்?

தொப்பி தி கிரேட்!



நான் யார்?

- 'மந்திரி குமாரி' படத்திலே என்னைப் பற்றிய பாட்டு இடம் பெற்றுள்ளது.
- 'முருகனடிமை' படத்திலே கே. ஆர். விஜயா மகனைத் தூரத்தி யிருக்கிறேன் நான்.
- 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் ஒரு காட்சியில் வருகிறேன்.
- நான் இல்லாமல் 'சத்தியவான் சாவித்திரி' படத்தை எடுக்க முடியாது.
- 'புது வெள்ளம்' படத்திலே சிவகுமார் பாட நடிச்சிருக்கேன்.
- 'குடிசை' படத்தில் எனக்கு அந்தப் பக்கம் டெல்லி கணேஷ் இந்தப் பக்கம் குமாரி ராஜி.
- 'குடும்பம் ஒரு கதம்பம்' படத்திலே விசு என்னைப் பற்றி உயர்வாகப் பேசியிருக்கிறார்.
- ஏ. வி. ரமணன் என்மீது சவாரி செய்திருக்கிறார்.
- 'எமனுக்கு எமன்', 'நான் கண்ட சொர்க்கம்' படங்களிலே நான் இல்லாமல் இல்லை.
- டெல்லிக்கும் எனக்கும் ஒரு சம்பந்தம் உண்டு. இத்தனையும் சொல்லிவிட்டேன். – நான் யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

விடை: 62-ம் பக்கம்.




யாருடைய தங்கை இவர்?

பிரபல நடிகையின் சகோதரி இவர். பெயர் சுந்தரி. மகேந்திரனின் அழகிய கண்ணே' படத்தில் சுமலதாவுக்கு அத்தையாக நடிக்கிறார்.

முகத்தைப் பார்த்து இவர் யாருடைய தங்கை எனக் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்.

விடை: 62-ம் பக்கம்



- வம்பு தும்பில் மாட்டிக் கொள்ளாத நடிகர் சிவகுமார். அவரும் வம்பில் சிக்கினார்!

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில் மேடை ஏறிப் பேசிய இவர், ''இப்பொழுதெல்லாம் நடிகனுக வேண்டுமானால் அவன் பேச வேண்டியதில்லை, பாட வேண்டியதில்லை, அழகாக இருக்க வேண்டும் என்பதில்லை! இது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்தான்'' என்றார்.

''யாரோ ஒரு நடிகரை மனத்தில் வைத்துக்கொண்டு பேசியதாகச் சிலர் கதை கட்டி விட்டார்கள்'' என்கிறார் சிவகுமார்.

அப்படியானால் அவர் பேசியதற்கு விளக்கம்? அவரே சொன்னார்:

'பேசவேண்டியதில்லை' என்றால் டப்பிங் செய்துகொள்ளும் வசதிகள் இருக்கின்றன என்கிற அர்த்தம்.

'பாட வேண்டியதில்லை' என்றால் பின்னணியில் யாரோ பாடிவிடுகிறார்கள். அதற்கு உதட்டை அசைத்தால் போதும் என்று பொருள்.

'அழகாக இருக்க வேண்டியதில்லை' என்றால் எப்படிப்பட்டவர்களையும் அவர்களுடைய கதாபாத்திரத்தின் வாயிலாகவே ஜனங்கள் பார்த்து ரசிக்கத் தெரிந்து கொண்டு விட்டார்கள் என்று அர்த்தம்!''

ஒரு புரொபஸர் அர்ச்சகராகிறார்!





திருப்பதியில் அதிகாலை நான்கு மணி· நம் தேசத்துக்கு விருந்தினராக வந்திருந்த புத்த மதத் தலைவர் ஒருவரை அரசாங்க ஆணைப்படி கோயிலுக்கு அழைத்துச் சென்றேன்.

அங்கு சஹஸ்ரார்ச்சனை செய்து கொண்டிருந்த அர்ச்சகர் இளம் வயதினராக இருந்தார். நல்ல மதுரமான உச்சரிப்பு. முகத்தில் தெய்வீகக் களை சொட்டியது. தரிசனம் முடிந்து, என்னுடன் வெளிவந்த தலைவர்,

''இந்தியாவின் ஸம்ஸ்கிருத கலாசாரத்தின் பிம்பமாக அர்ச்சகர் விளங்குகிறார். ஆங்கிலப் படிப்பு இல்லாதது முகத்தில் எவ்வளவு களையைக் கொடுக்கிறது'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

அந்த அர்ச்சகர் யாரென்று மத்தியானம் விசாரித்தேன். அவர் கெமிஸ்ட்ரியில் பி.ஹெச்.டி.யாம். Salt structureல் பெரிய ஆராய்ச்சி நடத்தியிருப்பதாகவும், கெமிஸ்ட்ரி ப்ரொஃபஸராக இருப்பதாகவும், மேல் ஆராய்ச்சிக்காக அமெரிக்கா போக இருந்தபொழுது இந்த அர்ச்சகர் வாய்ப்பு ஏற்பட, பட்டம் பதவிகளைத் துறந்து விட்டு இங்கு வந்து விட்டதாகவும் அறிந்தேன்.

டாக்டர் வேங்கடரமணன் பி.ஹெச்.டி., ரமண தீக்ஷிதராக மாறிவிட்டார்! இது எப்படி ஆயிற்று?

திருமலைக் கோயிலில் அர்ச்சக மிராசி, நான்கு வைஷ்ணவ குடும்பங்களுக்கும் அவைகளின் கிளைகளுக்கும் இருக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு வருடம் மிராசி அனுபவிக்கலாம். இதற்கு ''வந்து'' (Venthu) என்று பெயர்.

ரமண தீக்ஷிதர் சொன்னார்: ''அமெரிக்கா செல்ல நான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது இந்த ''வந்து'' என்னுடைய தகப்பனார் சிற்றப்பா முதலியவர்கள் போய் விட்டபடியால் எனக்கு வந்தது. அன்றிரவு மனம் நிலைகொள்ளவில்லை. ''ரமணா, பத்துத் தலைமுறையாக வரும் பெருமாளைத் தொட்டு அபிஷேகம் செய்விக்கும் பாக்கியத்தைக் கேவலம் லௌகிக உயர்வுக்காக விட்டு விடப் போகிறாயா'' என்று மனம் கேட்டது.

''தியாகய்யர் பட்ட ''நிதி சால ஸுகமா'' குழப்பமே இது. காலையில் குழப்பம் தீர்ந்தது. நேரே சலூனுக்குப் போய்த் தலையில் குடுமி வைத்துக் கொண்டேன். பெருமாளுக்குச் சேவகனானேன்.'' பரவசத்தோடு சொன்னார்.

ஒரே ''மாடர்ன்'' ஆக இருந்த அவர் மனைவி இப்போது அசல் வைஷ்ணவ கொசவாம் கட்டுடன் இரண்டு மூக்கு களிலும் மூக்குத்தி போட்டுக் கொண்டு அசல் மகாலட்சுமியாக மாறி விட்டார். ''அவருக்குச் சேவை செய்வது என் கடமை. அவர் சந்தோஷமாக இருந்தால் எனக்குப் போதும்'' என்கிறார் அந்தப் பெண்மணி.

—என். ரமேசன், ஐ.ஏ.எஸ்.

இந்த ரசமான சிறு கட்டுரையை எழுதிய என். ரமேசன், ஆந்திர மாநில அரசில் மிக உயர்ந்த பதவிகளை வகித்தவர். அண்மையில் காலமாகி விட்ட இவரது ஆராய்ச்சிகளும் புலமையும் காலங்கடந்து நிற்பவை.



◉ நமது முதல்வரைக் கொலை செய்ய முயன்றதாக ஒரு நபர் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. முதல்வருக்குப் பாதுகாப்பு அதிகமாகி யிருக்கிறது. முதல்வருக்கே இப்படி என்றால், நாட்டின் பிரதமருக்கு? 'சண்டே'யில் குல்தீப் நய்யார் எழுதியிருப்பதிலிருந்து....

டெல்லியில் பிரதமர் இருக்கும்போது அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பாதுகாப்புச் செலவு ஒரு மணி நேரத்துக்குப் பதினைந்தாயிரம் ரூபாய். சுற்றுப் பிரயாணம் சென்றால் இந்தத் தொகை அதிகமாகும். சமீபத்தில் பிரதமர் டெல்லியில் நடந்த இந்தியா — இங்கிலாந்து கிரிக்கெட் போட்டியைக் காணச் சென்ற போது பார்வையாளர்களிடையே 500 ரகசியப் போலீஸார் சாதாரண உடையில் இருந்தார்கள். போட்டி நடக்கும் மைதானத்துக்குச் செல்லும் வழியில் ஆயுதம் தாங்கிய போலீஸார் நிறுத்தப்பட்டனர். வழியில் உள்ள உயர்ந்த கட்டிடங்களின் மாடங்களில் கையில் துப்பாக்கியுடன் போலீஸார் இருந்தார்கள்.

பிரதமரைப் பார்க்க வருவோர் சட்டை அல்லது பாண்ட் பைகளில் தடியாக ஏதாவது இருப்பது தெரிந்தால் அவர் உடனே சோதனையிடப்படுகிறார்!

பிரதமரின் பாதுகாப்புப் பணிகளை இன்னும் திறமையாகக் கவனிப்பதற்குப் பயிற்சி பெற ரகசியப் போலீஸார் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட இருக்கிறார்கள்.



இந்திரா காந்தி

◉ **'தீம்தரிகிட'** - இந்தப்பெயரில் ஒரு மாதமிருமுறை இதழ் விரைவில் வெளிவர இருக்கிறது. ஆசிரியர் ஞாநி. பரீட்சார்த்தமான நாடகங்களை நடத்தும் அதே பரிக்ஷா ஞாநிதான்.

நியாயம் என்று மனத்தில் பட்டதைத் தைரியமாகச் சொல்லுமாம் ''தீம் தரிகிட''. முதல் காரியமாக கார்ப்பரேஷன் மீது வழக்குப் போட்டிருக்கிறார் ஞாநி. காரணம்? ''அரசியல் போஸ்டர்களுக்கு வரி கிடையாது. ஆனால் பத்திரிகை போஸ்டர்களுக்கு உண்டு. இந்த முனிசிபல் சட்டத்தில் பல ஓட்டைகள் இருக்கின்றன'' என்கிறார் ஞாநி.

-தில்லப்பா



ஞாநி

◉ சமீபத்தில் இலங்கையிலிருந்து சென்னைவந்திருந்தார் திருமதி கார்த்திகா கணேஷ். பரத நாட்டியத்தை வழுவூராரிடம் முறையாகக் கற்றவர்; இலங்கையில் குறிப்பிடத்தக்க நடனமணி; நடனத்தில் புதுமைகள் பல செய்த ஆடல் கலை வல்லுனர் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, இவருக்கு இன்னொரு சிறப்பும் இருக்கிறது.


'காலந்தோறும் நாட்டியக் கலை' என்ற ஆராய்ச்சி நூல் ஒன்றைத் தமிழில் எழுதியிருக்கிறார் இவர். இந்த வருடம் தமிழக அரசு இந்த நூலுக்கு முதற் பரிசு அளித்துப் பாராட்டியிருக்கிறது. (பாரி புத்தகப் பண்ணை சென்னை-5) பரிசைத் தமிழக முதல்வரிடமிருந்து நேரில் பெறச்சென்னை வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருநெல்வேலியில் பிறந்த கார்த்திகாவுக்கு 37 வயதாகிறது. பாரதியின் பாடல்கள் சிலவற்றை பாலே நடனப் பாணியில் இலங்கையில் வெற்றிகரமாக நடத்தியவர். கொழும்பு கலை வட்டம் இவருக்கு வழங்கியிருக்கும் பட்டம்: 'நாட்டிய கலாநிதி'.

தமது ராமாயண நாட்டிய நாடகத்தைப் பரத நாட்டிய அடிப்படையில் அமைத்திருந்தாலும், அதில் கிராமியப் பாணியையும் இணைத்தது இவரது புதுமை உணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

-சாருகேசி

கார்த்திகா கணேஷ்



விடை : நான்தான் எருமை



கே. ஆர். விஜயா



அஞ்சலியின் அதிசய சாதனை!

அட்டைப்படக் கட்டுரை:



ஓர் இமாலயச் சாதனை செய்திருப்பவர் குமாரி அஞ்சலி நாயர்!

சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.ஏ. முடித்துவிட்டு, தற்போது முதல் வருஷம் எம்.ஏ. படித்துக் கொண்டிருக்கிறார் இவர். சென்னைப் பல்கலைக் கழக பி.ஏ. தேர்வில் நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார். கடந்த முப்பதாண்டுகளில் யாரும் செய்யாத சாதனையை இவரால் எப்படிச் செய்ய முடிந்தது?

"என்னுடைய அம்மாவும் அப்பாவும் எனக்குக் கொடுத்திருந்த சுதந்திரம்தான். என்னை யாரும் படி படி என்று கட்டாயப் படுத்தியதில்லை. 'அஞ்சு என்ன சின்னக் குழந்தையா, அவளுக்குத் தெரியாதா என்ன?' என்பார்கள். அப்படிச் சொல்லும்போதே அவர்கள் என்மேல் ஒரு பொறுப்பையும் சுமத்திவிடுகிறார்கள் இல்லையா? அதனால்தான் இன்றைக்குப் பெருமைப்படும்படி பரிசுகள் வாங்க முடிந்தது. என்னைப் பல விதங்களிலும் ஊக்குவித்த என் டிபார்ட்மெண்ட் லெக்சரர்களையும் நான் மறக்க முடியாது..." என்று அழகாகச் சிரிக்கிறார் அஞ்சு.

இவருடைய தந்தை ரயில்வேயில் சீப் பிளானிங் ஆபீசர். ஊர் ஊராக மாறும் வேலை. இதனால் இவருடைய படிப்பு பாதிக்கப்பட்டதோ?

"கண்டிப்பாக இல்லை. என்னுடைய பொது அறிவுதான் வளர்ந்தது. நான் நிறைய ஊர்களைப் பார்த்தேன். நிறைய மனிதர்களோடு பழகினேன். வெறும் புத்தகத்தை மாத்திரம் நெட்டுருப் போட்டால் அதிலே என்ன திறமை இருக்கிறது? அது மட்டுமில்லை, இன்றைக்குப் பரீட்சை முறை கூட மாறியிருக்கிறது. முன்பு போல் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுவது என்பது இன்றைக்கு முடியாது. எவ்வளவு பக்கங்கள் எழுதியிருக்கிறார் என்பதை வைத்து மதிப்பெண்கள் வராது. இந்த செமஸ்டர் தேர்வு முறையின் விசேஷம் என்னவென்றால் 100 வார்த்தைகளில், 500 வார்த்தைகளில் பதில் தருக என்று அவர்களே வரையறுத்துவிடுகிறார்கள். எனவே கொஞ்சமாக எழுத வேண்டியதாக இருக்கிறது. நமக்கு எல்லா விஷயமும் தெரியும் என்பதுடன் அதை எப்படி 'பிரசண்ட்' செய்கிறோம் என்பதும் முக்கியமாகக் கருதப்படுகிறது. இதற்குப் பொது அறிவு ரொம்பவும் அவசியம். அதை நான் நிறையவே வளர்த்துக் கொண்டேன்."

அஞ்சு பொருளாதாரப் படிப்பை ஏன் தேர்ந்தெடுத்தார்?

"விரிவான எதிர்கால வாய்ப்புக்களைக் கருதித்தான். ஐ. ஏ. எஸ். போவதிலிருந்து பேங்க் கிளார்க் பரீட்சை எழுதுவது வரை எதற்கு வேண்டுமானாலும் முயற்சி செய்யலாமே?"

"அப்படியானால் ஐ.ஏ.எஸ். ஆக வேண்டும் என்பது உங்கள் விருப்பமா?"

"தெரியவில்லை. நான் இதைத்தான் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக எந்த விஷயத்திலுமே இல்லை. இந்தத் தங்கப் பதக்கங்களை நான் எதிர்பார்த்தது இல்லை. நான் கவனமாகப் படித்தேன்; கிடைத்தது. எந்தெந்தப் பதக்கம் எதெதற்காகக் கொடுக்கப்பட்டது என்பது கூட இன்னும் தெரியாது எனக்கு. மேனேஜ்மெண்ட் சைடில் பெண்கள் அதிகம் இல்லை. அதனால் எம். பி. ஏ. சேர்ந்து பெரிய நிர்வாகியாக வேண்டும் என்று நினைக்கிறேன்."

"எம். ஏ. படிக்கிறீர்களே விரிவுரையாளராகப் போகலாமே..."

"ஐயையோ ஆசிரியத் தொழிலே எனக்குப் பிடிக்காது. பெரியவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க எனக்குப் பொறுமை இல்லை. குழந்தைகளுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லித் தரலாம். எனக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை என்றால் பேசாமல் நர்சரி ஸ்கூல் டீச்சராக, சந்தோஷமாகக் காலத்தைக் கடத்திவிடுவேன்...."

அஞ்சுவின் வருங்காலக் கணவரைப் பற்றிக் கேட்டபோது வெட்கத்தால் முகம் சிவக்கவில்லை. மாறாகத் தீவிரம் அடைந்தது.


"ஒரு பெண்ணுடைய லட்சியமே கல்யாணம் செய்து கொள்வதுதான் என்று ஏற்படுத்தி வைத்திருக்கிறது நம்முடைய சமூகம். 'நீ பெண், அதனால் இதைச் செய்யக் கூடாது' என்று சொல்வதையெல்லாம் நான் வெறுக்கிறேன். என்னுடைய கருத்தைப் புரிந்து கொண்டு, என்னுடைய உணர்வுகளை மதிப்பவரைத்தான் நான் வாழ்க்கைத் துணைவராக நினைப்பேன்..."

முதல் வகுப்பு மாணவியாக மட்டுமல்லாமல், முதல் தரப் பெண்ணாகவும் இருக்கிறார் குமாரி அஞ்சலி நாயர். — மஞ்சுளா ரமேஷ்

வண்ணப்படம் : உத்ரா

“எம். ஜி. ஆர். அவர்கள் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராய் இருந்த சமயம். 1956--57ல் சங்க வெளியீடான 'நடிகன் குரல்' என்ற பத்திரிகையை சாதாரண செய்தி மடல் நிலையிலிருந்து 25,000 பிரதிகள் விற்பனைக்கு உயர்த்தும் பணியில் அப்பத்திரிகையின் பொறுப்பாசிரியர் எம். ஜி. ஆர்., சிறப்பாசிரியர் டி. கே. சண்முகம் ஆகியோருடன் இணைந்து பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிட்டியது.

பத்திரிகையில் வெளியிடும் ஒவ்வொரு எழுத்தையும் நன்கு கவனித்து வெளியிடுவார் திரு எம். ஜி. ஆர். 'எனது வாழ்வுப் பாதை' என்ற தலைப்பில் தம் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். அனைவரும் விரும்பிப் படித்த தொடர் அது. அந்தச் சமயத்தில் எனக்குச் சில கடிதங்கள் எழுதியுள்ளார். அந்தக் கடிதங்களில் 'பொக்கிஷம்' என்று




பொக்கிஷம்

நான் நினைப்பது இந்தக் கடிதத்தை. காரணம், இந்தக் கடிதத்தில் எம். ஜி. ஆர். நேர்த்தியாகச் செயல்கள் செய்யப்பட வேண்டும் என எதிர்பார்ப்பவர், கண்டிப்பானவர் என்றெல்லாம் வெளிப்படுகிறது.'' இப்படிச் சொல்லிவிட்டு தம் வீட்டு இரும்புப் பீரோவின் லாக்கரில் பத்திரப்படுத்திய இந்தக் கடிதத்தைத் தந்தார் புத்தனேரி சுப்பிரமணியம்.

கடிதத்துடன், அந்தச் சமயத்தில் கார் விபத்தில் மரணமடைந்த நடிகை எம். ஆர். சந்தான லட்சுமியைப் பற்றி நடிகன் குரலுக்கென எஸ். வி. சகஸ்ரநாமம் வி. வி. கணேசன், டி. கே. சண்முகம் ஆகியோரது குறிப்புக்களை இணைத்து அனுப்பியுள்ளதைப் பின் குறிப்பிலே சொல்கிறார் எம். ஜி. ஆர்.

பேட்டி: **சந்திரமௌலி**



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone : 431543)

Editor: K. Rajendran

Assistant Editor: P.S. Mani


நீங்களே கணக்கிட்டு பாருங்கள்!
ஒரு சாதாரண டிட்டர்ஜண்ட் சலவை கட்டியை விட எடையோ இரண்டு மடங்கு விலையோ சிலகாசுகள்தான் அதிகம்
300 கிராம் ரூ. 3.20
டோட்டல்
நீலடிட்டர்ஜண்ட் சலவை பார்
Total
BLUE DETERGENT BAR
சுலபமான சலவைக்கு 5 சிறிய பகுதிகள்
உண்மையான முதல் டிட்டர்ஜண்ட் பார்!
டோட்டல், நீல டிட்டர்ஜண்ட் சலவைக் கட்டியின் அதிக வெண்மையையும், சலவை பார் சோப்பின் சௌகரியத்தையும் கொடுக்கிறது.
சிக்கனமாக சலவை செய்ய இதை 5 சிறிய பகுதிகளாக்கி உபயோகிக்கலாம்.
எடையோ இரண்டு மடங்கு விலையோ சில காசுகள்தான் அதிகம்!
நீங்கள் 125 கிராம் எடையுள்ள சாதாரண டிட்டர்ஜண்ட் கட்டியை என்ன விலைக்கு வாங்குகிறீர்கள்?
300 கிராமின் விலை ரூ. 3.20 என்றால் 250 கிராம் டோட்டலின் விலை ரூ. 2.67 தான். அதாவது ஒரு சாதாரண சலவைக் கட்டியைவிட எடையோ இரண்டு மடங்கு, விலையோ சில காசுகள் தான் அதிகம்.
தமிழ் நாடு, பீஹார் மற்றும் ஆந்திர பிரதேஷ் மாநிலங்களில் மட்டும் கிடைக்கும்.
MCA-TDB-51-Tam
கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள் : மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

REGISTERED No. M. [illegible]
Registered as a Newspaper in Sri Lanka